www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com



# நீதித்துறையில் சாதிப் பிரதிநிதித்துவம் வேண்டும்



“சாதி ரீதியான பிரதிநிதித்துவம் நமது நீதித் துறையிலும் தேவை. ஒரு வழக்கில் வாதி, பிரதிவாதி என இருவரும் பார்ப்பனர்களாக இருந்தால், பார்ப்பன நீதிபதி நடுநிலையுடன் செயல்படுகிறார். ஆனால், பார்ப்பனருக்கும், பார்ப்பனர் அல்லாதவருக்கும் இடையில் ஒரு வழக்கு வரும் போது, அந்த நீதிபதி பார்ப்பனர்களின் பிரதிநிதியாகவே செயல்படுகிறார். பார்ப்பன நீதிபதிகள், நமது நீதித் துறையின் தரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி - நீதியின் மாண்பையே விபச்சாரம் செய்கின்றனர்.”

இந்த அவையில் நான், கிராமப் பஞ்சாயத்து மற்றும் அதற்கான அதிகார வரம்புகளைப் பற்றி என்னுடைய கருத்துகளைக் கூற விரும்புகிறேன். நம் பஞ்சாயத்து முறை, கிராம மக்களுக்கு அதிக அதிகாரம், பிரச்சனைகளுக்கு விரைவான தீர்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகக் கூறுகிறீர்கள்.

எல்லா கிராமப் பஞ்சாயத்துகளும் மாவட்ட ஆட்சியரின் நேரடி நிர்வாகத்திற்கு உட்பட்டது. பெரும்பாலான மாவட்ட ஆட்சியர்கள், கிராமங்களில் இந்துக்களும் முகம்மதியர்களும் மட்டுமே வசிப்பதாகக் கருதுகின்றனர். தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஓரினம் வாழ்வதையே அடியோடு மறந்து விடுகின்றனர்.

கிராமங்களில் ஏற்படும் பஞ்சாயத்து முறை, ஆதிக்க சாதிகளுக்கான அதிகாரங்களைக் கூட்டுவதாகவும், தாழ்த்தப்பட்ட மக்களை மேலும் வஞ்சிப்பதாகவுமே அமையும். இதைத் தவிர்க்க, கிராமப் பஞ்சாயத்துகளில் சாதி ரீதியான ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதுமட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல் ரீதியான சிறப்புப் பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டும்.

வட்ட மேசை மாநாட்டில் ஏற்கனவே விவாதித்தபடி, அதிகாரத்தை வல்லவர்களிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக, நல்லவர்களிடமே ஒப்படைக்க வேண்டும். இந்த நாட்டைப் பொருத்தவரை, பெரும்பான்மையான மக்கள் தமக்கும், தம் சாதிக்கும் மட்டுமே நல்லவர்களாக வாழ்கின்றனர்.

இங்கிலாந்திலோ, அய்ரோப்பாவிலோ சாதியும் இல்லை, சாதி முறையும் இல்லை. எனவே, இங்கிலாந்து, அய்ரோப்பிய மக்களுக்கான சட்டங்கள் - நம் நாட்டிற்கு உகந்தது அல்ல. இந்த உண்மையை நாம் உணர வேண்டும். எனவே, இந்திய நாட்டுச் சட்டம் மக்களுக்கான சட்டமாக இருக்க வேண்டுமெனில், நாம் எல்லா தளங்களிலும் சாதி ரீதியான பிரதிநிதித்துவ (Communal Representation) முறையைப் பின்பற்ற வேண்டும். என்னுடைய இந்தக் கருத்தின் மீதான உங்கள் முடிவை உறுப்பினர்களின் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்வதைக்கூட நான் எதிர்க்கிறேன்.

எல்லா சாதி மக்களும் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், எல்லா சாதிகளுக்கான பிரதிநிதித்துவம் இங்கு இல்லை. காரணம், தேர்தலில் போட்டியிடும் அளவிற்கு இந்த நாட்டில் அவர்களுக்குச் சாதகமான சூழல் இல்லை. சாதி ரீதியான ஒதுக்கீடு, நமது அரசியல் சட்டத்திற்கு மெருகூட்டும்.

சாதி ரீதியான பிரதிநிதித்துவம், நமது நீதித்துறையிலும் தேவை. ஒரு வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதி என இருவரும் பார்ப்பனர்களாக இருந்தால், பார்ப்பன நீதிபதி நடுநிலையுடன் செயல்படுகிறார்.

ஆனால், பார்ப்பனருக்கும், பார்ப்பனர் அல்லாதவருக்கும் இடையில் ஒரு வழக்கு வரும்போது, அந்த நீதிபதி பார்ப்பனர்களின் பிரதிநிதியாகவே செயல்படுகிறார். பார்ப்பன நீதிபதிகள், நமது நீதித்துறையின் தரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி - நீதியின் மாண்பையே விபச்சாரம் செய்கின்றனர். பார்ப்பன நீதிபதிகளின் இத்தகைய போக்கிற்கு, என்னால் பல எடுத்துக்காட்டுகளைக் கூறமுடியும்.

எனவே, நீதித்துறையில் சாதி ரீதியான ஒதுக்கீடு என்பது - எளிய மக்களுக்கான அதிகாரத்தையும் நீதியையும் பெற்றுத் தரும்.

ஏதோ ஒரு சில குறிப்பிட்ட நீதிபதிகளை மனதில் கொண்டு நான் இத்தகைய கருத்துகளைத் தெரிவிக்கவில்லை. பெரும்பான்மையான நீதிபதிகள், இத்தகையப் போக்கிலேயே நடந்து கொள்வதால், சாதிரீதியான ஒதுக்கீடு என்பது, நீதித்துறையிலும் உடனடியாகத் தேவைப்படுகிறது. ◇

---

*'பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு' : 2 பக்கம் : 11*

www.padippakam.com

புகைப்படம் : மீனா மயில்



நான் காண்பிக்க மறுக்கும்
நீர்த்துப்போன
என் விழிகளில்
கல்லுடைத்து
மண் சுமந்து
பீடி சுற்றி
பட்டாசு தயாரித்த...
இன்னும் இன்னும்
சவக்களையின்
மிச்சங்கள் மட்டுமே
பதிந்திருக்கின்றன.

ஆனாலும்,
விரைப்பான
என் கைகளில்
கர்வமாகப் பிடித்திருக்கிறேன்
எனக்கான உரிமைகளை

கொஞ்சம்
கூடுதலான நம்பிக்கையோடு.



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்



**ஒதுக்கப்பட்டவர்களே ஒதுக்கும் 'புதிரை வண்ணார்கள்'........12**

மீனா மயில்



**தனியார் மயமாக்கல் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது.................36**

நீதிபதி ராமசாமி பேட்டி



**தேர்தல் முறையில் தீர்வு இல்லை..................22**

பூ. சந்திரபோசு சிறப்புப் பேட்டி

வாக்குமூலம் ..........................................................7

தமிழ் முழக்கமா? ஈழ முழக்கமா? ...........................8

தி.மு.க.அரசின் மக்கள் விரோத போக்கு............11

ஆப்கான் நாட்டின் ஆர்.எஸ்.எஸ். ........................16

பூகம்பத்திலும் ஜாதி ..........................................17

சாதிவெறிக்கு மேலவளவு பாடம் கற்பிக்குமா?......19

உடையும் சித்திரங்கள் - சுபவீ தொடர்..................20

பெண்களின் முன்னேற்றமே ஆண்கள் விடுதலை.... 2

'சாதுக்கள் வாழ்க'................................................3

அரசியல்.............................................................3

நீதித்துறைக்கு ஆபத்து .........................................3

அறிவாயுதம்........................................................3

முதல்வரின் கவனத்திற்கு.......................................4

மடல்கள்.............................................................4

- அட்டைப் புகைப்படம் : மீனா மயில்
- அட்டை வடிவமைப்பு : ஆர்.ஆர். சீனிவாசன்
- இதழ் வடிவமைப்பு : ஜெமிமா ஆலிஸ்



படிப்பகம்

www.padippakam.com

# நஞ்சை விற்பவர்கள்

தேர்தல்கள் நம் வாழ்க்கையைத் தீர்மானிக்கப் போவதில்லைதான். ஆட்சி மாற்றத்தால் இங்கு சமூக மாற்றம் எதுவும் நிகழ்ந்துவிடப் போவதில்லை என்பதும் அனைவரும் அறிந்ததே. ஆம். தேர்தல் ஒட்டுமொத்த விடுதலையை ஒருபோதும் பெற்றுத் தராது. ஆனால், சில உரிமைகளைப் பெற்றுத் தரலாம். இந்த யூகத்தின் அடிப்படையில் தான் இன்றைக்கு எல்லா நிலைகளிலும், தேர்தலுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

எனவே, தேர்தலில் நின்று வெற்றி பெறுவோம் என்றும் இந்தத் தேர்தலை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட முடியாது என்றும், இதில் பங்கேற்பதன் மூலமே - நமக்கான அரசியல் அதிகாரத்தைப் பெறமுடியும் என்ற கருத்துகளும் பரவலாக முன்வைக்கப்படுகின்றன. இதற்காக எந்தக் கூட்டணியாக இருந்தாலும் - அது வெற்றி பெறும் கூட்டணியாக இருக்கும் பட்சத்தில், அதில் இணைந்து கொள்ளலாம் என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது.

**இந்நிலையில், தலித் மக்கள் தேர்தலை எப்படி அணுகுவது?**

நாம் சில முக்கிய பிரச்சினைகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. அண்ணல் அம்பேத்கர் கூறிய 'அரசியல் அதிகாரம்' என்பது, சட்ட மன்ற உறுப்பினர் பதவிகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரம் மட்டுமே அல்ல. சில சட்டமன்ற உறுப்பினர் பதவிகளைப் பெறுவது, அரசியல் அதிகாரத்தை ஒரு போதும் பெற்றுத் தராது. சமூக, பொருளாதாரத் துறைகளில் போதிய அளவு அதிகாரம் பெற்றிராத நிலையில், தாழ்த்தப்பட்ட மக்கள் மிக அதிகமான அரசியல் அதிகாரத்தை - ஒருபோதும் பெற முடியாது என்பதே அம்பேத்கர் கருத்து.

ஏனெனில், தேர்தல் அரசியல் என்பது இங்கு பெருமளவில் சாதி அரசியலாகத்தான் நடைமுறையில் இருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தில் நடைபெறுகின்ற அணி சேர்க்கைகள், எந்த அடிப்படையில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பார்த்தால், நமக்கு இது விளங்காமல் போகாது.

ஆக, சமூகத் தளத்தில் சாதியை ஒழிக்காதவரை, அது அரசியல் அரங்கில் எதிரொலிக்கவே செய்யும். அங்கு மட்டும் தலித் மக்கள் தங்களுக்கான உரிமையை நிலைநாட்டிவிட முடியாது. தலித் மக்கள் எல்லா இடங்களிலும் சிறுபான்மையினரே என்பது தான் எதார்த்தம். இந்நிலையில், நாம் நமக்கான அரசியலை முன்னெடுத்துக் கொண்டு - தனியே தேர்தலில் நின்றால் வெற்றி பெற முடியாது. எனவே, கூட்டணிகள் தேவைப்படுகின்றன.

ஆனால், என்ன மாதிரியான கூட்டணியில் சேர்வது? இன்றைக்கு அமைந்திருக்கும் கூட்டணிகள், நமக்கு வெற்றி தேடித்தர அமைக்கப்பட்ட கூட்டணிகள் அல்ல. அவர்களுக்கான வெற்றியைப் பெற - நமது தயவு அவர்களுக்குத் தேவைப்படுகிறது; அதற்கு நம்மைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதுதான் காலங்காலமாக நடைபெற்று வருகிறது; இன்றும் அதுதான் நடக்கிறது. தலைவர்கள் மட்டுமே மாறியுள்ளனர்.

வரவிருக்கிற தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில், பாரதீய ஜனதாவின் மதவாதத்தை மறைக்கும் 'தேசிய ஜனநாயகக் கூட்டணி'யும் (தி.மு.க., புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள், ம.தி.மு.க.) - ஊழல், பார்ப்பனர் தலைமை மற்றும் சாதி வெறியை மறைக்கும் 'மதசார்பற்ற கூட்டணி'யும் (அ.தி.மு.க., பா.ம.க., கம்யூனிஸ்டு கட்சிகள் மற்றும் சில தலித் கட்சிகள்) உருவாகியுள்ளன. தலித் மக்களைப் புறக்கணித்துவிட்டு எதையும் சாதித்துவிட முடியாது என்பதில் எதிரிகள் தெளிவாக இருக்கிறார்கள். அதனால் தான் இரு அணிகளிலும் தலித் கட்சிகள் வலிந்து சேர்க்கப்படுகின்றன.

ஆனால், நமக்கு நம் பலம் தெரியவில்லை அல்லது தெரிந்திருந்தும் அதை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முன்வரவில்லை. 'தலித் அரசியல்' என்று பத்து


எழுச்சி தலித் முரசு

Volume : 4 Issue : 9

மார்ச், 2001
ஆண்டு : 5 - இதழ் : 2

ஆசிரியர், வெளியிடுபவர்
பெ. சந்திரசேகரன்

பொறுப்பாசிரியர்
புனித பாண்டியன்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 100/-
நூலகக் கட்டணம் : ரூ. 200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-



முகவரி

ஏ-21, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, அண்ணா முதன்மைச் சாலை
கே.கே. நகர், சென்னை - 600 078

தொலைபேசி : 371 66 88
தொலைநகல் : 474 11 88

E-mail : ambedkar@md4.vsnl.net.in




படிப்பகம்

www.padippakam.com

ஆண்டுகளாகப் பேசிவருகிறோமே - அது, பா.ஜ.க. இருக்கும் தி.மு.க.வுடனோ அ.தி.மு.க. இருக்கும் பிற அணியுடனோ எப்படி சாத்தியமாகும்? இக்கேள்வியை, மக்கள் மன்றத்தில் நாம் எழுப்பாமல் இருப்போமானால், நாம்தான் முதல் குற்றவாளிகளாக இருப்போம்.

கடந்த 10 ஆண்டுகளாக, 'திராவிட அரசியலைப் போன்ற மோசடி எதுவுமில்லை' என்று பேசிவந்த தலித் இயக்கங்கள், அதற்காகவும் அதன் மூலமும் மக்களை அணி திரட்டி தலைவர்களானவர்கள் இது குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். எத்தனை எத்தனை சாதி வன்கொடுமைகள், எண்ணிலடங்கா இழப்புகள் என நம் மக்களை எல்லாம் பலி கொடுத்தோமே - அந்தத் தியாகங்கள் எல்லாம் இந்தக் கூட்டணிக்காகத்தானா? மற்றவர்களைப் போல, 'இயக்கத்திற்கு நிர்பந்தம்', 'வேறு வழியில்லை' என்பதுதான் பதிலாக இருக்கும் பட்சத்தில், இவர்களுக்கும் இதுவரை இவர்கள் குறை கூறிவந்த மூத்த தலைமுறைக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்?

இன்றைய சூழலில் இப்படி ஒரு தலையங்கம் எழுதுவதுகூட வீணற்றதாகப் படலாம். ஆனால், உண்மையைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. மக்களுக்கென மக்களை முன்னிறுத்திக் களம் அமைத்துவிட்டு, இறுதியில் தங்களை மட்டுமே முன்னிறுத்திக் கொள்வதை மக்கள் எப்படி ஏற்பார்கள்? மக்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டு - யாரும் எந்த அரசியலையும் செய்துவிட முடியாது என்பதுதான் எதார்த்தம். எனவே, இதுபோன்ற தவறுகளை சுட்டிக்காட்டுவதன் மூலம்தான், நாம் அடுத்த கட்ட அரசியலை நோக்கி நகர முடியும்.

கொடியங் குளத்தையும், தாமிரபரணியையும், மேலவளவையும், புளியங்குடியையும் மட்டுமல்ல, இன்னும் இன்னும் இம்மக்கள் மீது நிகழ்ந்த வன்கொடுமைகளைத் தேர்தல் அரசியல் மறைத்துவிடும் எனில், நாம் கண்களை விற்றா ஓவியம் வாங்கப் போகிறோம்? ஆம் எனில், யாருடைய கண்களை விற்று? இதில் தலித் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

அப்படியே கூட்டு சேர்ந்தவர்கள், எந்த நிபந்தனையை முன் வைத்திருக்கிறார்கள் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். இவர்கள் பெறும் ஓரிரு எம்.எல்.ஏ.க்கள் மூலம் இனிவரும் சாதிக் கலவரங்களை எப்படித் தடுக்கப் போகிறார்கள் என்பதையும், இந்த மக்களுக்கான உரிமைகளை எப்படிப் பெற்றுத்தரப் போகிறார்கள் என்பதையும் மக்கள் பார்க்கத்தான் போகிறார்கள்.

உதட்டளவில் தலித் அரசியல் பேசிக்கொண்டு, நடைமுறையில் - இதுநாள் வரை எதிர்த்துக் கொண்டிருந்த திராவிட கட்சிகள் மற்றும் மதவாத பா.ஜ.க.வுடன் கூட்டு சேர்வது என்பது, எந்த அம்பேத்கரிசத்தில் இருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை. நாம் இதுநாள் வரை எதிர்த்து வந்த, சாதி அமைப்பைக் கட்டிக்காக்கத் துடிக்கும் பா.ஜ.க. பரிவாரங்கள், அம்பேத்கர் - பெரியார் கொள்கைகளுக்கு நேர் எதிரானவை. ஆம். 'இந்துத்துவா'வை உயிர்மூச்சாகக் கொண்ட பாரதீய ஜனதா கொடிய நஞ்சு. ஆனால், அது நஞ்சல்ல; நல்லது என்று கூவி விற்பவர்கள்....?

நம் கேள்வி இதுதான்: எதிரிகளுடன் கூட்டணி வைக்கத் தயங்காதவர்களுக்கு, சகோதரர்களுடன் கூட்டணி வைப்பதில் மட்டும் என்ன தயக்கம்? நாம் இத்தனை நாட்களாக வலியுறுத்தி வந்த தலித் அரசியல் என்பது - தலித் கட்சிகள், இயக்கங்கள் அமைப்புகள் ஆகியவற்றை ஒன்று திரட்டி, சில அடிப்படை நிபந்தனைகளுடன் மற்ற ஜனநாயக அணிகளையும் ஒன்றிணைப்பதுதான். இது, ஓரிரு நாட்களில் நடக்கக்கூடிய தல்ல. அதற்கான வாய்ப்புகளை உருவாக்காமல் 'சாத்தியமில்லை' என்று ஒரு வார்த்தையில் கூறிவிட முடியுமா?


இதற்கான களம் அமைக்கப்படாதது ஏன்? என்ற கேள்விக்கு நாம் ஒவ்வொருவரும் பதில் சொல்லியாக வேண்டும். இனியாவது நமக்கான அரசியல்; அதற்கென ஒரு களம் அமைப்போம். அதற்கான விதைகளைத் தூவுவோம். உண்மைகள் தாமதமாகத்தான் உரைக்கும். ஆனால், வென்றே தீரும். தேர்தல்கள், நம் போராட்டங்களை மழுங்கடித்து விட நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

"இன்று இந்துக்களின் அரசியல் வாழ்க்கை, தாழ்த்தப்பட்டோரின் சமூக, பொருளாதார நலன்களுக்கு எதிராக அமைந்துள்ளது. இந்நிலையில், தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியல் அதிகாரம் எவ்வளவு பரந்ததாக இருந்தாலும், அவர்கள் சட்ட மன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு இந்துக்களைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் ஆதரவை நம்பியிருக்க வேண்டியிருந்தால், அந்த அதிகாரத்தால் எந்தப் பயனும் இருக்காது என்பதை, தாழ்த்தப்பட்ட மக்கள் கண்டிப்பாக நினைவில் கொள்ள வேண்டும்."

- 'தீண்டத்தகாத மக்களுக்கு ஓர் எச்சரிக்கை' என்ற தலைப்பில் டாக்டர் அம்பேத்கர் எழுதியுள்ள கட்டுரை 'டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு : 5, பக்கம் : 396



படிப்பகம்




நன்றி : 'யாதும் ஊரே'

பூகம்பம் பல மாயைகளை உடைத்திருக்கிறது. இதில் உடைபட்ட மிகப்பெரும் மாயை, இந்தியா ஒரு ஏழை நாடு என்பதுதான். நில நடுக்கத்தின்போது ஏற்பட்ட நெருக்கடியை சமாளிக்க, நாட்டின் பல இடங்களிலிருந்தும் குஜராத்தில் பணம் கொட்டியது. ஆனால், சாதாரண நேரங்களில், இதில் ஒரு சிறு தொகையேனும் சக மனிதனுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டிருந்தால், வறுமையில் வாடும் கோடிக்கணக்கான மக்கள் - பூகம்பம் வருகிறதோ இல்லையோ - இந்தியா ஒரு வித்தியாசமான நாடாக இருந்திருக்கும்.


**- மார்டின் மெக்வான்,**
குஜராத்தில் மலமள்ளும் தொழிலாளர்களிடையே பணியாற்றும் சமூக ஆர்வலர், இணையக் கட்டுரை ஒன்றில்.

இந்தியாவில் பள்ளிக் கூடங்களை நடத்துவதற்குப் பணம் இல்லை. ஆனால், அணுகுண்டு வெடிப்பதற்கு நம்மிடம் ஏராளமான பணம் இருக்கிறது. படித்தவர் - படிக்காதவர் என்ற பிரிவினையை ஏற்படுத்தும் பேதத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

**- பேரா. ரொமிலா தாப்பர்,**
வரலாற்றாசிரியர், டெல்லியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழா ஒன்றில்.




நன்றி : 'டைம்ஸ் ஆப் இந்தியா'




நன்றி : 'டைம்ஸ் ஆப் இந்தியா'

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட குஜராத் மக்களுக்கு சரியான வகையில் நிவாரணப் பணி சென்றடையாததற்குக் காரணம், அடிப்படைக் கட்டமைப்பான பஞ்சாயத்து செயல்படாததுதான். பாரதிய ஜனதா கட்சி, அரசியல் நோக்கத்துடன் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தாமல் முடக்கி விட்டது.

**- ஜார்ஜ் மேத்யூ,** சமூக ஆய்வாளர், 'இந்து' நாளேட்டில்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியாளர்கள் புத்தர் சிலைகளை அழிப்பது, இஸ்லாத்துக்கு எதிரான செயல். இதுபோன்ற செயல்களை காட்டுமிராண்டிகளால் மட்டுமே செய்ய முடியும்.

**- பிரதமர் வாஜ்பேயி,** பஞ்சாபில் நடைபெற்ற அணை திறப்பு விழாவில்.

- பாபர் மசூதியை இடித்தது மட்டும் இஸ்லாத்திற்கு ஆதரவான செயலா?
- 'சங்பரிவார்' கும்பலுக்கும் இது பொருந்தும் அல்லவா?

வரலாற்றுச் சின்னங்களை அழிப்பது மூடத்தனம் மட்டுமல்ல; காட்டுமிராண்டித் தனமும் ஆகும். தாலிபான் அரசு தேவையற்றதும் முறையற்றதுமான ஒரு வரலாற்றுக் கேட்டை விளைவித்துக் கொண்டிருக்கிறது. ஆப்கானிஸ்தானில் உருவாகியுள்ள பெருங்கேடு தரும் தீமையை, உடனடியாகத் தடுத்து நிறுத்த முஸ்லிம் நாடுகள் முன்வர வேண்டும்.

**- கே.எம். காதர் மொகிதீன்,** மாநிலத் தலைவர், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக், அறிக்கை ஒன்றில்

www.padippakam.com




# தமிழ் முழக்கமா? ஈழ முழக்கமா?

காட்டிலிருந்து வீரப்பன் வந்தாலும் வருவான்'' என்கிற தகவல் தமிழ் நாடு போலிசாருக்கு கிடைத்திருக்குமோ என்னவோ தெரியவில்லை. சென்னை அருங்காட்சியக வளாகத்திற்குள் செல்பவர்களை போலிசார்தான் வரவேற்றனர். ஆங்காங்கே கும்பல் கும்பலாக 'காக்கிச் சட்டைகள்' அட்டென்ஷனில் இருந்தனர்.

எதற்கு இந்த பரபரப்பு? ஒன்றும் இல்லை. 'விடை தந்தது சந்தனக்காடு' என்கிற குறுந்தகடு (CD) 'பெரியார்: மரபும் - திரிபும்' என்கிற நூல், 'தந்தையும் தம்பியும்' என்கிற ஒலி நாடா ஆகியவற்றை 'தமிழ் முழக்கம்' என்கிற புதிய அமைப்பு 8.2.2001 அன்று வெளியிடுவதற்காகத்தான் இத்தனை பரபரப்பு.

தமிழர்களை உலகத் தரத்தில் உயர்த்தப் போவதாக மார்தட்டி அரியணையைப் பிடித்தவர்களின் போக்கு, செல்லரித்துக் கொண்டிருக்கும் வேளையில் - உண்மையான அக்கறையும் வேதனையும் கொண்டவர்களின் வெளிப்பாடாய் 'தமிழ் முழக்கம்' களம் அமைத்துள்ளது.

தோழர்கள் இன்குலாப், அறிவுமதி, வெங்கட்ராமன், விடுதலை ராசேந்திரன், புனித பாண்டியன், புதுக்கோட்டை பாவாணன், திரைப்பட இயக்குனர் ஆர்.சி.சக்தி மற்றும் பழ. நெடுமாறன், அறிஞர் எஸ்.வி.ராஜதுரை, சுப. வீரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் பேச வந்த பெரும்பாலோரிடமிருந்து ஈழமுழக்கம்தான் வந்தது.

தமிழ் நாட்டில் பெரியார் செய்த சமூக நீதிப் புரட்சியைக் கூட, தன் புரட்டுத் தனத்தால் திரித்துக் கூறும் பெரியாரின் வாரிசுதாரர் கி. வீரமணிக்கு, ''நீ செய்றது சரியில்லப்பா'' என்று ஆதாரத்துடன் பெரும் ஆவணத்தை எடுத்துப் போட்டிருக்கும் அறிஞர் எஸ்.வி.ராஜதுரையின் ஆதங்கத்தை, இந்த 'ஈழ முழக்கம்' சற்றே 'அமுக்கி' வைத்து விட்டது.

தோழர் இன்குலாப் பேசும்போது, ''இங்குள்ள பின் நவீனத்துவ வாதிகள் ஹரிகோவைத் தெரியுமா? இஸ்கோவைத் தெரியுமா? என்று கேட்கிறார்கள். எனக்கு இவர்களைப் பற்றித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. இவர்களை விட, அம்பேத்கரையும் பெரியாரையும் தான் எனக்குத் தெரியும்'' என்ற போது, அரங்கத்தில் எதார்த்தம் பிரதிபலித்தது.

எஸ்.வி.ஆரின் நூலை வெளியிட்ட தோழர் விடுதலை ராசேந்திரனின் பேச்சு, எஸ்.வி.ஆரின் புத்தகத்திற்கான விரிவான - சரியான அறிமுகமாக அமைந்தது. பேராசிரி

## பெரியார் சொன்னது தவறா?

... *'இந்த கோயில் அர்ச்சகர் வேலை யார் வேண்டுமானாலும் செய்யலாம்' என்று தீர்மானம் பண்ணி, அதை இந்த அரசாங்கம் சட்டம் செய்ததானது செல்லாது என்று பண்ணி, நம் இழிநிலையைச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தி விட்டதனாலே, கொஞ்சம் ஆத்திரம் அதிகமாய்ப் போயிற்று.*

- தந்தை பெரியார்

1973 டிசம்பர் 8,9 தமிழர் இன இழிவு ஒழிப்பு மாநாட்டில் (பெரியார் ஈவெரா சிந்தனைகள், ப. 2052)

*உச்சநீதி மன்றத் தீர்ப்பின்படி, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகத் தடை விதிக்கவில்லை.* - கி. வீரமணி விடுதலை, 25.10.1991

*ஜாதி வேறுபாடற்ற முறையில் அர்ச்சகர் நியமனம் செல்லாது என்று எந்த இடத்திலும் தீர்ப்பு சொல்லப்படவே இல்லை.*

- கி. வீரமணி, *'தினமணி'*, 20.12.2000


படிப்பகம்

www.padippakam.com

யர் வெங்கட்ராமன் உரை, வீரமணிக்கு பதிலாகவும், பெரியார்திடலின் மாற்றுப் போக்கு குறித்தும் விமர்சிப்பதாகவும் இருந்தது. கவிஞர் அறிவுமதி தமது உரையில், ''தமிழ்ச்சமூகத்திற்குப் பல நல்ல ஆய்வு நூல்களை ஓய்வறியாத உழைப்பின் மூலம் தந்து கொண்டிருக்கும் எஸ்.வி. ராஜதுரை அவர்களை, இனி நாம் அறிஞர் என்றே அழைக்க வேண்டும்'' என்ற வேண்டுகோளை முன் வைத்தார்.

அரங்கத்தை முகம் சுளிக்க வைத்த பேச்சு புதுக்கோட்டை பாவாணனுடையது. தமிழ் முழக்கத்தின் வெளியீடுகளைப்பற்றியோ, எதற்காக தமிழ் முழக்கம் துவங்கப்பட்டது என்பதைப் பற்றியோ பேசாமல், முழுக்க முழுக்க மூன்றாம் தர பேச்சாகவும், ஜெயலலிதா, கருணாநிதி, மூப்பனாரை கொள்கையளவில் விமரிசிக்காமல் - தனிப்பட்ட முறையில் திட்டுவதாகவும் அமைந்தது. இவரின் பேச்சின் போது பலர் அரங்கத்தை விட்டு வெளியேறியதை, நிகழ்ச்சியாளர்கள் கவனிக்க வேண்டும்.

'பெரியார் மரபும் - திரிபும்' புத்தகத்தைப் பெற்றுக் கொண்டு புனித பாண்டிகளையும், அழகாபுரங்களையும் நாம் மறந்துவிடக்கூடாது'' என்ற கேள்வியை அரங்கத்தில் முன் வைத்த போது, இதற்குப்பின் பேச வந்தவர்கள் இந்த கேள்விக்கு - பதில் சொல்கிற நிர்பந்தத்தை உருவாக்கியது.

ஏற்புரையாற்றிய எஸ்.வி.ஆர். பேச்சு நெருப்பு உரையாக தகதகத்தது. 'அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்' என்கிற உச்சநீதி மன்றத் தீர்ப்பு மோசமானது என்பதை அம்பலப்படுத்தினார். 'ஜெயலலிதாவுக்காக தன் கருத்தை மாற்றிச் சொல்லும் வீரமணியின் பித்தலாட்டத்திலிருந்து - நாம் பெரியாரை மீட்டாக வேண்டும்' என்று முழக்கமிட்ட போது, அது உண்மையான 'தமிழ் முழக்க'மாக இருந்தது.

நெடுமாறன் தமது உரையில், 'துக்ளக்' ஆசிரியர் சோவை கடுமையாக சாடினார். ''நாங்கள் புலி வேட்டைக்குப் போகிறவர்கள், எலிவேட்டை ஆட மாட்டோம். சோ போன்றவர்கள் தங்கள் வேலையை ஜெயலலிதாவிடமும் மூப்பனாரிடமும் வைத்துக் கொள்ளட்டும்; நம்மிடம் வைத்துக் கொள்ள வேண்டாம்'' என்று முழுக்க முழுக்க 'எலிகளை'ப் பற்றியே பேசினார்.




### பெரியார் : மரபும் திரிபும்

'அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும்' என்ற முழக்கம், தமிழ் மண்ணில் நீண்ட நாட்களாக ஒலிக்கிறது. ஆனால், இன்றளவும் இக்கோரிக்கை மட்டும் நிறைவேறவேயில்லை. திராவிடர் கழகம் இது குறித்து அவ்வப்போது தீர்மானம் நிறைவேற்றுவது உண்டு. அண்மையில் இதுபோன்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுகையில், அனைத்து சாதியினரும் அர்ச்சகராக முட்டுக்கட்டையாக இருப்பது, உச்சநீதி மன்றம் அல்ல; தி.மு.க. அரசின் அக்கறையின்மையே காரணம் என்று கூறியிருந்தது. ஆனால், உச்ச நீதி மன்றத் தீர்ப்பு தான் இதற்கு முதன்மையான காரணம் என்று. இதற்குரிய அனைத்து ஆவணங்களுடன் நூலாக்கி உள்ளார் எஸ்.வி. ராஜதுரை.

*நூல் வெளியீடு : 'தமிழ் முழக்கம்' 29, டாக்டர் குருசாமி சாலை*
*சேத்துப்பட்டு, சென்னை - 31, விலை : 100/-*

சுப. வீரபாண்டியன் தமது ஏற்புரையில், ''சென்னை நகரெங்கிலும் மாற்றானுடைய சிலைகள், பெங்களூரிலே எங்கள் ஊர் தமிழன் திருவள்ளுவனுடைய சிலையை கோணிச்சாக்கில் மறைத்து வைத்திருப்பது கண்டு அமைதியாக இருப்பது தீவிரவாதமா? குஜராத் மக்களுக்கு மருந்து, உணவு, உடையை இங்கிருப்பவர்கள் அனுப்பும்போது, நாங்கள் தமிழர்களுக்கு அனுப்புவது தீவிரவாதமா? என்கிற கேள்வியை முன்வைத்து - இதைத் தவறு என்றால் இதே தவறை தொடர்ந்து செய்வோம்.'' என்றார்.

தமிழர்களின் பிரச்சனைகளையும், தமிழர்கள் ஒன்றிணைய முடியாமல் பிரித்து வைத்திருக்கும் சாதியைப் பற்றியும் - அவர்களின் விடுதலை குறித்தும் விரிவான விவாதத்தை முன்னெடுத்து 'தமிழ் முழக்கம்' புதிய களம் கண்டிருக்க வேண்டும். ஆனால், புலிகள், ஈழம், பிரபாகரன் என்று ஒரே 'புராணமாக' போய்க் கொண்டிருந்தது விழா. பிரபாகரனைப் பற்றிப் பேசினால், திராவிட அரசியல் கட்சிகள் மாதிரி கைதட்டும் போக்கை இவர்கள் மாற்றுவார்களா? ஈழத்தைக் காட்டியே எத்தனை நாள் இந்தப் பேச்சாளர்கள் கைதட்டலை பெறப் போகிறார்களோ தெரியவில்லை.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், இவர்களைப் பார்த்துதான் கேட்கிறார் : '**கை தட்டத்தானா உன் கை தமிழா கை தட்டத் தானா உன் கை?**''

- நம் செய்தியாளர்



**உங்களின்**
**'தன்னானே' பாடகர்**
**டாக்டர்**
**கே.ஏ. குணசேகரன்**
**எழுதும்**
**இசைஞானி**
**இளையராஜா**
**பற்றிய ஓர்**
**இசை அலசல்**
**அடுத்த இதழில்...**


படிப்பகம்

www.padippakam.com

# உங்கள் ஊரில் ஏஜெண்டுகள் தேவை

டீ, காப்பி, குடிப்பவர்கள், பீடி, சிகரெட், பீடா, வெத்திலை, பான்பராக் உபயோகிப்பவர்கள்

மற்றும் கர்ப்பவதிகள், மாணவர்கள், வாலிபர்கள் நோயாளிகள், உழைப்பாளிகளே நீங்கள்

நாள்தோறும் நலமுடன் வாழ வா ழ் த் து க் க ள்



## சிங்கா விட்டா ஸ்வீட்டி

இந்திய மக்களின் விருப்பம்... ருசி! ருசி!!

அவசர உலகில்

- ✦ அழகும், ஆரோக்கியம் தரும்.
- ✦ நோய்களை நீக்கி புத்துணர்ச்சி தரும்.
- ✦ ஊட்டச்சத்து நிறைந்தது.

குடும்பத்துடன் கடித்து சுவைத்து உண்ணுங்கள்

வாலிப வயதினருக்கு ஏற்ற டானிக் கேக்

உடல்வலி, வயிற்றுவலி, முதுகு வலி, ஜலதோசம், மூத்திரவியாதி, நெஞ்சுவியாதிகள், நீரழிவு, வாய்வு, அஜீரணம், வயிற்றுப்புண், பிளட் பிரஷர் மற்றும் பிரசவத்திற்கு முன், பின் கஷ்டப்பட்டு வேலை செய்பவர்களுக்கு சிறந்த டானிக் கேக்




மற்றும் வியாபார விசாரணைகளுக்கு

**SINGHAR SMILES COMMUNICATION**
894, T.V.S. Nagar, 3rd Street, Maharaja Nagar,
Tirunelveli - 627 011. E-mail:singarsmiles@usa.net

விலை ரூ 5/-

## வாசகர்களுக்கு! சுயவேலை வாய்ப்பு

- ★ உங்கள் ஊரில் இருந்து கொண்டே சுயமாக சம்பாதிக்கலாம்
- ★ முழு நேரம் / பகுதி நேரம் வீடு வீடாக சென்று அல்லது கடைகள் சூப்பர் மார்க்கெட், அலுவலகங்கள் மற்றும் பல இடங்களில் எங்கள் நிறுவனத்தின் தயாரிப்புகளையும் எமது விநியோகத்தின் பார்வையில் உள்ள பொருள்களையும் விற்பனை செய்யலாம்.
- ★ 8ம் வகுப்புக்கு மேல் படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- ★ உங்கள் பெயர், முகவரி, கல்வி தற்போதைய தொழில் / வேலை, விபுரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

**Manager - Personal SINGHAR SMILES COMMUNICATIONS**
894, T.V.S. Nagar, 3rd Street, Maharaja Nagar (Post), Tirunelveli - 627 011. E-mail:singarsmiles@usa.net

படிப்பகம்

www.padippakam.com



# “தலித் மக்கள் மதம் மாறக் கூடாது”

## தி.மு.க. அரசின் மக்கள் விரோத ஆணை

தலித் மக்களுக்கு எதிராக என்ன துரோகம் இழைத்தாலும் - அம்மக்கள் அதைப் பொருட்படுத்தாமல், மீண்டும் தங்களை ஆட்சியில் அமரவைத்து விடுவார்கள் என்ற மிதப்பில் இருக்கிறது தி.மு.க. அரசு. அரசுத் துறைகளில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு நிரப்பப்படாத பணி இடங்களை - நேரடி நியமனம் மூலம் நிரப்பலாம் என்று கூறும் அரசாணை எண் : 44 ஐ தி.மு.க. அரசு ரத்து செய்து விட்டது. இதைக் கண்டித்தும், மீண்டும் இந்த ஆணையை நடைமுறைப் படுத்தக் கோரியும் - தலித் இயக்கங்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

இதற்கிடையில் தலித் மக்களை ஊனப்படுத்தும் மற்றொரு ஆணையை இதே தி.மு.க. அரசு கொண்டு வந்தது, அம்பலமாகியுள்ளது.

“பிறப்பால் கிறித்துவராக இருப்பவர், இந்துவாக மாறினால், அவர் ஆதி திராவிடர் சாதிச் சான்றிதழ் பெறவோ - இட ஒதுக்கீட்டுக்குரிய சலுகைகளை அனுபவிக்கவோ தகுதி இல்லை” கடிதம் நகல் எண் : 81 / நாள் 19.9.2000

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளரிடமிருந்து தான் இந்த ஆணையும் வந்துள்ளது.


பிப்ரவரி 14 அன்று, சென்னை - வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற தலித் கிறித்துவர் மாநாட்டில் பங்கேற்று, தலித் கிறித்துவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்வதாக வாக்குறுதி அளித்துவிட்டு மறுபுறம், ‘தலித் கிறித்துவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க முடியாது’ என்ற ஆணையையும் தமிழக முதல்வர் பிறப்பித்துள்ளார் எனில், இது தலித் மக்களை ஏமாற்றும் செயல் அல்லாமல் வேறென்ன?

**நாம் எழுப்பும் கேள்வி இதுதான் :**

1. தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துக்கள் அல்ல. ஆனால், இன்றைக்கு நடைமுறையில் உள்ள சட்டப்படி அவர்கள் இந்துக்களாக ஆக்கப்பட்டுள்ளனர். எனவே, இந்து மதத்தில் இருந்தால்தான் இட ஒதுக்கீடு என்று கூறி அந்த அடிப்படையில்தான் இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.

2. இதனால், பவுத்தம், சீக்கியம் தவிர வேறு மதத்திற்கு மாற விரும்பும் தலித் மக்களுக்கு இட ஒதுக்கீடு உரிமை இல்லை. ஏனெனில், கிறித்துவர்களாக மாறினால் இட ஒதுக்கீடு பறிபோய் விடும். ஆக, இதன் மூலம் மதம் மாறும் உரிமை இம்மக்களுக்கு மறுக்கப்படுகிறது.

3. கிறித்துவராக இருக்கும் ஒரு தலித், இட ஒதுக்கீடு என்ற உரிமையைப் பெற இனி ‘இந்து’வாகவும் மாறி விடக்கூடாது என்று தற்பொழுது ஆணையிட்டுள்ளது தமிழக அரசு. ஆக, இங்கும் மதம் மாறும் உரிமை அவர்களுக்கு முற்றிலுமாக மறுக்கப்படுகிறது.



அரசாணை நகல்

ஆக, ‘இந்து தலித்’ அவன் விரும்பும் வேறு மதத்திற்குச் செல்ல முடியாது. ஏனெனில், இட ஒதுக்கீடு கிடைக்காது. தற்பொழுது ‘தலித் கிறித்துவரும்’ - இந்து மதத்திற்குள் வர முடியாது என்றொரு நிலை உருவாகியுள்ளது. இப்படி ஒரு ஆணையைப் பிறப்பித்துவிட்டு, இம்மக்களை ஏமாற்ற, ‘தலித் கிறித்தவர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கப் பாடுபடுவேன்’ என்பது, இம்மக்களுக்கு இழைக்கப்படும் துரோகம் அல்லவா?

‘இந்துத்துவா’ சக்திகளுடன் சேர்ந்ததால், அவர்களின் கட்டளைக்கு எல்லாம் அடிபணிந்து - திராவிட இயக்கக் கொள்கைகளுக்கு எதிராக, திராவிட கட்சிகளே செயல்படும் நிலை உருவாகியுள்ளது. இல்லை எனில், இப்படி ஒரு ஆணையை இயற்ற வேண்டிய நிர்பந்தம் என்ன?

**“ பிறப்பால் கிறித்துவராக இருப்பவர், இந்துவாக மாறினால், அவர் ஆதிதிராவிடர் சாதிச் சான்றிதழ் பெறவோ - இட ஒதுக்கீட்டுக்குரிய சலுகைகளை அனுபவிக்கவோ தகுதி இல்லை. கடிதம் நகல் எண் : 81 நாள் : 19.9.2000 ”**

தேர்தல் வருகிறது என்று தெரியும்; இரண்டு பெரிய தலித் இயக்கங்களும் தமது அணியில் இடம் பெற்றிருப்பதும் தெரியும். ஆனாலும், இந்த மக்களுக்கு எதிராகத்தான் தி.மு.க. அரசு இருக்கும் எனில், இக்கூட்டணியில் உள்ள தலித் கட்சிகள், ஆளும் கட்சிக்கு என்ன நிர்பந்தத்தை கொடுக்கப் போகின்றன என்பதை மக்கள் எதிர்பார்க்கின்றனர். •

- நம் சிறப்புச் செய்தியாளர்



படிப்பகம்

www.padippakam.com

தலித் மக்கள் கவனத்திற்கு

# ஒதுக்கப்பட்டவர்களே ஒதுக்கும்

■ மீனா மயில்




# புதிரை வண்ணார்கள்

கிராமப் புறங்களில் பார்த்தால், தலித் மக்களின் குடியிருப்புகள்தான் - ஊருக்கு வெளியிலோ, ஒதுக்குப் புறமாகவோ ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும். சமூகத்தின் சாதியக் கட்டமைப்பைப் போற்றிப் பாதுகாக்கும் - உயர்சாதியினர் என்று அழைத்துக் கொள்பவர்களின் ஆதிக்கம் அது. அதை மாற்றத்தான் போராட்டங்களை ஆரம்பித்திருக்கிறோம்.

முழுமையான புரிதல் இல்லாத அந்தப் போராட்டங்களைக் கொஞ்சம் நிறுத்திவிட்டு, தலித் மக்கள் அதிகமுள்ள ஊர்களைத் திரும்பிப் பார்த்தோமென்றால் - அங்கேயும் ஊருக்கு வெளியே பனை ஓலை வேயப்பட்ட குடிசைகளைப் பார்க்கலாம். அவை தீண்டாமையின், சாதி வேற்றுமையின் கொடுமைகள் அனைத்தையும் முழுமையாக அனுபவித்த தலித் மக்களே - தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கி வைத்திருக்கும் புதிரை வண்ணார்களுடையவை.

துணிகளை சலவை செய்வதுதான் வண்ணார்களின் குலத் தொழில். வண்ணார்களிலே மூன்று பிரிவுண்டு. நாடார்களுக்குத் துணி வெளுப்பவர்கள் பணிக்கர் என்றும், தேவர்களுக்கு வெளுப்பவர்கள் மூப்பர் என்றும் தலித் மக்களுக்கு வெளுப்பவர்கள் புதிரை வண்ணார்கள் என்றும் அழைக் கப்படுகின்றனர். இதில் பணிக்கர், மூப்பர் இருவருக்கும் சலவை செய்வது, இஸ்திரிபோடுவது என்ற இரண்டே வேலைதான்.



புதிரை வண்ணார்களின் நிலைமை வேறு. பிற சாதியினருக்கு முடி வெட்டுதல், வெட்டியான் வேலை செய்தல், மேளம் அடித்தல், பந்தல் போடுதல் போன்ற வேலைகளை செய்யும் தலித் மக்களுக்குத் துணி வெளுப்பதோடு சேர்த்து மேற்சொன்ன எல்லா வேலைகளையும் புதிரை வண்ணார்களே செய்கின்றனர்.

இப்படி அநியாயத்துக்கு வேலை செய்யும் இம்மக்களுக்கு கூலியாக பணம் எதுவும் கொடுக்கப்படுவதில்லை. தினமும் வந்து மிஞ்சிய சாப்பாட்டை வாங்கிக் கொண்டு போக வேண்டுமென்பது, ஊர்க் கட்டுப்பாடாகவே இருந்து வந்திருக்கிறது. சில இடங்களில் நிலைமை மாறியிருந்தாலும் கூட, இன்னும் வண்ணார்கள் சாப்பாட்டிற்காக பிறர் வீட்டு வாசலில் நிற்பது முற்றிலுமாக மாறிவிடவில்லை. அப்படி சோறு கேட்க நேரிடும் போது வெளிபடும் சலிப்புக் குரலை, திருநெல்வேலி மாவட்டம் - காருகுறிச்சியை சேர்ந்த சரோஜா விடம் கேட்க முடிந்தது. அவர் கூறும்போது,

''சோறு கேட்கப்போனால் இப்பதான் வடிச்சிருக்கோம் அப்புறம் வா என்பார்கள்; அப்புறம் போனால் இப்பதான் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றோம் அப்புறம் வா என்பார்கள்; அப்புறம் போனாலும் சோற்றில் தண்ணீர் ஊற்றிவிட்டோம் நாளைக்கு வா என்று சொல்வார்கள். வண்ணாத்திதானன்னு மதிக்கிறதேயில்ல. மானங்கெட பேசுறாங்க. அதனாலேயே இப்பல்லாம் சோறு வாங்க போறதில்லை'' என்றார்.

'வண்ணான் வராத வீடு விளங்காது' என்ற பழமொழியோடு தான் சலவைத் தொழிலாளர்களின் அடிமைத் தனம் ஆரம்பமாகியது. விரும்பினாலும் விரும்பா விட்டாலும் வீடு வீடாகச் சென்று துணி எடுத்தாக வேண்டும். மூட்டை மூட்டையாக வந்து சேரும் அழுக்குத் துணிகளை வெளுக்க, தினக் கூலி எதுவும் கொடுக்கப் படுவதில்லை. ஆறு மாதத்திற்கு ஒரு முறை அறுவடை நேரங்களில் 16படி நெல் கொடுக்கப்படுகிறது. 16 படியில் ஆறு படி சொத்தையாக இருப்பதை இம்மக்கள் கேள்வி கேட்க முடியாது. துவைப்பதற்கு சோப்பு நீலம் போன்றவை வாங்குவதற்குக் கூட பணம் கொடுக்கப்படுவதில்லை.

இவர்கள் சலவை செய்வது தவிர



படிப்பகம்

www.padippakam.com

முடி வெட்டுதல், சவரம் செய்தல், பந்தல் போடுதல் போன்ற வேலைகளை - தலைமுறை தலைமுறையாக செய்து வருகின்றனர். இப்பணிகளுக்குத் தப்பி, படித்து, நல்ல வேலையில் இருக்கும் ஒரு சிலரும் கூட 'வண்ணானாகவே' அடையாளப்படுத்தப்பட்டு, மரியாதையில்லாமல் நடத்தப்பட்டும் வருகின்றனர்.

மாமண்டூரை சேர்ந்த அருள்தாஸ் முதுகலை படித்திருக்கிறார். சலவை தொழிலாளர் மேம்பாட்டிற்காக சங்கம் ஆரம்பித்து அதில் தீவிரமாக ஈடுபட்டும் வருகிறார். தன் மீது திணிக்கப்படும் தீண்டாமையின் வடிவம் பற்றி கூறுகையில், ''எம்.ஏ. படிச்சிருக்கேன்னு யாரும் என்னை பார்ப்பதில்லை. எவ்வளவு நல்லா பேசினாலும் என் வீட்டில் சாப்பிடத் தயங்குகின்றனர். சங்கத்தில் இருந்து கொண்டு வேலை செய்றதுனால, வண்ணானுக்கு இவ்வளவு திமிராயிடுச்சு என்றெல்லாம் பேசுகிறார்கள்'' என்றார்.

அருள்தாஸ் வேலை பார்க்கும் சங்கத்தின் முயற்சியினால் விழிப்புணர்வு பெற்ற செங்கல்பட்டு மாவட்டத்தில் இருக்கும் கீழவலம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள், 1993ஆம் ஆண்டு ஜுன் 13ஆம் நாளை மனித உரிமை நாளாகக் கொண்டாடினார்கள். அப்போது தீண்டாமை பற்றி வீதி நாடகம் போடப்பட்டது. இதற்கு தலித் மக்களிடம் இருந்து பெருத்த எதிர்ப்பு வந்திருக்கிறது. வண்ணான்கள் தங்களை அசிங்கப்படுத்துவதாகக் கருதிய தலித் மக்கள், மறுநாள் ஊருக்கு வெளியே இருக்கும் சலவைத் தொழிலாளர்களின் குடிசைகளைச் சுற்றி கருவேலம் முட்களை வெட்டிப் போட்டு சிறைப்படுத்தியிருக்கிறார்கள்.

> “ தன்னை யாரும் அடிமைப் படுத்திவிடக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கும் யாரும் - தானும் யாரையும் அடிமைப்படுத்திவிடக் கூடாது என்பதிலும் தெளிவாக இருக்க வேண்டும். இந்த சாதியக் கட்டமைப்புதான் எல்லாவற்றிற்கும் காரணம். ”

பிறகு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு செய்தி போய், இம்மக்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் பிறகும் கூட சலவைத் தொழிலாளர்களின் விவசாயப் பயிர்களுக்கு தண்ணீர் பாயவிடாமல் பிரச்சனை செய்திருக்கிறார்கள்.

இனிமேல் சலவைத் தொழில் செய்வதில்லை என்று கீழவலம் மக்கள் முடிவெடுத்தபோது, இரவு பதினோரு மணிக்கு ஊர் பஞ்சாயத்து கூட்டப்பட்டது. அங்கு வண்ணார்கள் தங்கள் நிலையை தெளிவாகக் கூற, அப்போதைய சட்ட மன்ற உறுப்பினர் குப்புசாமியின் உத்தரவின் பேரில், சலவைத் தொழிலாளர்களை தலித் மக்கள் அடித்திருக்கின்றனர். போலிஸ் வந்து சமாதானப்படுத்திவிட்டுப் போனது. அன்றிலிருந்து இன்று வரை கீழவலம் சலவைத் தொழிலாளர்கள் அந்த வேலையை செய்வதில்லை.

தென் மாவட்டங்களைப் பொறுத்தவரை, சலவைத் தொழில் செய்ய முடியாது என்று இதுவரை யாரும் சொல்லவில்லை. காரணம், அங்குள்ள கிராமங்களில் ஊருக்கு இரண்டு குடும்பங்கள்தான் இருக்கின்றன. இவர்களால் முன்னூறு குடும்பங்களுக்கு மேலிருக்கும் தலித் மக்களைப் பகைத்துக்கொண்டு வாழ முடியாது. இதைப் பலரும் வெளிப்படையாகவே ஒத்துக் கொள்கின்றனர்.



இம்மக்களுக்கு இருக்கும் முக்கியமான பிரச்சனை, சாதிச் சான்றிதழ்தான். அரசாங்க அட்டவணைப்படி பொதுவாக, சலவைத் தொழிலாளர்கள் அனைவரும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் வருகின்றனர். தலித் மக்களுக்கு துணி வெளுக்கும் புதிரை வண்ணார்கள், தாழ்த்தப்பட்டோர் பிரிவில் இடம் பெறுகின்றனர். பிற சாதி சலவைத் தொழிலாளர்கள் தங்களைப் புதிரை வண்ணார்களாக சொல்லி சாதிச் சான்றிதழ்கள் வாங்கிக்கொள்வதால், உண்மையிலேயே எந்தவித சலுகையும் உரிமையும் இல்லாமல் வாழ்ந்து வரும் புதிரை வண்ணார்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடைக்காமல் போகிறது. புதிரை வண்ணார் என்ற சாதியே இல்லையென்று அதிகாரிகள் கூறுவதாக நிறைய மக்கள் குற்றம் சாட்டினர்.

சலவைத் தொழிலை விட்டு விட்ட மக்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடைக்

## அடிமைப்படுத்தும் சடங்குகள்

தலித் மக்களுக்கு புதிரை வண்ணார்கள் செய்யும் திருமண சாவுச் சடங்குகள் - அடிமைத்தனத்தின் உச்சகட்டமாக இருக்கிறது. உயிர் போகிற காரியமாக இருந்தாலும் கூட, வண்ணார்கள் வந்து தலித் மக்களுக்கான சடங்கை செய்து விட்டுத் தான் செல்ல வேண்டும். திருமணம் என்றால் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் துணி கொடுத்தாக வேண்டும்; மண மேடையில் துணி விரிக்க வேண்டும். எல்லா வேலையையும் விட்டு, மூன்று நாட்களும் திருமண வீட்டிலேயே கட்டாயம் இருந்தாக வேண்டும். அவர்கள் எவ்வளவு துணி கொடுத்தாலும் துவைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். கூலி பற்றி பேசக்கூடாது. நிறைய சோறு சாப்பிட்டுக்கொள்ளலாம்.

சாவு வீடுகளில் செய்யப்படும் வெவ்வேறு விதமான சடங்குகள் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. பிணத்தைக் குளிப்பாட்டுதலில் தொடங்கி, தேர் கட்டுதல், மேளம் அடித்தல், புதைத்தல் போன்ற எல்லா காரியங்களையுமே இம்மக்கள் செய்கின்றனர். சில இடங்களில் சுடுகாடு வரும்வரை வண்ணார்கள், பிணத்தை விழுந்து கும்பிட்டுக் கொண்டே வர வேண்டும் என்ற வழக்கமும் இருக்கின்றது. இன்னும் சில இடங்களில் - நீர்மாலை எடுப்போரின் பாதம் மண்ணில் படாமல் இருக்க, சுடுகாடு வரை துணிவிரித்துக் கொண்டே வரவேண்டும் என்பது போன்ற சடங்குகள், இன்னும் நடைமுறையில் இருக்கின்றன. சலவை செய்ய முடியாது என்று சொன்ன மக்களால் கூட, சடங்கை செய்ய மாட்டோம் என்று மறுக்க முடியவில்லை. ■



படிப்பகம்

## 'வண்ணார்கள்' பொதுவுடைமையா?

பொதுவுடைமை ஆக்கப்பட்டவர்கள் போல், வா என்றால் வந்து போ என்றால் போய் கொண்டிருக்கும் புதிரை வண்ணார்கள் இனத்தைச் சேர்ந்த பெண்களின் நிலை, இன்னும் பயங்கரமாகவே இருக்கிறது. இப்பெண்கள் இரவு நேரங்களில் வீட்டை விட்டு வெளியே வர முடியாது. இன்னும் கூட, தலித் மக்கள் இப்பெண்களை எப்பொழுது வேண்டுமானாலும் 'பயன்படுத்தி'க் கொள்கின்றனர் என்றே பலரும் தயங்கித் தயங்கி சொல்கின்றனர். சில இடங்களில் பாலியல் வல்லுறவு நடந்திருக்கிறது. ஆனால், எந்த குற்றமுமே காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட வில்லை. காரணம், பெருவாரியாக இருக்கும் தலித் மக்களைப் பகைத்துக் கொண்டால், என்ன நடக்குமோ என்ற 'பயம்' தான். ■

காமல் போவதற்கான இன்னொரு காரணமாக தலித் மக்களே இருக்கின்றனர். இவர்கள் புதிரை வண்ணார்கள்தான் என்பதை உறுதிப்படுத்த, தலித் மக்கள் சாட்சியம் அளிக்க வேண்டும். 'தங்களுக்கு வெளுக்கமாட்டேன் என்று மறுத்து விட்ட வண்ணானுக்கு எப்படி பரிந்துரைப்பது' என்ற கோபத்தில் தலித் மக்கள் சாட்சியம் அளிக்க முன்வராததால், இம் மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் கிடைப்பதில்லை.

அரசாங்க சலுகைகளை நம்பி எட்டாம் வகுப்பு வரை படித்துவிடும் ஒரு சிலர் கூட சாதிச் சான்றிதழ் கிடைக்காததால், படிப்பைத் தொடர முடியாமல் நிறுத்திவிட்டு மீண்டும் தங்களுக்கு தெரிந்த ஏதாவது ஒரு தொழிலில் தங்களைத் திணித்துக் கொள்கின்றனர். தங்களைப் பழங்குடியினர் பிரிவில் சேர்க்க சொல்வதுதான் - புதிரை வண்ணார்களின் முக்கிய கோரிக்கையாக இருக்கிறது.

அடிப்படை வசதிகள் என்று பார்த்தால், குடியிருக்கும் வீட்டில் தொடங்கி எந்தவித வசதியும் இல்லாமல்தான் இம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். சொந்த பட்டாவோ, அரசாங்கத்தின் தொகுப்பு வீடோ இம்மக்களுக்குக் கிடைக்கவில்லை. கிராமத்தின் ஒதுக்குப்புறமாக இருப்பதால் சாலை வசதியும் இல்லை.

புதிரை வண்ணார்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு இருக்கும் ஒரே யொரு ஆறுதல் தீண்டாமை என்பது, முன்பு போல் தீவிரமாக இல்லை என்பதுதான். முன்பெல்லாம் தலித் மக்களின் கிணற்றில் தண்ணீர் எடுக்கவோ தெருவில் செருப்புப் போட்டு நடக்கவோ முடியாது. இன்னும் தென் மாவட்டங்களில் அச்சம்பட்டி, வடக்கு புதூர், செம்பூர் மாதிரியான சில கிராமங்களில் நிலைமை மாறவில்லை.

முன்பு மாதிரி இல்லை என்று சொல்லப்பட்டாலும் கூட திருமணம், சாவு போன்ற நிகழ்ச்சிகள் தவிர, தலித் மக்கள் வீட்டுக்குள் வண்ணார்கள் நுழைய அனுமதிக்கப் படுவதில்லை. வண்ணார்களுடன் ரத்த சம்பந்தம் செய்து கொள்வதை, தலித் மக்கள் இழுக்காகவே நினைக்கின்றனர்.

காலம் எவ்வளவோ மாறிவிட்ட நிலையிலும் இன்றும் சோறு கேட்டு வாசலில் நிற்க விரும்பாத மக்கள் அங்கீகாரமும், சுயமரியாதையும் வேண்டி மதம் மாறத் துவங்கியிருப்பது இன்னொரு சமூக மாற்றம். செங்கல்பட்டு மாவட்ட மங்கள மாமண்டூரில் 33 குடும்பங்கள் கிறித்துவ மதத்தையும், காயல்பட்டிணத்தில் சில குடும்பங்கள் இசுலாத்தையும் தழுவியிருக்கிறார்கள்.



''எங்கள் மக்கள் ஊருக்கு இரண்டு குடும்பமாக சிதறிக் கிடப்பதால், எங்களால் இந்த சாதியக் கட்டமைப்பை எதிர்த்து ஒன்றுமே செய்ய முடியவில்லை. சாதிக்கு இந்து மதம்தான் காரணம். தொப்பி போட்டு போனால் சாதியைக் கேட்க மாட்டார்களென்றால் - நான் தொப்பி போட்டுக் கொண்டு, ஒரு இசுலாமியனாகத் தயாராக இருக்கிறேன். மதமாற்றமும், கலப்பு மணமும் தான் எங்களின் பிரச்சனைக்கான தீர்வாக இருக்க முடியும். இந்துவாகப் பிறந்தேன்; சாகும்போது இசுலாமியனாகத் தான் சாவேன்.''

''நான் அனுபவித்த சாதிக் கொடுமைகளை என் மகனும் அனுபவிக்க அனுமதிக்க மாட்டேன். நிச்சயமாக நான் கடவுளைத் தேடி இசுலாத்திற்குப் போகவில்லை. சமூக அங்கீகாரம் இசுலாத்தில் கிடைக்கிறது. என்னைப் பொறுத்தவரை இசுலாம் மதமல்ல; மார்க்கம். காரணம், அது எல்லா மனிதனையும் சமமாக மதிக்கிறது'' என்று தனது கோபங்களை பேசி முடித்தார், பெயர் வெளியிட விரும்பாத அரசு ஊழியர் ஒருவர்.

இவர்களுக்கு இருக்கும் இன்னொரு பிரச்சனை, வன்கொடுமைத் தடுப்புச் சட்டம். புதிரை வண்ணார்களுக்கு தலித் மக்களிடம் இருந்துதான் பிரச்சினையே. ஒரு தலித் இன்னொரு தலித்தை அடிமைப்படுத்தினால், அது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வராது. இதனால் எங்காவது அத்துமீறல் நடந்தால் கூட, புகார் கொடுக்க முடியாமல் இம்மக்கள் திணறுகின்றனர். தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ்க் கொண்டு வர வேண்டும் என்பது, இவர்களின் இன்னொரு கோரிக்கை.

அப்புறம், ஓட்டுரிமை பற்றி பேசவே தேவையில்லை. இவர்கள் யாருக்கு என்ன ஓட்டு போட வேண்டும் என்பதை - எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் மக்கள்தான் தீர்மானிக்கிறார்கள். தேர்தல் சமயத்

> **பிற சாதியினர் தலித் மக்களை, வயதில் பெரியவர்களாக இருந்தாலும் கூட, பெயர் சொல்லி மரியாதை இல்லாமல் அழைப்பது போல் - தலித் மக்கள் புதிரை வண்ணார்களை பெயர் சொல்லி மரியாதை இல்லாமல் அழைக்கிறார்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

தில் வரும் தலைவர்களிடம் தங்கள் குறையை சொன்னால், 'உங்க ரெண்டு ஓட்டு முக்கியமா? 300 ஓட்டு முக்கியமா? என்று கேட்கிறார்களாம். ஆக, இம்மக்களுக்கு ஓட்டுரிமையும் இல்லை.



புதிரை வண்ணார்களுக்கென்று ஆங்காங்கே ஒரு சில சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது அவற்றால் அரசாங்கத்திடமிருந்து இஸ்திரி பெட்டி வாங்கித் தருவது போன்ற வேலைகளை மட்டுமே செய்ய முடிகிறது. தென்மாவட்டங்களில் உள்ள சங்கங்களின் நிலையும் இதுதான். இன்னும் விடுதலை உணர்வை கிளப்பிவிடும் பணியை சங்கங்கள் ஆரம்பிக்கவில்லை.

பல போராட்டங்களுக்குப் பிறகு, சமீபத்தில்தான் சலவைத் தொழிலாளர்களுக்கென்று வாரியம் உருவாக்கப்பட்டது. இதில், சலவைத் தொழில் செய்பவர்கள் மட்டுமே உறுப்பினராக முடியும். இந்த தொழிலே வேண்டாம் என்று விவசாயக் கூலிகளாகவோ, கட்டிட வேலைக்கோ போனவர்கள், இந்த வாரிய உறுப்பினராக முடியாது. அந்தந்த தொழிலுக்கான வாரியத்திலும் உறுப்பினராக முடியாது. இதனால் உழைத்து வாழ விரும்பிய மக்கள் எல்லாவித நலனும் மறுக்கப்பட்ட நிலையில், அரசு மற்றும் பொது மக்களின் ஒடுக்குமுறைக்குள் தான் வாழ வேண்டியிருக்கிறது.

'தீண்டாமைக்குள் தீண்டாமை' - 'அடுக்கப்பட்ட மூட்டையில் அடிமூட்டை' என்றெல்லாம் தங்களை அடையாளப்படுத்திக்கொள்கின்றனர் இம்மக்கள். எண்ணிக்கையில் மிகச் சிறுபான்மையினராக இருக்கும் இவர்கள், பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கி இருப்பதாலும், தலித் மக்கள் பிறருக்கு செய்யும் வேலைகள் அனைத்தையும் இவர்கள் தலித் மக்களுக்குச் செய்வதாலும், 'தாழ்த்தப்பட்ட' என்ற பிரிவுக்குள் வரும் பள்ளர், பறையர், அருந்ததியின மக்களே இவர்களை ஒதுக்கி வைத்திருக்கின்றனர்.

சட்டம் மட்டும் ஒழித்திருக்கும் தீண்டாமையையும் அடிமைத் தனத்தையும் சமூகம் ஒழிக்க, புதிரை வண்ணார் போன்று எண்ணிக்கையில் குறைவாகவும் பொருளாதாரத்தில் பின்தங்கியும் சமூக ரீதியாக ஒடுக்கப்பட்டும் இருக்கும் மக்கள் அடையாளம் காணப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

பிற சாதியினர் தங்களை அடிமைப்படுத்துவதை உணர்ந்து போராட்டத்தில் இறங்கியிருக்கும் தலித் மக்கள், முதலில் தங்களை சரிபடுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இன்னொருவரை அடிமைப்படுத்திவிட்டுத் தனக்கான விடுதலைக்கு மட்டும் குரல் கொடுப்பது, எவ்வளவு கேவலமான விஷயம்? அப்படியே தலித் மக்களுக்கு விடுதலை கிடைத்தாலும், அது சமூக விடுதலையாக இருக்காது. மாற்றம் வேரிலிருந்து வரவேண்டும். அப்பொழுது தான் ஒட்டுமொத்த சமூக விடுதலை என்பது சாத்தியமாகும்.

## அடுப்புக்கு திருவிழா

செங்கல்பட்டை சுற்றியுள்ள ஊர்களில் இருக்கும் புதிரை வண்ணார்கள் 'மைலர்' திருவிழாவை கொண்டாடுகின்றனர். பொங்கலுக்குப் பிறகு ஒரு வாரம் கழித்து இத்திருவிழா கொண்டாடப்படுகிறது. 'வெள்ளாவி' வைக்கும் அடுப்பு உடைந்து விடாமல் இருக்கவும், துணிகள் அதிகம் வெந்துவிடாமல் இருக்கவும் - இத்திருவிழா கொண்டாடப்படுகிறது. முன்பெல்லாம் துணிக்கு சிறு சேதாரம் ஏதாவது ஏற்பட்டாலும் கூட, இம்மக்கள் அடித்து துன்புறுத்தப்பட்டிருக்கின்றனர். மற்றவர்களின் அடியிலிருந்து தப்பிக்கவே, இம்மக்கள் அடுப்பை வழிபட்டு 'மைலர்' திருவிழாவை ஒன்று கூடி கொண்டாடத் தொடங்கினார்கள். அது இன்னும் நடைமுறையில் இருக்கிறது. ■

**"'நாங்கள் தலித் மக்களோடு இணைந்து போராடத் தயாராக இருக்கிறோம். ஆனால், வண்ணானை இணைத்துக் கொள்ள - அவர்களுக்குத் தான் தயக்கமாக இருக்கிறது' என்று நிறைய இளைஞர்கள் வேதனைப் படுகிறார்கள்."**

இல்லையென்றால், போராடிப் பெறும் எந்த வெற்றியுமே நிலைக்காது என்பதை தலித் மக்கள் உணர வேண்டும். முதலில் தான் விலங்கு பூட்டி வைத்திருக்கும் மக்களை விடுவித்து விட்டு - அவர்களையும் இணைத்துக் கொண்டு தன் விலங்கை உடைக்கப் போராடுவதே சரி.

தன்னை யாரும் அடிமைப்படுத்தி விடக்கூடாது என்பதில் தெளிவாக இருக்கும் யாரும் - தானும் யாரையும் அடிமைப்படுத்திவிடக் கூடாது என்பதிலும் தெளிவாக இருக்க வேண்டும். இந்த சாதியக் கட்டமைப்புதான் எல்லாவற்றிற்கும் காரணம். அதை உடைக்கும் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் எல்லோரையும் இணைத்துக் கொள்வதே சரி. ''என்னை யாருமே சாதி வித்தியாசம் பார்த்து ஒதுக்கக்கூடாது, ஆனால் நான் மட்டும் சாதி பார்த்து மக்களை அடிமைப்படுத்துவேன்'' என்ற சிந்தனை உள்ள யாரும் - சமூக விடுதலைப் போரில் கலந்து கொள்வதற்கான தகுதியை இழந்து விடுகிறார்கள். இவ்விஷயத்தில் தலித் மக்கள் இன்னும் நிறைய மாறியாக வேண்டும் என்றே தோன்றுகிறது.

'நாங்கள் தலித் மக்களோடு இணைந்து போராடத் தயாராக இருக்கிறோம். ஆனால், வண்ணானை இணைத்துக் கொள்ள அவர்களுக்குத் தான் தயக்கமாக இருக்கிறது' என்று நிறைய இளைஞர்கள் வேதனைப்படுகிறார்கள். இதற்கு சமூக விடுதலைபற்றி பேசும் தலித் தலைவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்பதுதான் இப்போதைய கேள்வி. ●

களப்பணி உதவி : சுடலை மணி



படிப்பகம்

www.padippakam.com

# ஆப்கான் நாட்டின் 'ஆர்.எஸ்.எஸ்.'



## பண்பாட்டைச் சிதைக்கும் 'பாசிஸ்டு'கள்

■ 'விடுதலை' க. ராசேந்திரன்

இடிக்கின்ற மதவெறியர்கள் இந்தியாவுக்கு மட்டும் சொந்தமல்ல; அவர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் திரிகிறார்கள்! மதவெறி, மனித மாண்புகளை அழிக்கச் செய்து விடுகிறது. மனித நேயத்தை உருக்குலைத்து விடுகிறது; வரலாற்றுச் சுவடுகளை அழிக்க முயலுகிறது; அதற்காகவே இயக்கங்களை நடத்துகிறது. இந்த வரிசையில் அண்மையில் இடம் பிடித்துள்ள அமைப்பு தலிபான்!

ஆப்கானிஸ்தான் நாட்டின் பல பகுதிகளைத் தனது ராணுவத் தாக்குதல் மூலம் ஆக்கிரமித்துக் கொண்டு, முஸ்லிம் மதவெறி ஆட்சியை நடத்தி வரும் அமைப்பு தலிபான். ஆப்கானிஸ்தான் நாட்டில் உள்நாட்டு சிவில் யுத்தம் மூலம், தான் கைப்பற்றியுள்ள பகுதிகளில், மதவெறிச் சட்டங்களை ராணுவத்தின் மூலம் கட்டவிழ்த்து விடுகிறது இந்த அமைப்பு.

ஆப்கானில் வாழும் இந்தியர்கள், தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள தனித்த உடைகளை அணிய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ள இந்த அமைப்பு, அவர்களின் உடலிலும் தனி அடையாளம் ஏதாவது இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. இப்போது உலகச் சிறப்புமிக்க புத்தரின் சிலைகள் அங்கே தகர்க்கப்படும் காட்டுமிராண்டித்தனத்தை, தலிபான் கட்டவிழ்த்துள்ளது.

> **நாகர்ச்சுனா - கொண்டா என்ற பள்ளத்தாக்கில் (தற்போது ஆந்திராவில் உள்ள பகுதி) அமைந்திருந்த பவுத்த கட்டிடங்கள், நினைவுச் சின்னங்கள் அனைத்தையும், ஆதிசங்கரர் தனது சீடர்களுடன் வந்து நிர்மூலமாக்கினார்.**

ஆப்கானிஸ்தானில் உள்ள அனைத்து சிலைகளையும் உடைத்துவிட வேண்டும் என்று தலிபான் தலைவர் பிப்ரவரி 26ஆம் தேதி - மதத்தின் பெயரால் - ஒரு ஆணையைப் பிறப்பித்தார். தலிபான் மதவெறி ராணுவம், டாங்குகளையும், பீரங்கிகளையும், ராக்கெட்டுகளையும், வெடிமருந்துகளையும் பயன்படுத்தி, உலகப் புகழ்மிக்க புத்தருடைய சிலைகளை எல்லாம் உடைத்து, சிதைத்து வருகிறது. உலகின் மிக உயரமாக நிற்கும் தோற்றத்தில் உள்ள பாமியன் புத்தர் சிலையும் தகர்க்கப்பட்டு வருகிறது. இதற்கு உலகம் முழுவதுமிருந்தும் கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன.

'யுனெஸ்கோ' நிறுவனமும் இந்த மதவெறி அடாவடியை - கலாச்சார வன்முறையை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தும், மதவெறியர்கள் செவிசாய்க்கவில்லை. ''நாங்கள் உடைப்பதெல்லாம் வெறும் கற்கள்தான்'' என்கிறார் ஓமர். ''உலக நாடுகளின் எதிர்ப்புகள் வெறும் நாடகம்'' என்கிறார் அவர். பல இஸ்லாமிய நாடுகளும் தலிபான் நடவடிக்கையைக் கண்டித்துள்ளன. தலிபானை அங்கீகரித்துள்ள 3 நாடுகளில் ஒன்றான பாகிஸ்தானும், தனது அதிருப்தியைத் தெரிவித்து விட்டது. தலிபான் மதவெறியர்கள், பிற மத நம்பிக்கையாளர்களின் எதிர்ப்புகளைப் புறக்கணிப்பதாக அறிவித்து விட்டனர்.

இந்தியாவில் வாஜ்பேயி அரசும், ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. மற்றும் அதன் பரிவாரங்களும், தலிபான் மதவெறிக்கு எதிராக - கடும் கண்டனத்தைத் தெரிவிக்கக் கிளம்பியிருப்பதுதான் இதில் அதிசயமாக இருக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கியவர்கள், புத்தர் சிலை உடைப்பை எதிர்த்துப் போர்க்கோலம் பூண்டிருப்பது, வியக்க வைக்கிறது. அதாவது, 'ஆப்கானிஸ்தான் ஆர்.எஸ்.எஸ்.' - தலிபானை, இந்தியாவின் ஆர்.எஸ்.எஸ். கண்டிக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் - வேத பார்ப்பனீய மதத்தின் பெயரில் பார்ப்பனர்கள்நிகழ்த்தி வந்த சமூக ஒடுக்குமுறைக்கு எதிராக முதல் புரட்சிக் குரலைக் கொடுத்தவர் புத்தர். அவர் உருவாக்கியது ஒரு மதமல்ல; ஒரு மார்க்கம். தந்தை பெரியாரும், டாக்டர் அம்பேத்கரும் புத்த மார்க்கத்தை நேசித்தவர்கள். டாக்டர் அம்பேத்கர் புத்த மார்க்க நெறிகளைத் துல்லியமாக ஆய்வு செய்து, உலக இலக்கிய வரலாற்றில் ஒன்றாக மதிக்கக் கூடிய அளவில் எழுதிய ஆய்வு நூல்தான் - 'புத்தரும் அவர் தம்மமும்'

இந்தியத் துணைக் கண்டத்தில் உருவான புத்தமார்க்கம் - இந்த மண்ணிலே சுவடு தெரியாமல் அழிக்கப்பட்டு விட்டது. ஆப்கானிஸ்தானின் 'தலிபான்கள்'இந்தியாவிலேயே வேதகாலம் முதற்கொண்டு, முழுவீச்சுடன் இங்கே செயல்பட்டு வந்திருப்பதற்கு, எத்தனையோ வரலாற்றுச் சான்றுகளை அடுக்கடுக்காக எடுத்துக் காட்ட முடியும்.

புத்த மார்க்கத்தின் செல்வாக்கி



படிப்பகம்

னால், நெருக்கடிக்குள்ளான பார்ப்பன வேத மதத்துக்கு மீண்டும் உயிரூட்டியவர் ஆதிசங்கரர் என்ற பார்ப்பனர். அழிந்து கொண்டிருந்த பார்ப்பனீயத்தை நிலைநிறுத்தி, வர்ணாசிரம அமைப்பை நிலைப்படுத்த, அவர் முன்வைத்த தத்துவம்தான் 'அத்வைதம்'. தனது வாழ் நாள் முழுவதிலும் - பவுத்தர்களை ஈவிரக்கமின்றித் தாக்கி அழித்து வந்த அந்தப் பார்ப்பனர், புத்த மடங்களைப்போல், புத்தத்தை ஒழிக்க சங்கர மடங்களை நாட்டின் நான்கு திசைகளிலும் உருவாக்கினார்.

பார்ப்பனீயத்துக்கு உரமூட்டிவந்த பல்லவர், சாளுக்கியர் ஆட்சிகளை அவர் பயன்படுத்தி, பவுத்தர்களையும், புத்த சிலைகளையும் அழித்தார் என்பது வரலாறு. நாகர்ச்சுனா - கொண்டா என்ற பள்ளத்தாக்கில் (தற்போது ஆந்திராவில் உள்ள பகுதி) அமைந்திருந்த புத்த கட்டிடங்கள், நினைவுச் சின்னங்கள் அனைத்தையும், ஆதிசங்கரர் தனது சீடர்களுடன் வந்து நிர்மூலமாக்கியிருப்பதை - அந்தப் பகுதியில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்ட மேல் நாட்டு ஆய்வாளர் எ.எச். லாங்கர்சட், தனது ஆய்வில் நிறுவியிருக்கிறார். இரக்கமே இல்லாமல், அச்சமூட்டக் கூடியவகையில், அழித்தொழிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகிறார்.

இப்போதுள்ள சபரிமலை அய்யப்பன் கோயிலே பவுத்த கோயிலாக இருந்ததுதான் என்று முன்னாள் மத்திய சட்ட அமைச்சர், பனம்பள்ளி கோவிந்த மேனன் குறிப்பிடுகிறார். அய்யப்பன் வழிபாட்டில் சாதி வேறுபாடுகள் இல்லாமல் இருப்பதற்குக் காரணம், அது ஏற்கனவே பவுத்த வழிபாட்டுத் தலமாக இருந்தது தான் என்ற கருத்தையும் அவர் எடுத்துக் காட்டுகிறார்.

அதேபோல் புத்த சமய பெண்துறவிகளின் மடமாக விளங்கிய மதம்தான் - பிற்காலத்தில் இந்துக்களால் பகவதி அம்மன் கோயிலாக மாற்றப்பட்டது என்றும், இந்துக்கள் ஆபாசப்பாடல்களைப் பாடி, ...ட்டி பெண்துறவிகளை வெளியேற்றிய ...ாக அவர் குறிப்பிடுகிறார். ('The ...ecret Chamber' என்ற நூலுக்கு, கோவிந்த ...மன்ன் எழுதிய அணிந்துரை, 1969ஆம் ...ண்டு)

குமரி மாவட்டத்தில் மண்டைக் ...ட்டில் உள்ள மண்டைக் காட்டம்மன் ...காயில், காஞ்சி காமாட்சி கோயில் ...ான்ற கோயில்களெல்லாம் முன்னாள் பவுத்தக் கோயில்களே என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இப்படி ஏராளமான எடுத்துக்காட்டுகளைப் பட்டியலிட முடியும்.

அண்மையில் நடந்த ஒரு வரலாற்று மோசடியையும் குறிப்பிட வேண்டும். சிந்து வெளி நாகரீகம் திராவிடர்களின் நாகரீகம் அல்ல என்றும் இந்நாட்டின் பூர்வக்குடிகள் ஆரியர்கள்தான் என்ற கருத்தை நிலை நாட்டும் முயற்சியில் - இந்துத்துவா வெறியர்கள் ஒரு வரலாறைப் புரட்டும் நூலை எழுதினர். இவர்களின் வரலாற்றுப் புரட்டுகளை, ஆதாரங்களுடன் மறுத்த ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில், இந்தியாவைப் பற்றிய ஆய்வுத் துறையில் பணியாற்றும் மைக்கல் விட்சல், ஸ்மீவ் பார்மர் ஆகியோர் இணைந்து ஆங்கில பத்திரிகையான 'பிரன்ட் லைனில்' மறுப்புக்கட்டுரை ஒன்றை எழுதினர்.

அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு முத்திரையில் - எருதுவின் உருவத்தை கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி, குதிரையாக மாற்றிக்காட்டும் மோசடியை இந்துத்துவா ஆய்வாளர்கள் செய்திருந்ததை, இந்த ஆய்வாளர்கள் ஆதாரத்துடன் அம்பலப்படுத்தி இருந்தனர். மொகஞ்சதாரோ, அரப்பா நாகரீகத்தில் குதிரைகள் பயன்படுத்தப்பட்டன என்பதை நிலை நாட்டி, குதிரையைப் பயன்படுத்தியவர்கள் ஆரியர்கள் என்பதால், அங்கே நிலவியது ஆரிய நாகரீகம்தான் என்று நிலைநாட்டும் ஒரு வரலாற்று மோசடியை அவர்கள் செய்தனர்.

இப்படி வரலாற்றுச் சின்னங்களை அழிப்பது; தொன்மங்களைச் சிதைப்பது என்பதெல்லாம், மத - இன வெறிப் பாசிசப் போக்குகள். இங்கே இந்து பாசிசம் செய்த அதே 'திருப்பணி'யைத்தான் ஆப்கானில் - இஸ்லாமிய பாசிஸ்டுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் அனைத்து 'இந்து'க்களுக்கும் பிரதிநிதிகள் அல்ல. அதேபோல தலிபான்களும் அனைத்து முஸ்லிம்களின் பிரதிநிதிகளும் அல்ல. இந்தப் பாசிச வெறியர்களுக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதுதான், சமுதாய விடுதலைக்களத்தில் நிற்கும் போராளிகளின் கடமையாகிறது. ●



## பூகம்பத்திலும் ஜாதி

குஜராத்தில், எல்லாம் இடிந்து தரை மட்டமாகி விட்டது. ஆனால், இவ்வளவு பெரிய பூகம்பத்தால் கூட, ஜாதியை புதைத்துவிட முடியவில்லை என்பதுதான், எதார்த்தம். நிவாரணப்பணிகளின் போது, தலித் மக்களுக்கென தனி வாழ்விடங்களும், பிற சாதியினருக்குத் தனி இடங்களும் ஒதுக்கப்பட்டன; நிதி உதவி, உணவு, உடைமை பகிர்ந்தளிப்பது என அனைத்திலும் சாதிப் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது என்பது, மிகக் கொடுமையானது.

பூகம்பத் துயரத்தை ஓவியத்தில் பதிவு செய்திருக்கிறார் கு. புகழேந்தி. சென்னையில் பிப்ரவரி 21முதல் 24வரை தியாகராயர் நகரில் உள்ள பள்ளியில் 'சிதைந்த கூடு' என்ற தலைப்பில் 150 அடி நீள தொடர் ஓவியக் கண்காட்சி ஒன்றை சிறப்பாக நடத்தினார்.


"நான் ஏன் இந்து அல்ல"

இந்துத்துவா பற்றிய
ஒரு சூத்திர விமர்சனம் :
தத்துவம் பண்பாடு மற்றும்
அரசியல் பொருளாதாரம்

காஞ்சா அய்லய்யா

பக்கம் : 184 விலை : 75

தலித் முரசு வாசகர்களுக்கு இந்நூல் ரூ. 65க்கு கிடைக்கும். அதற்கு இந்த விளம்பரத்தை வெட்டி அனுப்ப வேண்டும். ஏப்ரல் 2001 வரை மட்டுமே இச்சலுகை உண்டு. (எம்.ஓ. மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்)

கிடைக்குமிடம்

'அடையாளம்', எச் 15/193,
2ஆவது மாடி, கறுப்பூர் சாலை
புத்தாநத்தம் - 621 310

www.padippakam.com

# வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழா

திருமதி. ஜானகி அம்மாள் - திரு. அன்பழகன்
அவர்களின் திருநிறைச் செல்வன்

## அ. ரவிச்சந்திரன் DECE

*( Engineer - HCL Comnet )*

அவர்களுக்கும்

திருமதி. விஷ்ணுகனி - திரு. திரவியம்
அவர்களின் திருநிறைச் செல்வி

## தி. ஜுலியட் B.Com.

*( Income Tax - Mumbai )*

அவர்களுக்கும் நடைபெற்ற திருமணத்திற்கு

வருகை புரிந்து தலைமை தாங்கிய

## திரு. பெ. சந்திரசேகரன்

'தலித் முரசு' ஆசிரியர் அவர்களுக்கும்

மற்றும் வாழ்த்தி உரையாற்றிய

| | |
|---|---|
| திரு. எஸ். பால்ராஜ் | ( தெற்கு காரசேரி ) |
| திரு. த.மு. பொற்கோ | செயலாளர் - தி.மு.க. மும்பை |
| திரு. வி. தேவதாசன் | தலைவர் - புறநகர் தி.மு.க. மும்பை |
| திரு. பி. ரத்தினசாமி | பொருளாளர் - தி.க., மும்பை |
| திரு. நெல்லை வளவன் | தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, மும்பை |
| திரு. பி.கே. சங்கர் | தலைவர் - மனித நேயம், பார்லா |
| திரு. எம். ஜெயம் | தலைவர் - திருவள்ளுவர் பவுண்டேசன் |
| திரு. வி. நடராஜன் | *Chief Engineer (O.N.G.C. - Mumbai)* |
| திரு. பாலகிருஷ்ணன் | *Ex. M.L.A.* |

அனைவருக்கும் நன்றி!

**- எஸ்.எஸ். அன்பழகன்,** மும்பை

படிப்பகம்

www.padippakam.com



# சாதி வெறிக்கு 'மேலவளவு' பாடம் கற்பிக்குமா?



க. முருகேசன்

வானம்பார்த்த கரிசல் பூமிதான் அந்த மண். ஆனால், 'மானம்' முக்கியம் என்று நிரூபித்த சிவந்த மண்ணாய் மக்களிடம் பரவியிருக்கிறது. ரத்தச் சகதியாய் மாறிய அந்த மண் மேலவளவு. 1997 ஜூன் 30 - மதுரை பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களிடையே எழுச்சியை உருவாக்கிய மண்ணாய் - மேலவளவு மாறிப் போனதற்குக் காரணம், மாவீரன் முருகேசன்.

''அரசு தந்த இட ஒதுக்கீட்டின் படி, ஒரு சேரித்தமிழனை பஞ்சாயத்து தலைவராகக்கூட வர அனுமதிக்க மாட்டோம்'' என்கிற சாதி வெறியாட்டத்தை வன்முறை மூலம், அரசுக்கு எச்சரிக்கை விடுத்த போக்காக இந்த சம்பவம் நம்முன் நிற்கிறது. 'விடுதலைச் சிறுத்தை'களின் தொடர் போராட்டங்கள், பேரணி, பிரச்சாரங்களின் மூலம் சாதிய வன்முறையை எதிர்த்து நிற்க முடிந்தது.



பூபதி

மேலவளவு மட்டுமல்ல, கீழவளவு, தும்பைபட்டி, கொட்டாம்பட்டி, போன்ற மேலூர் ஒன்றியங்களில் மிக மோசமாக நடக்கும் கள்ளர்களின் காட்டுத்தனத்தை 'விடுதலைச் சிறுத்தை'களின் கலகத்தனம் தடுத்து நிறுத்தியது. மேலவளவில் படுகொலைக்குள்ளான 6 பேரின் குடும்பத்தினருக்கும் மேலூரில் அடித்துக் கொல்லப்பட்ட சவுந்திரராஜன் குடும்பத்துக்கும் உதவி நிதி, வேலை போன்றவை தொடர்போராட்டங்கள் மூலம் கிடைத்தன.



செல்லத்துரை

இதுவெல்லாம் கடந்த காலம். வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், இந்தப் 'பகுதி' மட்டும் ஒரு நிமிடம் சுழலும் பூமியை நிறுத்தி வைக்கும். அந்தளவுக்கு 'சனநாயகத்தை' வெட்கப் பட வைத்திருக்கிறது. இன்றைக்கு என்ன நிலையில் மேலவளவு வழக்கு இருக்கிறது? இந்த வழக்கையே உயிர் மூச்சாகக் கொண்டு, இரவும் பகலும் உழைக்கும் வழக்கறிஞர் ரத்னம் அவர்களே இது குறித்து கூறுகிறார்:



சேவுக மூர்த்தி

''இந்தக் கொலை வழக்கில் 40 பேர் மீது குற்றச்சாட்டு பதிவாகியுள்ளது. இதில் முதல் குற்றவாளியான ராமர், 2001இல் தான் கைதே ஆகியுள்ளார். அந்தளவுக்குப் போலிசின் வேகம் இருக்கிறது'' என்று ஆவேசப்படும் வழக்கறிஞர் ரத்னம் தலைமையில் இவ்வழக்கில் மட்டும் 74 வழக்கறிஞர்கள் இணைந்து செயல்படுகின்றனர்.



க. ராஜா

''மதுரை லீலாவதி கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளிகளும் கள்ளர்கள்தான். இவர்களை எதிர்த்துச் செயல்பட்ட கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மதுரை எம்.பி. மோகனும் கள்ளர்தான். ஆனாலும் மதுரை நீதிமன்றத்தில் விசாரணை நடக்கும்போது, தி.மு.க.வைச் சேர்ந்த கள்ளர் சாதிப் பெண்கள், எம்.பி. மோகனுக்கு கொலைமிரட்டல் விடுத்தனர். அந்தளவுக்கு அவர்களின் ஆதிக்கம் அங்கு உள்ளது. ஒரு எம்.பி.க்கே இந்த கதி என்றால், இந்த மேலவளவு வழக்கு எம்மாத்திரம்? அதனால் தான் இந்த வழக்கு மதுரையில் நடந்தால், சாட்சிகள் மிரட்டப்படுவார்கள்; ஒழுங்காக வழக்கு நடக்காது என்று சேலம் தனி நீதிமன்றத்தில் மாற்றல் வாங்கியுள்ளோம்'' என்றார்.



மூக்கன்

சேலம் தனி நீதிமன்ற நீதிபதியின் பெயர் ராமலிங்கம். இவர்தான் லீலாவதி கொலை வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு ஆயுள்



சவுந்தரராஜன்



படிப்பகம்

www.padippakam.com

தண்டனை வழங்கியவர். இவரும் கள்ளர் இனத்தைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தகுந்தது. 'சரி, மதுரையிலிருந்து சேலத்திற்கு மாற்றல் வாங்கியாச்சு. இனி இந்த வழக்கு என்னவாகும்?' அதற்கும் வழக்கறிஞர் ரத்னமே பதில் சொல்கிறார்.


'செகுடந்தாளி' முருகேசன்

''மார்ச் மாதம் கடைசி தேதிக்குள் வழக்கையே முடிக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதன் படி இந்த வழக்கை சக வழக்கறிஞர்களோடு பார்த்து வருகிறேன். சாட்சிகளைப் பாதுகாத்து வருகிறேன். உறுதியாக இந்த வழக்கு, ஆதிக்க சாதி வெறியர்களுக்கு ஒரு பாடமாக அமையும்'' என்றார்.

இத்தகைய கொடூர சாதி வெறியர்களுக்கு சட்டம் தூக்குத் தண்டனை தந்தாக வேண்டும் என்று ஆதங்கப்படுகிற - இறந்த 7 பேரின் மனைவிமார்களின் ஆவேசத்தை வழக்கறிஞரிடமே முன் வைத்தோம்.

''இந்திய தண்டனைச் சட்டம் 302ஆவது பிரிவின் படி கொலைக் குற்றவாளிகளுக்கு, சட்டத்தில் தூக்குத் தண்டனை தான் தரப்படும். ஆனால், வழக்கின் தன்மை, சூழலைப் பொறுத்து இப்போதெல்லாம் 302ஆவது பிரிவுக்கு ஆயுள் தண்டனைதான் தருகிறார்கள். இந்த மேலவளவு வழக்கு, விசித்திரமானது, அபாயகரமானது. ஆகவே, வழக்கு எப்படியானாலும் முடியலாம்'' என்று 'சஸ்பென்ஸ்' வைத்தார்.

சமூகத் தளத்திலும் அரசியல் தளத்திலும் 'மேலவளவு' எப்படி முக்கியத்துவம் வாய்ந்திருக்கிறதோ - அதேபோல் கருரையடுத்துள்ள 'செகுடந்தாளி'யும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பயணித்துக் கொண்டிருந்த பேருந்தில், கவுண்டர் சாதியைச் சேர்ந்த ஒரு சாதிவெறியனின் பக்கத்தில் உட்கார்ந்த ஒரே 'குற்றத்திற்காக' முருகேசன் என்கிற தாழ்த்தப்பட்ட தோழர் அடித்துக் கொல்லப்பட்டார்.


வழக்குரைஞர் ரத்தினம்

செகுடந்தாளி முருகேசன் கொலை வழக்கில், குற்றம் சுமத்தப்பட்ட 5 கவுண்டர்களுக்கு நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியது. குற்றவாளிகள் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், சிறைக்குள் அடைக்கப்பட்ட அந்தக் குற்றவாளிகள், 'சவால் விட்டு' 55ஆவது நாள் பிணையில் விடுதலை ஆனார்கள். இந்த படிப்பினையை மேலவளவு வழக்கிலும் வழக்கறிஞர்கள், சமூகப் போராளிகள், மானுட விடுதலையாளர்கள் ஆழ்ந்து பார்க்க வேண்டும். **எந்த விதத்திலும் மேலவளவு கொலையாளிகள் தப்பித்து விடக்கூடாது.**

(புகைப்பட விளக்கம் முன்பக்கம் உள்ள ஏழுபேரு மேலவளவில் அரசியல் அ காரத்திற்கான உரிமைப் பே ரில் உயிர் நீத்தப் போரா கள். செகுடந்தாளி முருகேசன், தீண்டாமை எதிர்த்து உயிர் நீத்த மாவீரர்.)

- ஜெயரா

SUMATHI OPTICALS

*Plastic, Photochromatic, Hi-Index Sunglass, Frames available*

அதிநவீன முறையில் செய்யப்பட்ட கண் கண்ணாடிகள் மற்றும்
பிரேம்கள் மொத்த விற்பனைக்கும் - உற்பத்தி விலைக்கே கிடைக்கும்.

A. VICTOR

33, Jawaharlal Nehru Salai, Thirumangalam, Anna Nagar (W) Near Water Tank
Chennai - 600 040 ☎ : 626 95 86



படிப்பகம்

www.padippakam.com




# ஜோதிராவ் புலே எனும் புரட்சியாளர்

நூல் : மகாத்மா ஜோதிராவ் புலே ஆசிரியர்: தனஞ்செய் கீர் தமிழில்: வெ. கோவிந்தசாமி பக்கம் : 326 விலை : ரூ. 125 வெளியீடு : விடியல் பதிப்பகம், 11, பெரியார் நகர், மசக்காளி பாளையம், வடக்கு சிங்கா நல்லூர், கோயம்புத்தூர் - 641 015

■ **அழகிய பெரியவன்**

*'வாழ்ந்து வரும் எந்த ஒரு நாடும் தன் விடுதலை வீரர்களை மறக்க முடியாது. மேன்மையான விடுதலை வீரர்களையும், நாட்டின் பாதுகாவலர்களையும் மறந்துவிடும் மக்கள் நிச்சயமாக தங்கள் பிந்தைய தலைமுறையினருக்கு ஒளியையும், நீதியையும் கை மாற்றித் தர முடியாது!*

- தனஞ்செய் கீர், 'மகாத்மா ஜோதிராவ் புலே' நூலில்

'பிரிமைஸ்' - எனப்படும் திரைப் படத்துக்கான ஒரு வரி கதை எனில், ஜோதிராவ் புலேயின் கதையை இப்படிச் சொல்லிவிடலாம்: 'மூடப் பழக்கங்களும், சாதிக் கொடுமைகளும் நிறைந்த 1800களில் தோன்றிய ஒரு மாபெரும் சமூகப் புரட்சியாளர்'. தமிழகத்தில் வாழ்ந்திருந்த பெரும் வீரர்களை நாம் ஒரு வரியில் 'அடக்கி' - ஒரு திரைப் படத்தின் கதையைப் போல மூளையின் ஒரு மூலையில் சொருகி வைத்திருக்கிறோம். பாமரத்தனமான திரைப்பட சுவைகளில் தோய்ந்திருக்கும் நம் தமிழ் மனங்களுக்கு இது எளிதானது. ஆனால், இன்று நமக்குத் தேவை பெரும் கதையாடல்கள், உண்மைகள், பதிவுகள், ஆவணங்கள்.

'விடியல் பதிப்பகம்' தமிழ்ப் படுத்தியிருக்கும் புகழ் பெற்ற வரலாற்று ஆசிரியரான தனஞ்செய் கீரின் - 'மகாத்மா ஜோதி ராவ் புலே - இந்திய சமூகப் புரட்சியின் தந்தை' என்ற நூல் நம் முன்னே ஒரு பெரும் வரலாறாய் விரிகிறது.

ஜோதிபா என்று அழைக்கப்படும் ஜோதிராவ் 1827இல் பிறக்கிறார். அவர் அப்பா ஒரு பண்ணை வேலையாள். அம்மா சிம்னாபாய் - பெண்களுக்கும், தலித் மக்களுக்கும் மிகவும் இருண்ட காலமாய் இருந்த எண்ணூறுகளிலே பிறக்கும்படி சபிக்கப்பட்ட ஒரு பாமரப் பெண். இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்து விட்டு இறந்து போகிறார். ஜோதிபாயின் குடும்பம் சத்திரியமாலி சாதியைச் சேர்ந்ததென்றாலும், தாத்தா கிராம ஊழியராகப் பணியாற்றியிருந்தாலும் - உழைத்தே வாழ வேண்டிய நிலையிலிருக்கிறது குடும்பம். ஜோதிபாவின் கல்வி, திண்ணைப் பள்ளியில் தொடங்கி பார்ப்பனர்களின் எதிர்ப்பால் தடைபடுகிறது.

கல்வியைத் தொடங்குகிறார் ஜோதி. தன் 13 வயதில் சாவித்திரியை மணந்து கொள்கிறார். 17 வயதில் தன் கல்வியை ஒரு 'மிஷனரி' ஆங்கிலப் பள்ளியிலே முடித்துக் கொள்கிறார். ஜோதிபாவின் காலத்தை பல ஆதாரங்களுடன் தனஞ்செய் கீர் கண்முன் நிறுத்தும்போது, மனம் கலக்கமடைகிறது. மராட்டியத்தில் அப்போது பார்ப்பன பேஷ்வா மன்னர்களின் கொடுங்கோலாட்சி. எந்த வேலையுமே செய்யாமல், பெரும் தொகைகளை தட்சணையாக வாங்கிக் கொண்டு, சித்பவன் பார்ப்பனர்கள் கொட்டம் அடித்துக் கொண்டிருந்த காலம்.

விவசாயிகளும், தொழிலாளர்களும் கொடுமைப் படுத்தப்பட்டனர். பஞ்ச காலங்களில்கூட வரி செலுத்த வேண்டும். இல்லையேல் கொதிக்கும் எண்ணெயை விவசாயிகளின் குழந்தைகள் மீது ஊற்றுவர். விவசாயிகளுக்கு தண்டனைகளாக முதுகிலே பாறைகள் சுமத்தல், சவுக்கடி, புகையில் அமிழ்த்துதல், காதுகளிலும், தொப்புள்களிலும் வெடிமருந்து தூவுதல் போன்றவை நடைமுறையில் இருந்தன. இந்த காலச் சூழலில்தான் ஜோதிபா புலே ஒரு பெரும் சமூகச் சீர்திருத்த வீரனாக உருவாகிறார். தனது 21ஆம் வயதிலிருந்து 1890 வரையிலான சுமார் 42 ஆண்டுகால சமூக வாழ்க்கையில், ஜோதிபா ஆற்றியிருக்கும் மாபெரும் சமூக சீர்திருத்த செயல்களைப் பட்டியலிட்டால் ஆச்சரியம் மேலிடுகிறது.

● 1848இல் முதல் பெண்கள் பள்ளி தொடக்கம் ● மங், மகர் சாதி பிள்ளைகளுக்கென தாழ்த்தப்பட்டோர் பள்ளிகள் தொடக்கம் ● சுதேசி நூல் நிலையம் தொடக்கம் ● அரசிடம் கல்விக்கென நிதி கேட்டுப் போராடி வெற்றி ● 'சத்திய சோதக் சமாஜ்' - உண்மை நாடுவோர் சங்கம் தொடங்கி அதனை ஒரு பேரியக்கமாக மாற்றுதல் ● 'விதவை'த் திருமணம், ● புரோகிதர் இன்றி திருமணம் நடத்தியது ● பார்ப்பனர் அல்லாதோரும் புரோகிதராகலாம் என்பதை சட்டமாக்கவும், நீதிமன்ற தீர்ப்பைப் பெறவும் உழைத்தல் ● மாற்று விவசாய முறைகள், பண்ணை அமைத்தல் தொடர்பான முயற்சி... இப்படிப் பல முனைகளில் தன் பணிகளை செய்திருக்கிறார் ஜோதிபா.

நூறு ஆண்டுகளுக்கு முந்தைய மக்கள் நிலை - அதிலும் குறிப்பாய் பெண்கள், தலித் மக்கள், விவசாயிகள், தொழிலாளர் ஆகியோரின் நிலை என சமூகத்தின் அத்தனை அடுக்குகளையும் வடித்துத் தருகிறது இந்த நூல். நூலைப் படித்து முடித்ததும் ஒரு சகாப்தத்தின் வழியே பயணம் செய்த நிறைவு, புது பலம் ஆகியன ஊற்றெடுக்கின்றன. இந்த நூலை முன் வைத்து நாம் எழுப்ப வேண்டிய கேள்வி எல்லாம், தமிழகத்தில் இருந்த மாபெரும் சீர்திருத்தக்காரர்களான ரெட்டமலை சீனிவாசன், அயோத்திதாசப் பண்டிதர் போன்றோரின் வாழ்க்கைப் போராட்டங்களை எல்லாம் நாம் ஆவணமாக்கியிருக்கிறோமா என்பதுதான். நாம் வெட்கப்பட வேண்டும். முடிந்தால் அந்தப் பணியைத் தொடங்க வேண்டும்.

**நூலிலிருந்து...**

**"ஜோதிராவ் மீது பொறாமை கொண்டிருந்த நகராட்சி உறுப்பினர்கள், ஜோதிராவ் வீட்டின் வழியாக மலம் அள்ளிச் செல்லுமாறு ஒரு சூழ்நிலையை உருவாக்கி அதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள். இது குறித்து பேசும்போது, ''பார்ப்பன மூட்டைப் பூச்சிகளால் அந்த நகராட்சிக்குத் தொற்று நோய் பரவட்டும். அதன் பெயரை என் முன்னால் சொல்லாதீர்கள்'' என ஜோதிராவ் குறிப்பிட்டார்."**



படிப்பகம்

www.padippakam.com



மேலவளவு முருகேசன், செகுடந்தாளி முருகேசன் போன்ற களப் போராளிகளின் முன்னோடி இமானுவேல் சேகரன். இம்மாவீரன் பெயரில் தென் மாவட்டங்களில் தலித் மக்களைத் திரட்டிப் போராடி வருபவர், **பூ. சந்திரபோசு.** சாதிவெறி பிடித்த மண்ணில் - தாழ்த்தப்பட்ட மக்களிடையே இவர் விடுதலை அரசியலை விதைத்து வருகிறார். சாதி ஒழிப்பு, தமிழ்த் தேசியம், தேர்தல் புறக்கணிப்பு போன்ற கொள்கைகளோடு, மக்கள் விடுதலைக்கான பயணத்தைத் தொடரும் 'தியாகி இமானுவேல் பேரவை'த் தலைவர் சந்திரபோசு அவர்களை - 'தலித் முரசு'க்காக பேட்டி கண்டோம்.

நேர்காணல் : **லிடியா செல்வகுமாரி**



# "தேர்தல் முறையில் தீர்வு இல்லை"

**மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், நம்ம ஆள் எம்.எல்.ஏ., எம்.பி. ஆனால் பிரச்சனை தீர்ந்து விடும் என்று நினைக்கிறார்கள். இது ஒரு மாயை என்று அம்பலப்படுத்துகிறோம். சட்ட மன்றத்தை ஒரு போராட்டக் களமாகப் பார்க்கலாம். ஆனால், அதையே தீர்வாகப் பார்க்கக் கூடாது.**

◇ *அம்பேத்கர் பெயரை முன்வைத்துதான் தாழ்த்தப்பட்ட மக்களை இயக்கமாக்குகிறார்கள். நீங்கள் மட்டும் இமானுவேல் சேகரன் பெயரில் இயக்கம் நடத்துவதன் நோக்கம் என்ன?*

அம்பேத்கர் பெயரைச் சொல்வதில் எந்த முரண்பாடும் இல்லை. இமானுவேல், எங்கள் பகுதியில் களத்தில் இறங்கி அதன் மூலம் மக்களைத் திரட்டியவர். அந்த வகையில் இப்பகுதி தலைவரை முன்னிலைப்படுத்த வேண்டியதால் 'தியாகி இமானுவேல் பேரவை' என்று ஆரம்பித்தோம். இமானுவேல் பெயரில் இயக்கம் நடத்தினாலும் எங்கள் கொள்கை - அம்பேத்கரிசம், பெரியாரிசம், மார்க்சியம்தான்.

சாதி வன்கொடுமைகள் நிறைந்த ராமநாதபுரம் பகுதியில், சாதி ஆதிக்கத்தை இமானுவேல் சேகரன் கடுமையாக எதிர்த்ததால் அவர் கொல்லப்பட்டார். ஆக, மக்களுக்காக மரித்தவர் என்பதால் அவர் பெயரைச் சொல்லியே மக்களைத் திரட்ட வேண்டிய சூழல் உள்ளது.

◇ *இமானுவேல் சேகரன் எப்படி கொலை செய்யப்பட்டார்?*

சைக்கிளில் போகத்தடை, பொதுக் கிணற்றில் நீர் எடுக்கத் தடை, எழவு சொல்லுதல், பிணங்களை எடுப்பது, குழிவெட்டுவது போன்ற இழி செயல்களை தாழ்த்தப்பட்டவர்கள் மீது ஆதிக்க சாதியினர் திணித்தனர். இதேபோல், தாழ்த்தப்பட்ட மக்களை பொதுச்சொத்துகளில் பங்கெடுக்க விடுவதில்லை. தமிழ் நாட்டில் மூன்றில் ஒரு பங்கு சொத்து, கோயில்களில் முடங்கிக்கிடக்கிறது. கோயில்களில் நுழையவோ, கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகையோ கேட்க முடியாது. இப்படியான காலகட்டத்தில்தான் இமானுவேல் சேகரன், எல்லா விதமான சமூக அடக்குமுறைகளையும் மீறி களத்தில் இறங்கினார்.

இத்தகைய அடக்குமுறைகளை, எல்லாசாதி இந்துக்களும் செய்கிறார்கள். ஆனால், களத்தில் அடியாள்களாக வருபவர்கள் - முக்குலத்தோர் எனப்படும் தேவர்கள்தான். இமானுவேல் சேகரனின் போராட்டத்தைக்கண்ட முத்துராமலிங்கத்தேவர், ''நம் சாதி ஆதிக்கத்திற்கு இது ஆபத்து'' என அஞ்சினார். இந்த நேரத்தில் இமானுவேல் சேகரனின் போராட்டத்தை கேள்விப்பட்ட காமராசர், ''நீங்கள் காங்கிரசுக்கு வந்தால் உங்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பைத் தரமுடியும்'' என்று அழைத்ததன் பேரில் இமானுவேல் சேகரன் காங்கிரசில் சேர்ந்தார். முக்குலத்தோர் அனைவரும் முத்துராமலிங்கத் தேவரின் 'பார்வர்டு பிளாக்' கட்சியில் இருந்ததால், தாழ்த்தப்பட்டோர் காங்கிரசில் இணைந்தனர்.

1957இல் நடந்த பொதுத்தேர்தலில், 'பார்வர்டு பிளாக்'கில் நின்ற முத்துராமலிங்கத் தேவருக்கு எதிராக இமானுவேல் சேகரன் காங்கிரஸ் வேட்பாளருக்கு வேலை பார்த்தார். இதன் பிரதிபலிப்பு கலவரத்தில் முடிந்தது. இது, தேர்தல் என்கிற பெயரில் நடந்த மிகக் கொடுமையான சாதிக்கலவரமாகும். கலவரம் முடிந்தபின் 1957 செப்டம்பர் 9ஆம் தேதி நடந்த அமைதிப் பேச்சு வார்த்தையில், முத்துராமலிங்கத் தேவருக்கும் இமானுவேல் சேகரனுக்கும் நேரடியாக மோதல் ஏற்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இந்தப் பேச்சுவார்த்தைக்கு முத்து ராமலிங்கத்தேவர் அழைக்கப்படவில்லை. திடீரென முத்துராமலிங்கத் தேவர் வந்த போது, கலெக்டரிலிருந்து அப்பகுதியில் உள்ள ஆதிக்க சாதியினர் அனைவரும் எழுந்து நிற்கின்றனர்; இமானுவேல் சேகரன் மட்டும் எழவில்லை. இதைப் பார்த்த கலெக்டர், ''என்ன மிஸ்டர் ஒரு தலைவர் வந்திருக்கார்; மரியாதை குடுக் காம உட்கார்ந்து இருக்கீங்க'' என்றார். உடனே இமானுவேல் சேகரன், ''அவர் எனக்குத் தலைவரல்ல; எங்கள் சமூகத்தை அழிக்க நினைக்கிறவர்'' என்றார்.

இது, முத்துராமலிங்கத் தேவருக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. இச்சூழலில் பேச்சுவார்த்தை பாதியில் முடிந்தது. அங்கிருந்து வெளியேறிய முத்துராமலிங்கத் தேவர், ராமநாதபுரத்தில் ஆத்மநாத பிள்ளை என்பவர் வீட்டுக்கு சாப்பிடச் சென்றபோது, ''இந்தப் பகுதியில் ஒரு சின்னப் பையன் என்னைஎதிர்த்துப்பேசுற அளவுக்கு வளர்ந்துட்டு வர்றான்; நீங்கள்ளாம் பார்த்துட்டு சும்மா இருக்கீங்க'' என்று சொல்லிவிட்டு சாப்பிடாமலே போய்விடுகிறார்.

அப்பொழுது, இமானுவேல் சேகரன் பேரையூர் என்கிற கிராமத்திலுள்ள பெருமாள் பீட்டர் என்பவர் வீட்டில் தங்கியுள்ளார். 1957 செப்டம்பர் 11ஆம் தேதி நடந்த பாரதி விழா ஒன்றில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பிய இமானுவேல் சேகரனை, முக்குலத்தைச் சேர்ந்த சாதி வெறியர்கள் வெட்டிக் கொலை செய்தனர்.

**◇ அம்பேத்கரிசம் - பெரியாரிசம் தான் எங்க கொள்கைன்னு சொன்னீங்க. இந்த கொள்கைகளோட மக்களிடம் எந்தளவுக்குப் போயிருக்கீங்க?**

தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான பாதையில், மக்களை அமைப்பாக்கி போராடிக் கொண்டு இருக்கிறோம். எங்கள் அமைப்பு இருக்கிற 300க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள சாதிய அடக்குமுறையைத் தகர்த்திருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பொதுச் சொத்துகளில் பங்கு வேண்டும் என்கிற முழக்கம் - பலரிடமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எடுத்துக் காட்டாக, இளையான்குடி வட்டத்தில் நாகநாதபுரம் என்கிற கிராமத்தில் உள்ள முக்குலத்தோர், புறம்போக்கு நிலங்களை வளைத்துப்போட்டு ஒரு கோயில் கட்டி - தாழ்த்தப்பட்ட மக்களை உள்ளேவிட மறுக்கின்றனர்.

இதற்கு பதிலடியாக, அதே புறம் போக்கு நிலத்தில், தாழ்த்தப்பட்டவர்களுக்கென ஒரு கோயிலைக் கட்டி இருக்கிறோம். 40 தாழ்த்தப்பட்ட குடும்பமே உள்ள நாகநாதபுரத்தில், இப்போது எந்த தாழ்த்தப்பட்டவனும் குழி வெட்டுதல், பிணம் எரித்தல் போன்ற அடிமை வேலைகளைச் செய்வதில்லை. இது மட்டுமல்ல; நாம் இப்படி சாதி ரீதியாக ஒடுக்கப்படுவதற்குக் காரணம் இந்து மதம் தான். ஆகவே, 'இந்துத்துவா'வுக்கு எதிரான செயல்பாட்டில் நாங்கள் நகர்கிறோம். அனைத்து அரசியல் கட்சிகளுமே சாதி இந்துக்களுக்கு ஆதரவாகத்தான் இருக்கிறது என்கிற பிரச்சாரத்தை நாங்கள் முன்வைத்தபோது, பல அரசியல் கட்சிகளின் கொடிக்கம்பங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன.



''40 தாழ்த்தப்பட்ட குடும்பமே உள்ள நாகநாதபுரத்தில், இப்போது எந்த தாழ்த்தப் பட்டவனும் குழி வெட்டுதல், பிணம் எரித்தல் போன்ற அடிமை வேலைகளைச் செய்வதில்லை.''

தேர்தலில் ஓட்டுப்போட வேண்டாம் என்று சொன்னபோது, பல அரசியல் கட்சிகள் சேரிக்குள் நுழைய முடியவில்லை. இந்த நாடாளுமன்றப்பாதை நமக்கு வேண்டாம்; தேர்தலைப் புறக்கணிப்போம் என்கிற எங்களின் கருத்துப் பிரச்சாரம் வெகுவாக மக்களிடம் போய்க் கொண்டிருக்கிறது.

**◇ தேர்தல் புறக்கணிப்புக்கும் தலித் மக்களை ஒருங்கிணைப்பதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது?**

தேர்தலைப் புறக்கணித்தால், தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்று சேர்வார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆனால், இந்தத் தேர்தல் முறையில் தீர்வு இருக்கிறது என்று நம்பக்கூடாது. நம்ம மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், நம்ம ஆள் எம்.எல்.ஏ., எம்.பி. ஆனால் பிரச்சனை தீர்ந்து விடும் என்று நினைக்கிறார்கள். இது ஒரு மாயை என்று அம்பலப் படுத்துகிறோம். சட்ட மன்றத்தை ஒரு போராட்டக்களமாகப் பார்க்கலாம். ஆனால், அதையே தீர்வாகப் பார்க்கக்கூடாது.

சட்டமன்றத்தைப் போராட்டக் களமாகப் பயன்படுத்தும் நம் தலைவர்கள் - பள்ளர், சக்கிலியர், பறையர் மக்களை ஒன்றிணைக்கக் கூடிய கோரிக்கைகளை முன்நிபந்தனையாக வைக்க வேண்டும். இதை யார் ஏற்கிறார்களோ அவர்களோடுதான் கூட்டு என்று அறிவிக்க வேண்டும்.

அப்படி இல்லாமல் தங்கள் போக்கில் செய்வது, இந்த மக்களுக்கு எதிரானது. ஒன்று, விடுதலை அரசியல் அல்லது இந்த மக்களுக்கான முன் நிபந்தனையோடு கூடிய ஒரு தேர்தல் உடன்பாடு. இந்த இரண்டு நிலைப்பாட்டில் தான் மக்களை ஒருங்கிணைக்க முடியும். தேர்தல் புறக்கணிப்பு என்பது மக்களை ஒருங்கிணைக்க எடுத்த முடிவல்ல; இது ஒரு கொள்கை. இந்த நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது சாதியத்தைப் பாதுகாக்கக்கூடியது. இப்படிப்பட்ட நாடாளுமன்றத்தை எதிர்த்துப் போராடாமல், சாதி ஒழிப்பை செய்ய முடியாது; இந்துத்துவாவை அகற்ற முடியாது.

நாடாளுமன்றத்திற்குள் போகிற யாராக இருந்தாலும், சாதி ஒழிப்பை முன்னெடுத்துச் செல்ல முடியாது. அவர்கள் இந்துத்துவாவுக்குள் அடங்கி விடுகிறார்கள். எனவே, தேர்தல் புறக்கணிப்பு என்பதை சாதி ஒழிப்புக்கான இன்னொரு அடையாளமாகத்தான் நாங்கள் முன்வைக்கிறோம். இந்த நாடாளுமன்றத்தில் நிற்கக் கூடிய வேட்பாளர்கள், ஏதாவது ஒரு புரட்சிகர முழக்கத்தைச் சொல்லி, மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்கி விடுகிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

இதை எப்படி அம்பலப்படுத்துவது? இங்குள்ள திராவிட, காங்கிரஸ் போன்ற எந்தக் கட்சியானாலும் தாழ்த்தப்பட்டவர்களை - பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஒடுக்கி வைத்திருக்கின்றன. தலித் மக்களை ஒடுக்குவதில் இவர்கள் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.



அரசு எந்திரமும் சேர்ந்து தலித் மக்களைக் கடுமையாக ஒடுக்கியது. கொடியன்குளம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இப்படி அரசு எந்திரமே சாதிமயமாகி இருப்பதால், இந்த நாடாளுமன்ற முறையை எதிர்க்கிறோம்.

◇ **மாவோ சொன்னது போல் - 'எத்தகைய ஆயுதம் எடுப்பது என்பதை எதிரி தான் தீர்மானிக்கிறான்.' அந்த வகையில் ஆண்டைகளிடம் நாடாளுமன்ற ஆயுதம் உள்ளது. அதை தலித் மக்களும் பயன்படுத்துவதில் என்ன தவறு?**

இந்த நாடாளுமன்றம் என்பது, ஒரு சட்ட வழிப்பட்ட ஆட்சிக்கு உட்பட்டது. நான் ஆட்சிக்கு வந்தால், என் வழிக்கு நாடாளுமன்றத்தை மாற்றுவதோ அல்லது இன்னொருவன் வந்தால் அவன் வழிக்கு மாற்றுவதோ முடியாது. இது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இயங்குகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 'இந்துத்துவா' சட்டமாகும். நாடாளுமன்றம் என்பது அரசினுடைய அங்கம்தான். அரசுக்காக நாடாளுமன்றம் - நாடாளுமன்றத்திற்காக அரசு.

இப்படிப்பட்ட நாடாளுமன்றத்திற்குள் தலித் மக்கள் நுழைவதால், நினைத்ததை எல்லாம் சாதித்திட முடியாது. தலித் மக்கள் மீது நடத்தப்படும் கொடுமைகளைச் சொல்லலாம், கத்தலாம். அவ்வளவு தான் முடியும். கொடுமைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்று சொல்வது, மக்களை ஏமாற்றுவதாகும்.

தாழ்த்தப்பட்டவர்கள் மீது நடத்தப்படும் அடக்குமுறை, கொடுமைகளைத் தடுத்து நிறுத்த யாரால் முடியும்? அரசு எந்திரம் அதைச் செய்ய வேண்டும். இந்த அரசு எந்திரத்தை மக்கள் ஓட்டுபோட்டா தேர்ந்தெடுக்கிறார்கள்? ஆக, இந்த அரசு எந்திரத்திற்கு என ஒரு பண்பு இருக்கிறது. நாம் என்னதான் நாடாளுமன்றத்திற்குள் கத்தினாலும் அரசு எந்திரம்தான் முடிவு எடுக்க வேண்டும்.

ஆனால், அரசு எந்திரமோ சாதி வெறித்தன்மை கொண்டதாக இருக்கிறது. எனவேதான் அம்பேத்கர் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்: ''இங்குள்ள அரசு அதிகாரிகளை வெறும் அதிகாரிகளாக மட்டும் பார்க்காதே; இந்த அதிகாரிகளுக்கிடையில் சாதியும் மதமும் புரையோடிக் கிடக்கிறது. அந்த அதிகாரி தான் செய்ய வேண்டிய கடமை உணர்வை விட, தான் பிறந்த சாதியையும் மதத்தையும் தான் நேசிக்கிறான்.''

இந்த அடிப்படையில் இன்றைய அதிகாரிகளைப் பார்த்தாலே, எவ்வளவு சாதியத் தன்மையுடன் இருக்கிறார்கள் என்பது தெரியும். தாமிரபரணி சம்பவத்தை எடுத்துக் கொள்ளுங்கள். என்ன நடந்தது? லத்திசார்ஜ் செய்து 17 பேரை கொன்று போட்டார்கள். இது குறித்து விசாரணைக்கு வந்த மோகன் குழு, நெல்லை மாவட்டத்தின் போலிஸ் கமிஷனர் சைலேஷ் குமாரிடம் விசாரணை நடத்தியது. 'தடியடி நடந்ததா?' 'வரம்பு மீறி நடந்தது'. 'ஏன் தடுத்து நிறுத்த வில்லை?' 'எவ்வளவோ சொல்லியும் போலிசார் கேட்கவில்லை' என்றார்.

## ''சாதி இந்துக்களுக்கு எதிராக, தமிழ்த் தேசியவாதிகள் களத்தில் நிற்காதது ஏன்?''

● *சேரிமக்கள் பேசுகிற சாதி ஒழிப்புக்கும், தமிழ்த் தேசியவாதிகள் பேசுகிற சாதி ஒழிப்புக்கும் என்ன வேறுபாடு?*

தமிழ்த் தேசம் பெறப் போராடும் தமிழ்த் தேசியவாதிகள், சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்று ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால், சாதிய ஒடுக்குமுறை வரும்போது சாதி ஆதிக்கத்திற்கு எதிராக - சாதி இந்துக்களுக்கு எதிராகக் களத்தில் நிற்க மறுக்கிறார்கள். தியாகு, மணியரசன் போன்றவர்கள் சாதி ஒழிப்புடன் கூடிய தமிழ்த் தேசியம் பேசுபவர்கள். ஆனால், மேலவளவு சம்பவத்தில் சம்பந்தப்பட்ட முக்குலத்தோரை எதிர்த்து என்ன போராட்டம் நடத்தினார்கள்?

ஆக, தமிழ்த் தேசியவாதிகள், கருத்தியலை மட்டுமே வைத்துக் கொண்டு திரிகிறார்கள். காவிரியில் தண்ணீர் வரவில்லை; முல்லை பெரியாறு அணை நிரப்பப்படவில்லை என்றால், தொடர் போராட்டம் நடத்துகிறார்கள். ஆனால், மேலவளவு முருகேசனுக்காக தொடர் போராட்டம் நடத்தணுமா? இல்லையா? ஆக, சாதி ஒழிப்பு என்பது நடவடிக்கையைப் பொறுத்தது; வெறுமனே பேச்சளவில் கிடையாது.

ஆனால், நாம் பேசுகிற சாதி ஒழிப்பு என்பது சாதியின் பேரால் யார் ஒடுக்கப்படுகிறானோ, அவனை சேர்த்துக் கொண்டு போராடுவது. நமக்கும் தமிழ்த் தேசம் தான் முக்கியம்.

ஆக, ஒட்டு மொத்தத் தமிழர்களையும் சாதி ஒழிப்பு அரசியலோடுதான் நாம் வென்றெடுக்க வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்கு - பிற்படுத்தப்பட்டோர் மட்டும் எதிரி இல்லை. இதைத்தாண்டி மய்ய அரசு எதிரி; இந்துத்துவா எதிரி என்கிற அடுத்த கட்ட அரசியலை நோக்கி கொண்டு போகிற கட்டாயத் தேவை நமக்கிருக்கு.

சொல்லப்போனால், அந்தந்த மாநிலங்களில் அனைத்துவகை ஒடுக்குமுறைக்கும் ஆளாகிறவர்கள் தாழ்த்தப்பட்டோர். பிற்படுத்தப்பட்டவனுக்கு மேல் சாதி என்கிற சுகம் இருக்கு. ஆனாலும், அவனுக்கு பொருளாதார ஒடுக்கு முறை இருக்கு. தேசிய ஒடுக்கு முறை இருக்கு; முல்லைபெரியாறு அணையில் பிரச்சனை இருக்கு. தனியார் மயமாதலால் பிரச்சனை இருக்கு. ஆனாலும் அவனுக்கு சமூகத்தில் ஒரு மரியாதை இருக்கு. நான் தேவர், நான் கள்ளரு, நான் வன்னியருன்னு அந்தஸ்து இருக்கு. இதன் மூலம் அவனுக்குப் பிழைக்க வழி இருக்கிறது.

ஆனால், தாழ்த்தப்பட்டவன் சாதியை மறைத்தால் தான் பிழைக்க முடிகிறது. இப்படியான சூழலில்தான், நாம் தமிழ்த் தேசியத்தைக் கட்டியமைக்க வேண்டியுள்ளது. யார் சாதி ஒழிப்பை முன்வைத்து செயல்படுகிறார்களோ - யார் வெகுமக்களைத் திரட்டிப் போராட்டங்களை முன் எடுக்கிறார்களோ, அவர்கள்தான் வெற்றி பெறுவார்கள். தமிழ்த் தேசியவாதிகள் சாதி ஒழிப்பை முன் வைத்துப் போராடினால் - ஒரு வேளை தலித் இயக்கங்கள் கூட, தமிழ்த் தேசிய வாதிகளின் பின்னால் போகலாம். செயல்பாடு ஒன்றுதான் இதைத் தீர்மானிக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

அப்படியானால் ஒரு போலிஸ் கமிஷனரையும் தாண்டி, தாழ்த்தப்பட்ட மக்களை சாகடிக்க, எங்கிருந்து உத்தரவு வந்தது? இவர்களைக் காப்பாற்ற எந்த நாடாளுமன்றம், சட்ட மன்றம் வந்தது?

> பள்ளனும் பறையனும் சேரிப் பண்பாட்டிலிருந்து விலகிக் கொண்டிருக்கிறான். அருந்ததியர் எனப்படும் சக்கிலியர்கள் தான், சேரியிலிருந்து சாதி ஆதிக்கத்திற்கு எதிராக உறுதியாக நிற்கிறார்கள்.

**◇ அப்படியானால், குறைந்த பட்சம் கூட தலித் மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கக் கூடியதாக நாடாளுமன்றம் இல்லையா?**

அப்படிச் சொல்லவில்லை. சட்டத்தில் இட ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட இட ஒதுக்கீட்டை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு நாடாளுமன்றம் பயன்படும். சட்ட மன்றத்தையும், நாடாளுமன்றத்தையும் போராட்டக்களமாக - ஆயுதமாக எடுத்துக்கொண்டால், இழந்த உரிமைகளை மீட்கலாம்.

இப்ப பாருங்க, வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் என்று ஒன்று இருக்கு. இதை நடைமுறைப்படுத்த வேண்டும்; இதற்கு சட்ட மன்றம் பயன்படும். ஆக, ஒரு இயக்கம் சட்ட மன்றத்திற்குள் போய்விட்டால் போராட்டத்தில் பின்னடைவு ஏற்படும். ஒரு பக்கம் போராடு; இன்னொரு பக்கம் சட்டமன்றத்திற்குள் குரல் கொடு. குரல் கொடுப்பது எப்போது? நாம் சேர்கிற அணி ஆட்சிக்கு வந்தால், எப்படி போராட்டம் நடத்துவது?

**◇ பறையர்கள் தங்களை ஆதிதிராவிடர் என்றும், பள்ளர்கள் தங்களை 'தேவேந்திரகுல வேளாளர்கள் என்றும் சக்கிலியர்கள் தங்களை அருந்ததியர்கள் என்றும் பெயர் மாற்றி அழைத்துக்கொள்வதால், சாதி இழிவு போகுமா?**

சாதியின் பெயரால் நடக்கிற இழிவுகளை எதிர்ப்பதுதான் சரியான வழி. இந்தப் பெயரால் எனக்கு இழிவு ஏற்படுகிறது. இந்தப் பெயரை மாற்றிக் கொள்வதால் கவுரமாக இருக்கலாம் என்று ஒரு வித முன்னோட்டம் பார்க்கிறார்கள் அவ்வளவுதான். ஆனால், என்ன பெயரை மாற்றினாலும் - இவனுடைய வாழ்க்கைத்தளம் மாறப்போவதில்லை.

தேவேந்திரர், ஆதிதிராவிடர் அருந்ததியர் என்று பெயரை மாற்றிக் கொள்வதால், இவர்களுடைய வாழ்க்கைத் தளம் மாறி இருக்கிறதா? இவர்களுடைய கலாச்சாரம் மாறி இருக்கிறதா? என்ன பெயர் மாற்றினாலும் பெண் கொடுப்பது - எடுப்பது எங்கே? இந்த வட்டத்துக்குள்தானே? பெயரை மாற்றிக் கொள்வதால் வேறு யாரும் நம்மோடு சம்பந்தம் செய்ய தயாராய் இருக்கிறார்களா? இல்லை. ஆக, இது அறியாமையினால் வைத்துக் கொண்ட பெயர்கள், அவ்வளவுதான்.

**◇ தேவேந்திரகுல வேளாளர்கள் என்கிற சொல் தமிழ்ச் சொல்லா?**

தேவேந்திரர் என்கிற கருத்தே 'இந்துத்துவா' கருத்துதான். மள்ளர், பள்ளர் என்பதுதான் தமிழ்ச் சொல். இந்து மத புராணத்தில் தேவேந்திரர் என்கிற 'கேரக்டர்' ஆபாசமாக வருகிறது. தேவேந்திரர் என்ற சொல்லை தமிழ்ச் சொல் என்று சொல்பவர்கள், இந்துத்துவாவை உள்வாங்கிக் கொண்டவர்கள் என்றுதான் அர்த்தம்.

**◇ 'சக்கிலியர்கள் தமிழர்கள் அல்ல' என்கிற பிரச்சாரம் எழுந்துள்ளதே?**

சமூக ஒடுக்கு முறை, பொருளாதார ஒடுக்கு முறை, அரசியல் ஒடுக்குமுறை ஆகியவற்றை மிகக் கடுமையாக சந்திப்பவர்கள் சக்கிலியர்கள்தான். இட ஒதுக்கீட்டில் கூட பாருங்க, பள்ளனும் பறையனும்தான் அதிகமாக அனுபவிக்கிறான். தெரு கூட்டுவது தான் சக்கிலியர்களுக்கான இட ஒதுக்கீடாக சுக மக்களே பார்க்கிறார்கள்.

அடுக்கிவைக்கப்பட்ட பானைகளில் கடைசிப் பானையாக இருக்கக் கூடிய சக்கிலிய சகோதரர்கள், தமிழர்கள்தான்; இவர்களுடைய பண்பாடு தமிழ்ப் பண்பாடுதான்; பூகோள எல்லையும் தமிழ் எல்லை தான். வேண்டுமானால் தெலுங்கு பேசலாம். இதை வைத்து இவர்களை 'தெலுங்கர்கள்' என்று சொல்வது அருவருப்பானது. தலித் விடுதலையை சிதைக்கக் கூடியவர்களின் பிரச்சாரம் தான் இது.

பள்ளனும் பறையனும் சேரிப் பண்பாட்டிலிருந்து விலகிக்கொண்டிருக்கிறான். அருந்ததியர் எனப்படும் சக்கிலியர்கள்தான், சேரியிலிருந்து சாதி ஆதிக்கத்திற்கு எதிராக உறுதியாக நிற்கிறார்கள். இவர்களை எப்படி 'தெலுங்கர்' என்று சொல்வார்கள்?

**◇ 'சாதி ஒழிப்பு அய்க்கிய முன்னணி' என்று ஒன்று இருந்ததே... அது என்னவாயிற்று?**

'சாதி ஒழிப்பு அய்க்கிய முன்னணி'யின் செயல்பாடுகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. பரந்தளவில் இல்லை, அவ்வளவுதான். தேர்தலுக்குப் பின், மீண்டும் சில இயக்கங்களோடு சேர்ந்து அரசியல் பிரச்சாரத்தைக் கொண்டு செல்ல விரும்புகிறோம். 'விடுதலைச் சிறுத்தைகள்', 'ஆதித்தமிழர் பேரவை', 'தியாகி இமானுவேல் பேரவை' போன்ற இயக்கங்கள் சேர்ந்து செயல்பட்டபோது, 'சாதி ஒழிப்பு அய்க்கிய முன்னணி' வீரியத்தோடு செயல்பட்டது.

அப்போதுதான், தமிழ்த் தேசியவாதிகள், தீண்டாமை ஒழிப்பைப் பற்றிப் பேசினார்கள். ராமதாசு குடிதாங்கி பிரச்சனையை சந்தித்தார். இத்தனை நாட்களாக வர்க்கப் பிரச்சனையை பேசிக்கொண்டு இருந்த கம்யூனிஸ்டுகள் கூட, வர்க்கத்திற்கு சாதி ஒரு தடை என்று புரிந்து, தீண்டாமை ஒழிப்பை முன் வைத்தார்கள். இந்த மாற்றம் எப்படி வந்தது? 'சாதி ஒழிப்பு அய்க்கிய முன்னணி'யின் செயல்பாடுகள்தான்.

> சட்ட மன்ற - நாடாளுமன்ற பாதைகூட, சுய நிர்ணயமாக இருக்க வேண்டும். நமக்கான போராட்ட அணியைத் தயார் படுத்தி, சட்ட மன்றத் திற்குள் நுழைய வேண்டும். இதை விடுத்து நம்மை ஒடுக்குபவர்களோடு கூட்டு சேர்வது, மிக மோசமான செயலாகும். சாதி ஒழிப்பு என்பதை போராட்டத்தின் மூலம்தான் காண முடியும். இதற்கு நாடாளுமன்றம் எந்த விதத்திலும் உதவியாய் இருக்காது.

இப்போது தலித் அரசியல், சாதி ஒழிப்புக்கான பணி தொய்வு அடைந்திருப்பது மாதிரியான தோற்றம் இருந்தாலும், மீண்டும் பேச வைப்போம். ஆக, 'விடுதலைச் சிறுத்தைகள்' தேர்தல் பாதைக்குப் போனதால் - எங்கள் பணி நின்று போனதாக தோன்றும் மாயை இனி இருக்காது. 'தலித் அரசியலை' எல்லோருக்கும் சொல்லிக் கொடுப்போம்; அதை வென்றெடுப்போம். ●



படிப்பகம்

www.padippakam.com



■ சுப. வீரபாண்டியன்

“கடவுள் நம்பிக்கையைக் காட்டிலும், அதனை மய்யமாக வைத்து, உழைக்கும் மக்களை ஏமாற்றி, அவர்கள் தலையில் ஏறி ஆதிக்கம் செலுத்தும் சாதி அமைப்பும், அதன் அடிநாதமாக இருக்கும் பார்ப்பனீயமுமே முதலில் எதிர்க்கப்பட வேண்டியவை என்று தோன்றுகிறது.”



# உடையும் சித்திரங்கள்

கடந்த மே மாதம், என் மகன் லெனின் திருமணத்திற்கு எங்கள் ஊர்ப் பகுதியில் இருந்த நெருங்கிய உறவினர்களுக்கு, நானும் என் துணைவியும், என் அக்காவும் நேரில் சென்று அழைப்புகள் கொடுத்துக் கொண்டிருந்தோம்.

புதுவயலிலிருந்து ராயவரம் செல்லும் வழியில் ஓரிடத்தில் என் அக்கா, “இங்கதான் நம்ம குலதெய்வத்தோட கோயில் இருக்கு - போய்ப் பாத்துட்டு போகலாம், ம்... நீ எங்க வரப் போற?” என்றார்.

“இங்கேயா, எங்கே இருக்கு?” என்று கேட்டேன்.

“இதோ அந்த வலது பக்கமா திரும்பினா, ரெண்டு அல்லது மூணு கிலோ மீட்டர் தூரம்தான்”

“அதற்கென்ன போகலாம்.”

நாங்கள் வந்து கொண்டிருந்த வாடகை மகிழுந்து வலது பக்கம் திரும்பியது.

என் அக்காவுக்கும், என் துணைவிக்கும் சற்று வியப்புதான்.

நான் நாத்திகன். நினைவு தெரிந்த நாளிலிருந்து நாத்திகன்தான். வெறும் நாத்திகன் மட்டுமில்லை; கடவுள் நம்பிக்கை உடையவர்களை வாதத்திற்கு இழுத்து, அவர்களோடு வம்பு செய்வதில் மகிழும் நாத்திகன்.

ஆனால், அந்தக் குலதெய்வக் கோயிலைப் போய்ப் பார்ப்பதில் எனக்கு ஒரு வேடிக்கையான ஆவல் இருந்தது.

நான் சிறுவனாக இருந்தபோது, என் அம்மா யாரோடு சண்டை போட்டாலும், ‘எங்க குலதெய்வம் சாத்தப்பனும், பன்னி வீரப்பனும் உங்களைச் சும்மா விட மாட்டாங்க’ என்று சாபம் கொடுப்பார். சில வேளைகளில் ‘அந்தச் சாத்தாங் கோயில் பூதம் உன்னை என்ன பண்ணப் போகுது பார்’ என்று எதிரியை மிரட்டுவார்.

என் அம்மாவின் பக்கத்து வீட்டுச் சண்டைக்காக, தன் வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு, அம்மாவின் எதிரிகளை ஒரு கை பார்க்கும் அந்தத் திருவாளர் பூதத்தைப் பார்ப்பதில் எனக்கு ஒரு ரசனை இருந்தது.

கோயில் வாயிலிலேயே, ஒன்றில்லை இரண்டு பூதங்கள் நின்று கொண்டிருந்தார்கள் - என் அம்மாவின் நண்பர்கள்.

உள்ளே போனதும் ‘கறிக்கடை’ போல ஒரு இடம் இருந்தது. ‘இது என்ன?’ என்று கேட்டேன். ‘இதுதான் கடா வெட்டுற இடம்’ என்று அக்கா விளக்கினார்.

ஓ... இந்தப் பிள்ளையார், திருமால் போலல்லாமல் ஆட்டுக்கறி கேட்கும் இந்தச் சாமி நம்மவர்தான் என்று தோன்றியது. உள்ளே போனோம். “மூலவர் இடத்தில் இருக்கும் இவர்தான் நம்ம குலதெய்வம் சாத்தப்பன்” என்று அக்கா சொன்னதும்தான், வெளியில் பலகையில் ‘ஸ்ரீ சாஸ்தா கோயில்’ என்று எழுதி வைத்திருந்த பலகை நினைவுக்கு வந்தது. அடடா, நம் ஊர் சாத்தப்பனை இவர்கள் இப்படி ‘ஸ்ரீ சாஸ்தா’ என வடமொழி மயமாக்கி விட்டனரே என்று தோன்றிற்று.

பிறகு சுற்றுப் புறத்தில் வரிசையாகப் பல சிலைகள் இருந்தன. அங்குதான் ஒரு பெரிய வியப்பு எனக்குக் காத்திருந்தது.

ஒரு சிலையின் கீழ் ‘பன்றி வீரன்’ என்று எழுதியிருந்தது. அங்கிருந்த பூசாரி விளக்கம் சொன்னார். அப்போது இங்கே ஒரு பகுதி ‘பன்றி நாடு’ என்று அழைக்கப்பட்டது. அந்த நாட்டைச் சார்ந்த வீரன் தான் இவர். இப்போது இந்தச் சாமியை வழக்கில் ‘பன்னி வீரப்பன்’ என்றே அழைக்கின்றனர்’ என்று விளக்கினார்.

அருகிலிருந்த சிலையின் கீழ் ‘மதுரை வீரன்’ என்று எழுதப்பட்டிருந்தது. வியப்புடன் பார்த்தேன். அந்த மதுரை வீரனா இவர் என்று ஒரு சந்தேகம். அருகிலிருந்த பெண் சிலையின் கீழ் ‘பொம்மி’ என்று இருந்ததைப் பார்த்ததும் என் அய்யம்



படிப்பகம்

www.padippakam.com



நீங்கிவிட்டது. அடடே, அதே மதுரை வீரன்தான்.

இது எப்படி என்று எனக்கு விளங்கவில்லை. நாட்டுக் கோட்டை நகரத்தார் வணங்கும் கடவுளர்களில் ஒருவராக, தாழ்த் தப்பட்ட மக்களின் வீரன் ஒருவர் எப்படி இடம் பெற்றார் என்பது புரியவில்லையாயினும், மனதுக் குள் மகிழ்ச்சியாய் இருந்தது.

பூசாரி விளக்கினார் - "பன்றி வீரனும், மதுரை வீரனும் நெருங் கிய நண்பர்களாக இருந்துள்ள னர். அதனால்தான் அவரின் சிலையும் அவர் மனைவி பொம் மியின் சிலையும் கூட இங்கு வைக்கப்பட்டுள்ளன."

வெளியில் வந்து, மீண்டும் ராய வரத்தை நோக்கிப் புறப்பட்டோம். நான் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்ததை என் அக்காவும், துணைவியும் தவறாகப் புரிந்து கொண்டனர். என் அக்கா, "பாத் தியா நம்ம குல தெய்வம் சாத்தப்பன் ஒன்னை இங்க கொண்டு வந்து உன் மனசையும் மாத்திட்டாரு" என்றார்.

என் மகிழ்ச்சிக்கான காரணங்கள் வேறானவை. சாதி கடந்த சமத்துவம், பூணூல் இல்லாத பூசாரிகள், ஆட்டுக்கறி கேட்கும் சாமிகள் - எல்லாவற்றிலும் ஒரு பார்ப்பன எதிர்ப்பை என்னால் பார்க்க முடிந்தது.

அப்போது எனக்குள் சட்டென்று ஒரு கேள்வி எழுந்தது. கடவுள் வழி பாடும், மூட நம்பிக்கைகளும் பார்ப்பனீ யத்தின் பெயரால் நடந்தால் என்ன, பார்ப் பனீயம் அல்லாத அடிப்படையில் நடந் தால் என்ன? இரண்டும் எதிர்க்கப்பட வேண்டியவைதானே?

ஆம், இரண்டும் எதிர்க்கப்பட வேண் டியவைதாம். ஆனாலும், இரண்டிற் குமிடையில் வேறுபாடே இல்லை என்று கூறிவிட முடியாது.

பார்ப்பனீயமும், அதனை மறைத்து ஆடை போர்த்தியிருக்கும் இந்துத்து வமும் கொண்டு வந்த கடவுளர்கள் எல்லாரும் கற்பனை. ஆதிக்கத்தின் வடி வங்கள். சாதி அடுக்கைக் காப்பாற்றும் மூலங்கள்.

ஆனால், நொண்டிக் கருப்பனும், பன்றி வீரனும், முனியாண்டியும், மதுரை வீரனும் நம் முன்னோர்கள். 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய் வத்துள் வைக்கப்பட்ட' வீரர்கள். மாவீரர் வழிபாடும், நடுகல் வழிபாடும் நம் மரபுகள்.

முருகன் கூட குறிஞ்சி நிலத்தின் முது கிழவன். வேடுவர்களின் தலைவனாய் விளங்கிய வேலன். தமிழன். அதனால் தான் இன்றுவரை, திருத்தணி தாண்டி விட்டால், எந்த 'இந்து'வும் முருகனை வழிபடுவதே இல்லை.

எனினும், ஒரு சூழ்ச்சியைச் செய்வ தற்கு மட்டும் அவர்கள் தவறவில்லை. முருக னைச் சுப்பிரமணிய னாக்கி, பிறகு பாலசுப் பிரமணியனாக்கி, ஏழாம் நூற்றாண்டுக்குப் பின் எங்கிருந்தோ கொண்டு வரப்பட்ட வாதாபி கண பதிக்குத் தம்பியாக்கி விட்டனர்.

அது மட்டுமா? வேலனின் அன்புக் காதலி குறமயில் வள்ளியை ஆசை நாயகி ஆக்கி, 'தெய்வானை' என்னும் பார்ப் பனீயப் பொய்ப் புராணச் சுருட்டை, அவன் மனைவி என்று அறிவித்து விட் டனர். அது உண்மையெனில், சங்க நூலான திருமுருகாற்றுப்படையில் தெய்வானை பற்றிய சிறு குறிப்பும் காணப்படவில்லையே, ஏன்?

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க் கும்போது, கடவுள் நம்பிக்கையைக் காட் டிலும், அதனை மய்யமாக வைத்து, உழைக்கும் மக்களை ஏமாற்றி, அவர்கள் தலையில் ஏறி ஆதிக்கம் செலுத்தும் சாதி அமைப்பும், அதன் அடிநாதமாக இருக் கும் பார்ப்பனீயமுமே முதலில் எதிர்க்கப் பட வேண்டியவை என்று தோன்றுகிறது.

எனக்குக் கடவுள் நம்பிக்கை வந்து விட்டதாகவோ, வயது ஏறும்போது வரக் கூடிய சமரசம் எனக்குள்ளும் வந்துவிட்ட தாகவோ - இவ்வரிகளுக்குப் பொருள் கிடையாது.

முன்னைக் காட்டிலும் கடவுள் மறுப் புக் கொள்கை இப்போது என்னுள் ஆழ மாகியுள்ளது. ஆனாலும், கடவுள் எதிர்ப் பைக் காட்டிலும் - சாதி எதிர்ப்பே இன்றைய முதல் தேவை என்ற கருத்து என்னிடம் வளர்ந்து வருகின்றது.

'சாமி'கள் பிழைத்துப் போனாலும் குற்றமில்லை; 'சாதி'கள் பிழைத்துப் போய்விடக்கூடாது.

ஆண்டவனை நம்புகின்றவர்களை மன்னித்து விடலாம். சாதி - தீண்டா மையை நம்புகின்றவர்களை, மன்னிக் கவே முடியாது. •

- தொடரும்

> **"நொண்டிக் கருப்பனும், பன்றி வீரனும், முனியாண்டியும், மதுரை வீரனும் நம் முன்னோர்கள். 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட' வீரர்கள். மாவீரர் வழிபாடும், நடுகல் வழிபாடும் நம் மரபுகள்."**


படிப்பகம்

www.padippakam.com

ப | தி | வு

# பெண்களின் முன்னேற்றமே

# ஆண்கள் விடுதலை

## அன்னை மீனாம்பாள் ஆற்றிய உரை

**மேற்கத்திய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் ஒரு போக்காக, உரிமை இயக்கங்கள் உலகம் முழுவதும் உதித்தபடி இருக்கின்றன. அதன் அங்கமாக, பெண்ணுரிமை இயக்கம் தொடங்கியது. ஆனால் இன்று பெண்ணுரிமை இயக்கமானது, உலக அரசியலில் முக்கியமான சக்தியாகப் பரிணமித்துள்ளது. இந்தியாவில் இதே போன்ற நிலை தொடர்ந்தாலும், மேற்கத்திய பெண்ணிய சிந்தனைகளின் தாக்கம் இங்கு மிகுதியாகவே இருக்கிறது.**

**அங்கு பொருந்திய சிந்தனைகள், இங்குள்ள வரலாற்றுச் சமூக சூழலுக்கு எந்தளவு பொருந்தும் என்பது குறித்து ஆழமான விவாதங்கள் எழுந்துள்ளன. இந்த சிந்தனையை இங்கு பொருத்திப்பார்க்க மேற்கொள்ளும் முயற்சிகள் மட்டுமே போதாது. பெண்களின் சொந்த வரலாற்றைத் தோண்டி எடுப்பது மிக அவசியமானது. இந்த வரலாற்று மீட்பு அளிக்கும் தன்னம்பிக்கைதான் - புதிய கருத்துகளை உள்வாங்குவதற்கான தளத்தை அமைக்கிறது.**

**அதன் ஒரு அங்கமாக, அன்னை மீனாம்பாள் அவர்களின் உரையை இங்கு வெளியிடுகிறோம். அன்னை மீனாம்பாள், பழைய தலைமுறையைச் சேர்ந்த - புதுமையான சிந்தனைகளைக் கொண்ட போராளி. பெண் விடுதலை, தலித் விடுதலை இரண்டும் இவரது லட்சியம்.**

**இவரது வரலாறும், பங்களிப்பும், இந்திய வரலாற்றிலிருந்து மட்டுமல்ல, பெண்ணுரிமை வரலாற்றிலிருந்தும் மறைக்கப்பட்டு விட்டது. அம்பேத்கர் அவர்களால் பெண்ணுரிமைப் போராளி என்றும், தன் அன்பிற்குரிய தங்கை என்றும் அழைக்கப்பட்ட அன்னை மீனாம்பாள், தமிழக - இந்திய அளவில் பெண்ணுரிமை இயக்கத்திற்குப் பெரும் பங்காற்றியவர்.**

**பல்வேறு பொறுப்புகளை வகித்த இவர், 1937இல் சென்னை - கவுரவ நீதிபதியாக இருந்தபோது, திருநெல்வேலி மாவட்டத்தில், 31.1.1937 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட ஆதிதிராவிடர் மாநாட்டில் ஆற்றிய தலைமை உரை, இன்றளவும் பொருத்தமாக இருக்கிறது.**

**- கவுதம் சன்னா**

திருநெல்வேலி ஆதிதிராவிடர் மகாநாட்டிற்கு என்னை தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்ட வரவேற்புக் கழகத்தாருக்கு நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். ஓர் சமுகமோ, ஓர் தேசமோ விடுதலையடைய வேண்டுமானால் - கல்வி, ஒற்றுமை, மாதர் முன்னேற்றம் இம்மூன்றும் மிகவும் அவசியமாக கவனிக்கற்பாலன. நம் நாடோ கல்வியில் மற்றெல்லா தேசங்களையும் விட மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருக்கின்றது. அதோடு நம் நாட்டில் ஜாதி வேற்றுமை முதலிய காரணங்களால் - நமக்குள்ளாக ஒருவருக்கொருவர் ஒற்றுமை கிடையாது.

இத்தேசத்தில் மாதர்கள் கேவலமாக நடத்தப்படுவதைப் போல், வேறெந்த தேசத்திலும் கிடையாது. ஸ்திரீகள் பிற்போக்கான நிலைமையிலிருப்பதனால்தான் நம் நாடும் மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருக்கிறது. மாதர்கள் எங்கு முன்னேற்றமடைகின்றார்களோ - அத்தேசமே முன்னேற்றமடையுமென்று ஓர் பெரியார் சொல்லியிருக்கிறார். ஆகவே, நாம் எல்லோரும் முன்னேற்றமடைய வேண்டுமானால், ஸ்திரீகள் முன்னேற்ற விஷயத்தில் எல்லோரும் ஏகமனதாகப் பாடுபட வேண்டும்.



### கல்வி

''கண்ணுடைய ரென்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்'' என்றார் நம்மரபிலுதித்த திருவள்ளுவ நாயனார். அதாவது முகத்தில் இரண்டு கண்களிருந்த போதிலும் கற்றவர்களுக்கே அக்கண்கள் இரண்டும் கண்களென்றும், கல்லாத பேர்களுக்கு அவ்விரண்டு கண்களும் புண்ணுக்குச் சமானமென்றும் சொல்லியிருக்கிறார். ஆகவே, உலகில் ஜனித்த ஆண், பெண் ஆகிய இரு பாலருக்கும் கல்வி மிகவும் முக்கியமானது. நம்மவர்களில் அநேகர், பெண்கள் கல்வி கற்க வேண்டியது முக்கியமில்லையென்றும், ''அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு'' என்றும் சொல்லுகிறார்கள்.

ஏனெனில், வீட்டில் சகல காரியங்களையும் கவனிக்க வேண்டியது ஸ்திரீகளாகையாலும், குழந்தைகள் தாய்மார்களின் பராமரிப்பிலிலேயே இருக்க நேரிடுவதாலும் இல்வாழ்க்கையின் பொறுப்பு பெரும்பாலும் பெண்களே கவனிக்க வேண்டியிருப்பதாலும், பெண்மணிகள் முக்கியமாக கல்வி கற்பது மிகவும் அவசியம். மற்றெல்லா தேசங்களையும் விட நம் தேசமே கல்வியில் மிகவும்



படிப்பகம்

www.padippakam.com

பிற்போக்கான நிலைமையில் இருக்கின்றது. அதிலும் நமது சமூகமோ பல ஆண்டுகளாக உயர் ஜாதியாரென்போரால் புறக்கணிக்கப்பட்டு,கல்வியிலும், மற்றெல்லா விஷயத்திலும் மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருக்கின்றார்கள்.

நம் சமூகத்தில் ஆண்களே கல்வித் துறையில் மிகவும் பிற்போக்காயிருக்கிறார்களென்றால், பெண்களைக் குறித்து சொல்லுவானேன். ஆயின் இப்பொழுதோ காருண்யம் பொருந்திய அரசாங்கத்தாரால் நமக்கு கல்வியில் முன்னேற்ற மடைய, பல வசதிகள் செய்தளிக்கப் பட்டுள்ளன. இம்மாதிரியான சந்தர்ப்பத்தை நாம் கைநழுவ விடாமல் - நம் சமூகத்தார் யாவரும் கல்வியில் தேர்ந்து மற்றெல்லா சமூகத்தாரைப் போலும் முன்னேற்றமடைய வேண்டிய முயற்சிகள் செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

## ஒற்றுமை

''ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும்'' என்பார்கள். அதுபோல் ஓர் குடும்பமோ, ஓர் சமூகமோ, ஓர் தேசமோ முன்னேற்றமடைய வேண்டுமானால் ஒற்றுமை மிகவும் அவசியம். ஆயினும் நம் தேசத்திலோ பல்வேறு ஜாதி பாகுபாடுகளினால் நம் தேசமானது இன்று இந்நிலையிலிருக்கிறது. நம் தேசத்தில் இச்சாதிப் பிரிவினை அறவே ஒழிய இன்னும் பல ஆண்டுகள் செல்லுமாயினும், நம் சமூகத்தினர் நாம் முன்னேற்றமடைய வேண்டுமென்றும், எல்லா சமூகத்தினரைப் போலும் முற்போக்கடைய வேண்டுமென்பதையும், மற்றவர்களால் மிருகத்தினும் கேவலமாக நடத்தப்படுவதை விலக்கி, நாங்களும் மனிதர்கள்தான்; எல்லோரைப் போலவும் எல்லா உரிமையும் எங்களுக்குமுண்டு என்று நிரூபிப்பான் வேண்டி எல்லோரும் ஒன்றாகச் சேரவேண்டும்.



அன்னை மீனாம்பாள்

''தன் கையே தனக்குதவி'' என்றவாறு நாம் யாவரும் ஒன்றுபட்ட நம் சமூகத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையானவற்றிற்குப் பாடுபட வேண்டும். நாம் யாவரும் ஒன்றுபடுவதற்கும் நம் சமூகம் முன்னேற்றமடைவதற்கும் நமக்கு வேண்டியனவற்றைப் போராடி பெறுவதற்கும் நமக்குள் போதிய சங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டும். சங்கத்தின் மூலமாக நாம் அளப்பறிய நன்மைகள் அடையலாம். நமது சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமானால், நாம் யாவரும் ஒன்றுபட்டு நமக்குள் பிரிவினையில்லாமல் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

## சங்கங்கள்

சங்கங்கள் ஸ்தாபிப்பதின் மூலமாக நாம் எவ்வளவோ நன்மையடையலாம்.

1. நாம் அடிக்கடி ஒருவரோடொருவர் சேர்ந்து பழகுவதால், நமக்குள் பரஸ்பரம் ஒற்றுமையேற்படும்.

2. நமக்கு வேண்டிய பள்ளிக்கூடம், கிணறு முதலிய சவுகரியங்களை சாதித்துக் கொள்வதற்கு சங்கங்கள் மூலமாக மனு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

3. சங்கங்கள் மூலமாக சுற்றுப்புறங்களிலுள்ள கிராமங்களில் இராப்பள்ளிக் கூடங்கள் ஸ்தாபித்து பகலில் வேலைகளுக்குப் போய்த் திரும்பும் சிறியோர், பெரியோர் யாவரும் படிப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்வதற்கு அநுகூலமாகயிருக்கும்.

4. நமது சமூகத்தினருக்கு மற்றவர்களால் செய்யப்படும் அட்டூழியங்களை காருண்யம் பொருந்திய அரசாங்கத்தாருக்கு விண்ணப்பித்துக் கொள்வதற்கு, சங்கத்தின் மூலமாக மனு அனுப்பலாம். இன்னும் நமக்கு வேண்டியனவற்றை எல்லா சவுகரியங்களையும் சங்கத்தின் மூலமாக நிறைவேற்றிக் கொள்ளலாம்.

## அய்க்கிய நாணய சங்கங்கள் அல்லது கூட்டுறவு சங்கங்கள்

கூட்டுறவு சங்கங்கள் இப்பொழுது எல்லா ஊர்களிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி சங்கங்களின் மூலமாக விவசாயிகள் தங்கள் நிலங்களை பணக்காரரிடம் அதிக வட்டிக்கு அடமானம் வைத்து நஷ்டமாகாமற்படி, ஓர் குறித்தளவு வட்டியில் கடன் கொடுப்பதற்கு அரசாங்கத்தாரால் நிறுவப்பட்டதாகும். நம்மவர்களில் நிலங்கள் வைத்துக்கொண்டு எல்லா உயர் ஜாதி இந்துக்களைப்போலும் வரி கொடுத்து வரும் அநேகர் தங்கள் பூமிகளின்பேரில் கூட்டுறவு சங்கத்தாருக்கு மனு அனுப்பி கடன் கேட்டால், அன்னவர்களுக்கு கடன் கொடுக்க மறுக்கப்படுவதல்லாமல் - உயர் ஜாதி இந்துக்களிடம் பூமியை அடமானம் செய்து, ஒன்றுக்கு பத்து வட்டியாக கொடுக்கும்படியாக வற்புறுத்துவதாக - சென்னையிலிருக்கும் தாழ்த்தப்பட்டார் தலைவர்களுக்கு அடிக்கடி வெளியூர்களிலிருந்து மனுக்கள் கிடைக்கின்றன.

இக்கூட்டுறவு சங்கங்கள் மேல் ஜாதியாரின் பராமரிப்பிலிருப்பதால், நம்மவர்களின் மனுக்களை அவர்கள் துச்சமாக எண்ணி எறிந்து விடுகிறார்கள். ஆகையால் நமக்கென்று தனிச்சங்கங்கள் ஏற்படுத்தி, நம்மவர்கள் நஷ்டமடையாமலிருப்பதற்கு வேண்டிய ஹேதுக்களை செய்து கொடுக்குமாறு அரசாங்கத்தாருக்கு விண்ணப்பித்துக் கொள்ளுவதற்கு செய்ய வேண்டிய முயற்சிகள் யாவும் செய்ய, நாம் ஒரே கட்டாக முயல வேண்டும். இம்மாதிரி தனிக்கூட்டுறவு சங்கங்கள் நமக்கு மிகவும் அவசியம்.

## மாதர் முன்னேற்றம்

''மாதர் முன்னேற்றமே தேசிய முன்னேற்றம்'' என்றார் ஒரு பெரியார். மாதர்களுக்கு கல்வி எவ்வளவு அவசியமென்பதை ஒவ்வொரு ஆண் மகனும் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஓர் மாதானவள் உலகில் தாயாகவும், சகோதரியாகவும், மனைவியாகவுமிருந்து ஆடவருக்கு உதவியாயிருக்கிறாள். மாதர்கள், ஆண்களின் சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். ஓர் பெண்ணானவள் கற்றவளாயிருந்தால், அவள் தன் பிள்ளைகள் கல்வி விஷயத்தில் வேண்டிய



படிப்பகம்

www.padippakam.com

சிரத்தை எடுப்பதல்லாமல், குழந்தைகள் துர்ப்பழக்கங்களுக்கு உள்ளாகி - தங்களைக் கெடுத்துக் கொள்ளாமல் பாதுகாப்பதற்கும், இல்லறத்தை சரிவர நடத்துவதற்கும், அரசியல் துறையிலும், சமூக முன்னேற்றத்திலும் தம் கணவன்மாருக்கு பக்கபலமாகயிருந்து உதவி செய்வதற்கும், ஆடவருக்கு பலவித அசந்தர்ப்பங்களால் ஏற்படும் துயரைப் போக்கி கூடுமான வரை அவர்களை சந்தோஷமாக வைக்க முயற்சி செய்யவும், நல்ல வீரர்களாகவும் புத்தியிற் சிறந்த குழந்தைகளை ஈன்றெடுத்து-தேசத்திற்கு பேரும் புகழும், கீர்த்தியும் கொண்டு வருபவர்களாகவுமிருப்பதாலும், நம் நாடு தாய் நாடென்றும், நாம் பேசும் பாஷை தாய் பாஷையென்றும் கல்விக்குத் தலைவி சரஸ்வதியென்றும், செல்வத்திற்குத் தலைவி லட்சுமியென்றும், சிறப்பாக பெண்களைக் குறித்தே சொல்லப்படுவதால் - மாதர்களை கேவலம் மிருகமாக மதித்து நடத்தாமற்படிக்கு அவர்கள் (பெண்கள்) முன்னேற்றமே நமது (ஆண்கள்) விடுதலை, நம் தேச முன்னேற்றம் என்பதை மனதிலிருத்தி - ஸ்திரீகள் முன்னேற்ற விஷயத்தில் ஏகமனதாகப் பாடுபட்டு, அவர்களுக்கும் தக்க கல்வியை அளிக்குமாறு மிகவும் வந்தனத்தோடும் கேட்டுக் கொள்கிறேன்.


'சங்கம்'

அன்னை மீனாம்பாள், அண்ணல் அம்பேத்கர், தந்தை சிவராஜ்

## ஜஸ்டிஸ் கட்சி செய்த நன்மைகள்

ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய பிறகே தீண்டப்படாதவர்கள், தாழ்த்தப்பட்டவர்களாகியவர்களுடைய விஷயங்கள், அரசியல் பிரச்சினையாக வரமுடிந்தது. ஜஸ்டிஸ் கட்சியின் அரசியல் திட்டங்களின் ஆரம்பத்திலேயே தீண்டப்படாதவர்களுடைய விஷயங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பார்த்த பிறகே காங்கிரஸ்காரர்கள் 1920இல் தீண்டாமை விலகினாலொழிய சுயராஜ்யம் கேட்பதில்லையென்று சொல்லி, தீண்டப்படாதாரை காங்கிரசில் வந்து சேரும்படி சூழ்ச்சி செய்தார்கள்.

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் சட்ட மூலமாக பல உருப்படியான நன்மைகள் அதாவது கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, நிலவசதி, உத்தியோக வசதி, அரசியல் பிரதிநிதித்துவங்களில் நாமினேஷன் (நியமிக்கப்படல்) வசதி முதலியவைகளும், தீண்டாமை பொது வாழ்வில் பாராட்டக்கூடாதென்று தெருவு, குளம், பொது சாவடி, பள்ளிக்கூடங்கள் ஆகியவைகளில் பிரவேசிப்பதற்குத் தடையில்லாதபடி சட்டங்களும் செய்த பிறகே - காங்கிரஸ்காரர்கள் 'ஹரிஜன சேவா சங்கம்' என்று ஒரு பெயரை உண்டாக்கிக் கொண்டு பல லட்சக் கணக்காக ரூபாய்களை வசூலித்து, மேல் ஜாதிக்காரர்களே பயன் அடையும்படி செய்தார்கள்.

> **பூனா ஒப்பந்தம் இல்லாதிருந்திருக்குமானால், இன்று நடைபெறும் தேர்தல்களில் தகுதியுள்ளவர்களும், தங்கள் சமூக முன்னேற்றத்தை முக்கியமாகக் கருதக் கூடியவர்களும் ஆதிதிராவிடர்களுடைய பிரதிநிதிகளாக தாராளமாக வரக்கூடும்.**

இவ்வளவுமல்லாமல் வட்டமேசை மகாநாட்டில் காந்தியார் சுயராஜ்யம் கிடைத்த பிறகுதான் தீண்டாமையொழிக்க முடியுமென்றும் - அதுவரையில் தீண்டாதாருக்கென சட்டசபை முதலிய பிரதிநிதித்துவ ஸ்தாபனங்கள் தனித்தொகுதி மூலமோ, ஏதாவது ஸ்தானங்கள் அளிக்கக்கூடாதென்றும், நமக்குப் பிரதிநிதியாக சென்றிருந்த தாழ்த்தப்பட்டார் மாபெருந் தலைவர் அம்பேத்கரின் பிரச்சினைக்கு எதிராக வாதாடி தடை செய்தார்.

காங்கிரஸ்காரருடைய தடையை மீறி அரசாங்கத்தாரால் நமக்கு 18 ஸ்தானங்கள் அளிக்கப்பட்டன. அதுவும் பூனா ஒப்பந்தத்தின்மூலம் பாழாக்கப்பட்டது.

ஆனால், பூனா ஒப்பந்தம் இல்லாதிருந்திருக்குமானால் இன்று நடைபெறும் தேர்தல்களில் தகுதியுள்ளவர்களும், தங்கள் சமூக முன்னேற்றத்தை முக்கியமாகக் கருதக்கூடியவர்களும் ஆதிதிராவிடர்களுடைய பிரதிநிதிகளாக தாராளமாக வரக்கூடும். ஆனால், பூனா ஒப்பந்தம் மூலம் இன்று அரசியலே இன்னதென்று தெரியாதவர்களும் சமூகத்திற்கு என்ன செய்ய வேண்டுமென்பதை அறியாதவர்களும் - மேல் ஜாதிக்காரர்களுக்கு அடிமையாக இருக்கக் கூடியவர்களுமே பெரும்பாலும் வரமுடியும்படியாக ஏற்பட்டு விட்டது.

தேர்தல்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் பிரவேசிக்கக் கூடாது என்று பூனா ஒப்பந்தத்தில் விளக்கப்பட்டிருந்தும், அது ஒரு முக்கிய நிபந்தனையாகயிருந்தும், சமீபத்திலும் காந்தியார் தாழ்த்தப்பட்டவர்கள் விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் தலையிடக்கூடாதென்று கூறியிருந்தும், பிறகு காங்கிரஸ்காரர்கள் அதில் பிடிவைத்து காந்தியாருடைய அறிக்கையை மாற்றச் செய்து இப்பொழுது பூனா ஒப்பந்தத்தில் 'காந்தியின் உயிரைக் காப்பாற்ற' கையெழுத்திட்டவர்களுக்கே - காங்கிரஸ்காரர் எதிர் அபேட்சகரை நிறுத்தி தொந்தரவு கொடுத்து வருகிறார்கள். ஆகவே, காங்கிரஸ்காரர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன நன்மை செய்திருக்கிறார்கள் என்பதும் ஜஸ்டிஸ் கட்சியார் என்ன நன்மை செய்தார்களென்பதும் நன்றாக விளங்கும். நிற்க.

## சகோதர சகோதரிகளே!

நான் கூறின விஷயங்களை நீங்கள் பொறுமையோடிருந்து கேட்டுக்கொண்டிருந்ததோடல்லாமல், நமது சமூக முன்னேற்ற விஷயத்தில் செய்ய வேண்டியவைகளைக் குறித்து சிந்தித்துப் பார்க்கும்படியாக கேட்டுக் கொள்வதோடு, மற்றுமோர் முறை என்னை இம்மகாநாட்டிற்கு தலைவியாகத் தேர்ந்தெடுத்த வரவேற்புக் கழகத்தாருக்கும், உங்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன். ●



படிப்பகம்


# செருப்படி

■ வே. மதிமாறன்

"என்னா
வேகமா காலம்
மாறுதுடா
200 கிலோ மீட்டர் வரைக்கும்
லோக்கல் காலா ஆக்கிட்டான்
நாம அடிக்கடி
போன்ல பேசிக்கலாம் –
இந்த
கம்ப்யூட்டரும்
இன்டர்நெட்டும்
வந்தது
விஞ்ஞானத்தோட
உச்சம்டா மாப்ள
மனித மூளை
எவ்வளவு
ஆற்றல் உள்ளது பார்ரா,
மனிதன்
புது, புது கருவியா
கண்டு புடுச்சிக்கிட்டே
இருக்கான்"

"விஞ்ஞானத்துல
மட்டுமில்லடா
இலக்கியம்
தத்துவத்துலக்கூட
புதுசு புதுசா
கண்டு புடிக்கிறாங்கடா,
ஒரு காலத்தில
அனுபவங்கள்ல இருந்து





கதை எழுதுனான்.
இப்போ
கதை படிச்சி
கதை படிச்சி
புது புது
கதையா எழுதுறான்.
ஒரு நேரத்தில
நவீனத்துவத்தை
கண்டுபுடிச்சான்
அப்படின்னா என்னன்னு
தெரிஞ்சிக்கிறதுக்குள்ளேயே
பின் நவீனத்துவம்னு
பண்ண
கவித்

கண்டு புடுச்சிட்டான்.
உண்மையிலேயே
மனித மூளையோட
ஆற்றலுக்கு
ஈடு இணையே
கிடையாதுடா மாப்ள"

– இப்படி
நானும் நண்பனும்
சென்னை
தேனாம்பேட்டை
சிக்னலில் நின்று
பேசிக் கொண்டிருந்தபோது
தற்செயலாக
கவனித்தோம்,

நாங்கள் நின்ற இடத்திலிருந்து
பத்தடி தள்ளி
'சஸ்பென்' என்கிற
அந்த மலக்குழிக்குள்
ஒருவர்
முங்கி முங்கி
அடைப்பை
சரி செய்து கொண்டிருந்தார்.
அடுத்த
முங்கு – முங்குவதற்குள்

மிகவும்
தற்செயலாகத்தான்
எங்களைப் பார்த்து விட்டு முங்கினார்.

ஆனால்,
நாங்கள் பேசிய
'விஞ்ஞான – இலக்கிய – தத்துவ'
பெருமை பேச்சுக்கு
எங்களை
அவர் செருப்பால்
அடித்தது போலவே
இருந்தது
அந்தப் பார்வை. ●



# 'சாதுக்கள் வாழ்க'

"நம்
இந்து மதத்திற்கு
ஒரு பாரம்பரிய
பெருமை மிக்க
பண்பாடு உண்டு.
அந்தப் பண்பாட்டை,
ஒழுக்கத்தை
நமது புனிதமான
கலாஸாரத்தை
கெடுத்து
குட்டி ஷுவராக்கும்
வண்ணம்,
வெள்ளை கிறிஸ்துவ
ஆண் – பெண்
நிர்வாணங்களை
உறவுகளை
அவர்களின்
ஒழுக்கக்கேடான
சீரழிந்த கலாஸாரத்தை
நம்மீது
திணிக்கிறார்கள்,
ஸாட்லைட் டி.வி.கள்
வழியாக.
உடனே அதை
தடை ஷெய்யணும்"

என்று கொஞ்சி –
கொந்தளித்தார்,
ஒரு
ஆர்.எஸ்.எஸ். காரர்.

'ஆபாசத்திலேயும்
ஒழுக்கக் கேட்டிலேயும்
நம்பள அடிச்சிக்க
ஆளு ஏதுடா?

அந்த விஷயத்தில
வெள்ளைக் காரனே
தண்ணி குடிக்கிறான் பார்ரா
திரிவேணி சங்கமத்துல !
இது தாண்டா இந்து மதம்,
என்று
இந்து கலா ஆச்சாரத்தை
தெளிவாக விளக்கிய
சாதுக்கள் வாழ்க! ●



படிப்பகம்

# தமிழ் உலகின் அதிக வாசகர்களைக் கவரும் இதழ்

ஒவ்வொரு ஊரிலும் ஏஜெண்டுகள் தேவை

வாசகர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும்
பரிசுகள்.... பரிசுகள்....



சைன் ஆசியா இன்டர்நேஷனலின்

## சிநேகிதியே...®

பரிசுகள்
பட்டுசேலை
தங்கநகை
வெள்ளி

கீழ்காணும் கேள்விகளுக்கு உங்கள் பதில் என்ன ?

### கேள்விகள்

- அன்னையின் ஆசியுடன் ஜெஜெ வெற்றிதான்
- வானமே எல்லை நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்
- உலகத் தமிழோசை
- கைகுழுக்கத்தான் நினைக்கிறேன்
- ஈழம் மண்ணே வணக்கம்
- நினைத்தால் நிறைவேற்றுவோம்

### சொன்னவர் பெயர் எழுதவும்

மேல்கண்ட வசனங்களை யார் சொல்லியிருப்பார்கள் ?

☞ கீழே காணப்படுபவர்களில் ஒருவராகத்தான் இருக்கும் அல்லவா ?
☞ கேள்விக்கு எதிரே உள்ள கட்டத்தில் கீழ் காணுபவர்களில் மேலே உள்ள வசனத்தை சொன்னவர்கள் யார் ? என்பதை கண்டுபிடித்து எழுதுங்கள்

✣ சிவசங்கரி ✣ அகிலா ✣ விசாலி ✣ லட்சுமி ✣ சுபா வீரபாண்டியன் ✣ ராஜேஜ்குமார் ✣ சர்தார் A.S. ராஜா ✣ சந்திரிகா ✣ பார்த்திபன் ✣ பிரபாகரன் ✣ பழ.நெடுமாறன் ✣ மகரிஷி ✣ ரோஜா அருணன் ✣ பாலகுமாரன்

உங்கள் பெயர் முகவரியுடன் மேலே காணும் இவ்விளம்பரத்தை Xerox Copy அல்லது இந்த விளம்பரத்தில் உங்கள் பதிலை நிரப்பி கீழ்காணும் முகவரிக்கு 30.2.2001 க்குள் எங்களுக்கு கிடைக்கும்படி தபாலில் அனுப்பித்தரவும். பரிசு பெறுபவர் விபரம் சைன் ஆசியா இன்டர்நேஷனல் சிநேகிதியே பத்திரிகையில் முதல் இதழில் வெளியிடப்படும்.

வாசகர்களுக்கும் ஏஜென்சி பெற விரும்புபவர்களுக்கும் எமது முகவரி

**Distributors**

**SINGAR SMILES CONMMUNICATIONS**
894, TVS Nagar 3rd Street, Maharajah Nagar (Post)
Tirunelveli-627 011. INDIA.
Fax : 0091-462-578893, Email : singarsmiles@usa.net

இளைய தலைமுறையினரின் இனிமை புதுமை பல்சுவை மாத பத்திரிகை

www.padippakam.com






# "சமூக நீதியும் மதச்சார்பின்மையுமே எங்கள் கொள்கை"

**ராம்விலாஸ் பாஸ்வான் முழக்கம்**

தமிழக தேர்தல் அரங்கில் கூட்டணி மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டி ருக்கின்றன. சட்ட மன்றத் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க, அனைத்துக் கட் சிகளும் அணியமாகிக் கொண்டிருக் கின்றன. இதற்கிடையே, பெரும் எதிர் பார்ப்புடன் இருந்த தமிழ் நாடு 'லோக் ஜன சக்தி' கட்சியின் மாநாடு மற்றும் பேரணி, சென்னையில் 24.2.2001 அன்று நடந்தது.

இக்கூட்டத்தில், லோக் ஜன சக்தி யின் முன்னணித் தலைவர்களுடன் தேசியத் தலைவரும் மய்யத் தொலைத் தொடர்புத் துறை அமைச்சருமான மாண்புமிகு ராம்விலாஸ் பாஸ்வான் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

அவர் தமது உரையில், "இது பெரி யார் பிறந்த மண். தமிழ் நாடு, சமூக நீதிக்கான முன்னோடி. எனவே, தமிழ் நாடு லோக் ஜன சக்தியை இங்கே துவக் குவது பொருத்தமாக இருக்கிறது.

இன்றைக்கு ஏறக்குறைய பெரும் பான்மை மாநிலங்களில் லோக் ஜன சக்தி தனது கிளைகளை அமைத்திருக் கிறது. பல சட்டமன்ற உறுப்பினர்கள் நமது கட்சியில் இணைந்துள்ளனர். லோக் ஜன சக்தி பிற்படுத்தப்பட் டோர், சிறுபான்மையினர், தலித் மக்கள், பழங்குடியினர் மற்றும் பெண் களை உள்ளடக்கியது. சமூக நீதியும் மதச் சார்பின்மையுமே இதன் கொள் கைகள்.

லோக் ஜன சக்தி, இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்களின் தனிச் சட்டத் தில் தலையிடாது. பாபர் மசூதி விஷ யத்தில் நீதிமன்றத் தீர்ப்பே இறுதியா னது. இட ஒதுக்கீடுக்கு 50 சதவிகிதம் என வைத்திருந்த வரம்பை மத்திய அரசு விரைவில் நீக்கிவிடும். மேலும், தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களின் இட ஒதுக்கீடு சதவிகிதம் 22.5 லிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தப்படும். பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு கடைப்பி டிக்கப்படும்.

மும்பையில் உள்ள டாக்டர் அம் பேத்கரின் 'சைதன்ய பூமி'யையும் நாக் பூரில் உள்ள 'தீக்ஷா பூமி'யையும் - மய்ய அரசு தேசிய சின்னங்களாக அறிவிக்க இருக்கிறது.

ஆரம்பக்கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவது போல, பொதுப் பள் ளிகளில் இட ஒதுக்கீடும், அனைத்து குடிமக்களுக்கும் சுகாதார அட்டையும் வழங்க வேண்டும். அனைத்து கிராமங் களுக்கும் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்படும். அது மட்டுமல்ல; எதிர்காலத்தில் அனைத்து குடி மக்க ளுக்கும் தொலைபேசி வழங்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

அரசியலில் போட்டியிடுவதற்கு முன்பு, கட்சி வலுப்படுத்தப்பட வேண்டும். அதற்காக நீங்கள் ஓயாது பணியாற்றுங்கள்" என்று பேசினார்.

எழுச்சியுடன் நடைபெற்ற இம் மாநாடு மற்றும் பேரணியில் லோக் ஜனசக்தி கட்சியின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் திரு. பெ. சந்திரசே சன், தமிழ் நாடு லோக் ஜனசக்தியின் தலைவர் திரு. ஜெயக்குமார் மற்றும் பல முன்னணித் தலைவர்கள் பங் கேற்று சிறப்புரையாற்றினர். •

- நம் செய்தியாளர்



படிப்பகம்

www.padippakam.com

குற்றம்

# நீதி மன்றத்திற்குள் மநு சிலை

'வர்ணாசிரம நீதிமன்றங்கள்' உருவாகும் ஆபத்து

■ ப்ரதிபா ஜெயச்சந்திரன்

சுங்கவம்சத்தைச் சேர்ந்த சாமவேதி பார்ப்பனரான புஷ்யமித்திர சுங்கன், முதன் முதலாக, இந்தியாவின் பெருமை வாய்ந்த பவுத்தத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, பொது மக்களுக்கு எதிராகப் பல கொடுஞ்செயல்களைப் புரிந்து தன் ஆட்சியை நிறுவிக் கொண்டது முதல் - இந்தியாவில் ரத்தக்கறை படிந்த வரலாறு எழுதப்பட ஆரம்பித்தது.

அசோகப் பேரரசில் உயிர்ப்பலிகள் தடை செய்யப்பட்டிருந்ததால், பார்ப்பனர்கள் தங்களுக்கே உரிய புரோகிதத் தொழிலை இழந்து சமூகத்தில் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். அப்போது, தங்களின் பார்ப்பனீய மதத்திற்குப் புத்துயிரூட்டி, அதைத் தழைக்கச் செய்தவன் புஷ்யமித்திரன். இவன் ஆட்சியில் பவுத்தர்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

புஷ்யமித்திரன் தன் ஆட்சியை நிலைப்படுத்த 'தர்ம சாஸ்திரம்' என்னும் மநுஸ்மிருதியைத் துணைக்கு வைத்துக் கொண்டான். மநுஸ்மிருதி, கடவுளிடமிருந்து நேரடியாக மநுவுக்கு சொல்லப்பட்டு, மநு அதை மனிதர்களுக்கு வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. மநுஸ்மிருதியில், அதை இயற்றியவரின் பெயரைக் குறிப்பிடும் இடத்தில், அக்கால வழக்கப்படி 'பிருகு இயற்றிய நூல்' என்று மட்டுமே கூறப்படுகிறது. அப்படியானால் யார் இந்த மநு?

நாரத ஸ்மிருதியை இயற்றிய நாரதர் என்பவர், மநு, சுமதி பார்கவா என்னும் பார்ப்பனர் என்கிறார். ஆக, மநு என்பவர், 'மநுஸ்மிருதி'யின் ஆசிரியரான சுமதி பார்கவாவின் புனைப்பெயராகும். சுமதி பார்கவா என்னும் பார்ப்பனர் எழுதிய இந்த 'மநுஸ்மிருதி' கி.மு. 150-க்கும் கி.மு. 170-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

புஷ்யமித்திரனின் பார்ப்பனீயப் புரட்சி கி.மு. 185இல் நடந்தது. இந்த மன்னன், தன் கோட்பாடுகளைப் பிரகடனம் செய்வதற்காகத் தோற்றுவித்த நூல் தான் இந்த மநுஸ்மிருதி. 'மநுஸ்மிருதி' 1:100: ''உலகில் உள்ள அனைத்துமே பிராமணர்களின் உடைமையாகும்; பிராமணனது மிக உயர்ந்த பிறப்பின் காரணமாக, உண்மையில் அவனே எல்லாவற்றுக்கும் உரியவன் ஆகிறான்'' என்று கூறுகிறது. மநுவின் கூற்றுப்படி, இந்த உலகம் முழுவதும் அல்லது குறைந்தபட்சம் இந்தியா முழுவதும் (பாகிஸ்தான், பங்களாதேஷ், ஜம்மு காஷ்மீர் உட்பட) பிராமணர்களுக்குச் சொந்தமானது.



இது போன்ற வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடக்கூடிய தர்ம சாஸ்திரம் என்று சொல்லப்படும் மநுஸ்மிருதி, உலக நாடுகளின் மத்தியில் இந்தியாவிற்கு தலைகுனிவை ஏற்படுத்தக்கூடிய ஒன்று. இந்தியா முழுவதையும் ஒரு மிகச் சிறுபான்மை இனத்திற்கு பட்டா போட்டுக் கொடுக்கும் அதர்மத்தை - சட்டமாகப் போதித்த 'மநுஸ்மிருதி'யை உருவாக்கிய மநுவின் சிலையை, ராஜஸ்தான் உயர்நீதி மன்ற வளாகத்திற்குள் நிறுவ ஆதிக்க சக்திகள் முயன்று வருகின்றன. இதை நடத்த எத்தனிக்கும் நீதித்துறை, பார்ப்பனர்களின் கைகளுக்குள் முடங்கி விட்டதா?

மனித இனத்தை, குறிப்பாக பெண்கள் இனத்தை, மிகக் கேவலமான முறையில் தரம் பிரித்து, அவர்களை கொத்தடிமைபோல் வைத்திருக்கும் மநுவுக்கு சிலை எழுப்ப இருப்பது ஒரு புறம். பெண்கள் தங்களுக்காக நாடாளுமன்றத்தில் 33 சதவிகித இட ஒதுக்கீடு கோரி முன்னேறுவது ஒரு புறம். மநுவுக்கு சிலை என்பது, பார்ப்பனர்கள் - நீதித்துறைக்கு அடிக்கும் சாவுமணி.

''அவனுடைய (பார்ப்பனர்களுடைய) சொந்த அதிகாரம் மன்னனின் அதிகாரத்தைவிடப் பெரியது. எனவே, பார்ப்பனன் தனது எதிரிகளைத் தனது சொந்த அதிகாரத்தின் மூலமே தண்டிக்கலாம்'' (மநு 11:32) என்ற மநுவின் எதேச்சதிகாரக் கருத்தை மெய்யாக்கி, அரசாங்கத்தைவிட ஆர்.எஸ்.எஸ்.மற்றும் பாரதீய ஜனதாவும் பெரியது; அவற்றின் சொந்த அதிகாரத்தால் ஏனைய சிறுபான்மை இனத்தவரை (மநுவின் வார்த்தையில் - எதிரிகள்) தண்டிக்கலாம் என்ற இந்திய அரசியல் சட்டத்தில் எழுதப்படாத ஒன்றை, இனி புதிதாக சட்டமாக்கி எழுதுவதற்கான வெள்ளோட்டமாக இந்த சிலை அமைக்கும் முயற்சி நடைபெறுகிறதா?

மேலும், ஒரு ரத்தக் கறை படிந்த வரலாறு எழுத ஆரம்பிக்கப்படுமுன் நீதித்துறை தன் மனசாட்சியை இழந்து மெல்ல இனி சாகும். இது, பார்ப்பனர்களின் பாரதீய ஜனதா ஆட்சியில் மட்டுமே சாத்தியம். மனித உரிமைகள் இனி நீதி மன்றங்களால் பறிக்கப்படும். ●

**திருத்தம்**

'தலித் முரசு' சனவரி 2001 இதழில், 'மோகன் கமிஷன் அறிக்கை: அயோக்கியத்தனத்தின் உச்ச கட்ட வெளிப்பாடு' என்ற செய்தியில், அறிஞர் எஸ்.வி.ராஜதுரை அவர்கள் மோகன் கமிஷன் அறிக்கையில் 'அரிஜன்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பேசியதாக வெளிவந்துள்ளது. இது தவறு. கோமதி நாயகம் கமிஷன் அறிக்கையில்தான் 'அரிஜன்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவர் பேசினார். தவறுக்கு வருந்துகிறோம். — ஆ-ர்



படிப்பகம்

www.padippakam.com



# இரட்டை ஆட்சியைத் தவிர்ப்பது எப்படி?

■ சங்கமித்திரை

டாக்டர் அம்பேத்கர் (தமிழ்) நூல் தொகுதி நான்கில், பம்பாய் மாநில சட்ட மன்ற அமைப்பு, தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை, பகிஷ்கிரிதா இதகாரணி சபாவின் அறிக்கை, டாக்டர் அம்பேத்கரின் அறிக்கை ஆகிய நான்கு பிரிவுகள் இடம் பெற்றுள்ளன. ஒரு மாநில சட்ட மன்றத்தின் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அம்பேத்கர் இங்கு விரிவாக விவாதித்துள்ளார்.

சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களுக்கு, குறைந்த அளவு தகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்: 1. தன்னுடைய கருத்தை மன்றத்தில் தெளிவாக விவாதிக்கும் திறன் 2. சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கான பயனுள்ள கொள்கை பற்றிய கண்ணோட்டம் ஆகியவற்றை - ஒவ்வொரு உறுப்பினரும் பெற்றிருக்க வேண்டும். அம்பேத்கரின் இந்த அறிவுரையை நாம் ஏற்காததன் காரணமாகத்தான், சட்டத்திற்குப் புறம்பாக - பெரும்பாலான சட்ட மன்ற உறுப்பினர்கள் செயல்படுகின்றனர். இவர்களின் செயல்பாடுகள் சட்டத்தின் மாட்சிமையைக் கேலிக்குள்ளாக்கி உள்ளது.

"ஒரு சட்ட மன்ற உறுப்பினர், தன் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு அதிகாரியை சரிவரப் பயன்படுத்தத் தெரியாவிட்டால் அல்லது முடியாவிட்டால், சட்டமன்ற உறுப்பினரும், அரசு அதிகாரிகளும் தத்தம் மனம் போன போக்கில் செயல்படுவார்கள். இதன் விளைவாக, நிர்வாகம் தன்னுடைய திறமையை இழந்துவிடும். நாட்டின் சட்டமன்றம் ஒரு போக்கிலும், அரசு அதிகாரிகள் ஒரு போக்கிலும் செயல்படுவதன் மூலம் 'இரட்டை ஆட்சி' ஏற்படும். இத்தகைய இரட்டை ஆட்சியால், மக்களும், நாடும் மிகுந்த சிரமங்களை சந்திக்க வேண்டியிருக்கும்."

'இதகாரணி சபா'வின் அறிக்கை, தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி குறித்து மிகத் தெளிவாக விளக்குகிறது. இதை முழுமையாக வரைந்தளித்தவர் அம்பேத்கர். இதில், பூர்வீகக் குடிமக்களுக்கான தனிப்பள்ளிகள் வேண்டும் என வலியுறுத்தும் அம்பேத்கர், பழங்குடி மக்களுக்கு கல்வி அளிக்கும்போது, வழக்கத்தில் உள்ள கல்வியை அளிக்கக்கூடாது என்கிறார். ஏனெனில், இது பழங்குடி மக்களுக்கு முற்றிலும் அந்நியமானதாக இருக்கும். அவர்கள் பயன்படுத்தும் சொற்கள், பொருட்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியே கல்வி முறை, பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.



கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும், அந்த மக்களிடையே நன்கு அறிமுகமானவர்களாக இருத்தல் அவசியம். பழங்குடி மக்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்து, அந்தப் பயிற்சியில் தேர்ச்சி பெறுபவர்களை, நாம் ஆரம்பக் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களாகப் பயன்படுத்தலாம். இதன் மூலம் தான் பழங்குடி மக்கள், கல்வி கற்க ஆர்வமுடன் முன் வருவார்கள். பழங்குடி மக்களுக்கான க்ல்விக் கூடங்கள் அம்மக்களுக்கான வாழ்விடங்களின் வடிவமைப்பலிருந்து மாறுபடாமல் இருப்பது முக்கியம்.

'பழங்குடியின மக்கள்
ல்வியில் முன்னேற்றம்
டையாததற்கு - அடிப்
டையான காரணம்,
ரசின் தவறான அணுகு
றைதான். பழங்குடி
க்களின் பண்பாடு,
ாழ்வியல் முறை ஆகிய
ற்றில் உள்ள
றப்புகளை, நிறைகளை
ராய்வதற்கு மாறாக நகர
ாழ்க்கை, மேற்கத்திய
லாச்சாரம், நடை
றைக்கு ஒத்துவராத
திகாசங்கள் ஆகிய
ற்றை - அம்மக்களுக்
ன பாடத்திட்டங்களாக
ரசு தேர்ந்தெடுத்
ள்ளது. இதை ஓர்
ந்நியப்பட்ட கல்வி
கவும், தேவையற்ற
கவும் பழங்குடி மக்கள்
ணர்கின்றனர்."

கிறித்துவ தொண்டு நிறுவனங்கள் தான், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் இடையே மிகப் பெரும் கல்விப் பணி ஆற்றியுள்ளது. இந்நிறுவனங்கள், கல்வி மற்றும் கல்வி சார்ந்த வேலைகளை முதன்மையாக எடுத்துக் கொள்ள அரசு ஊக்குவிக்க வேண்டும் என்று அப்போதே அண்ணல் வலியுறுத்தியுள்ளார். தாழ்த்தப்பட்ட மக்கள் அதிக அளவில் ஆட்சிப் பணியில் பங்கு பெரும் வகையில் கல்வித்திட்டம் வகுக்கப்பட வேண்டும். கல்வி உதவித் தொகை (Scholarship), இலவச உதவித் தொகை (Freeship) ஆகியன ஏற்படுத்தி, தாழ்த்தப்பட்ட மாணவர்களில் சிறந்த மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்களுக்கு - கல்வி உதவித் தொகையும், மற்ற மாணவர்கட்கு இலவச உதவித் தொகையும் வழங்க அரசு முன்வரவேண்டும் என்பது போன்ற கருத்துகளை, இந்நூல் தொகுதியில் விரிவாக அலசுகிறார் அம்பேத்கர். ●



படிப்பகம்

www.padippakam.com

ச ந் தி ப் பு

# "தனியார் மயமாக்கல் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது"

முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதி **கே. ராமசாமி**



நீதிபதி ராமசாமி, நீதித்துறைக்கு நம்பகத் தன்மையை உருவாக்கிய நீதிபதிகளில் ஒருவர். தற்போது 'தேசிய மனித உரிமை ஆணைய'த்தின் (NHRC) உறுப்பினராக இருக்கும் அவர், சுகாதார வசதி பெறும் உரிமையை - அடிப்படை உரிமைகளில் ஒன்றாகச் சேர்த்தவர். அவரது தீர்ப்புகள், ஆய்வேடுகளைவிடச் செறிவானவை. தனது தீர்ப்புகளின் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்தியதோடு மட்டுமின்றி, உலக சாதனைகளைப் புரிந்தவர் ராமசாமி.

1996ஆம் ஆண்டு மட்டும் உச்சநீதி மன்றத்தில், 710 தீர்ப்புகளை தனியொருவராக வழங்கியதன் மூலம், உலகில் வேறு எந்த நீதிபதியும் செய்யாத சாதனையைச் செய்தவர். உச்சநீதி மன்றத்தில் இருந்த எட்டு ஆண்டுகளில் அவர் வழங்கிய தீர்ப்புகள் 2229. இதுவும் ஒரு சாதனையாகும். ஆந்திர நீதிமன்றத்தில் அவர் பணியாற்றியபோது, பத்தாயிரம் வழக்குகளை முடித்துள்ளார். அதுவும் ஒரு சாதனையாகும். இதுபோன்று வியத்தகு சாதனைகளை செய்துவிட்டு எளிமையாக, உறுதி கொண்டவராக இப்போதும் நாளுக்கு 18 மணி நேரம் உழைத்துக் கொண்டிருக்கிறார்.

ஆந்திர பிரதேசத்தின் பெனுமந்த்ரா மாவட்டத்திலுள்ள சிறு கிராமத்தில், 13.7.1932இல் பிறந்த ராமசாமியின் வாழ்க்கையே செய்தியாக இருக்கிறது. தனது வாழ்வின் துயரங்களை எவ்வித மனத்தடையுமின்றி, நம்மோடு பகிர்ந்து கொள்கிறார் அவர்.

மனித உரிமைகள் தொடர்பான மாநாடு ஒன்றுக்காக, சனவரி 17ஆம் தேதி புதுவை வந்திருந்த நீதிபதி ராமசாமியை, புதுவை ஆளுநர் மாளிகையில் சந்தித்து இந்த நேர்காணல் பதிவு செய்யப்பட்டது. 'தலித்' வெளியீடாக விரைவில் வரவிருக்கும் விரிவான பேட்டியிலிருந்து - 'தலித் முரசு'க்காக சில பகுதிகளை மட்டும் வெளியிடுகிறோம்.

நேர்காணல் : **ரவிக்குமார்**

புகைப்படம் : கலைச்செல்வன்

◇ **நீங்கள் பிறந்து வளர்ந்த பின்னணியிலிருந்து தொடங்கலாம். இப்போது நான் பார்க்கிற உங்களின் ஆளுமையை வடிவமைப்பதில், இளமைப்பருவம் என்ன விதமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.**

என் இளமைப்பருவம் புதர் மண்டியது, முட்கள் நிறைந்தது. அது ஒரு மலர்ப்படுக்கையாக இருக்கவில்லை. கொஞ்சம் வசதியான குடும்பத்தில் நான் பிறந்தபோதிலும் வாழ்க்கை எனக்குத் துயரத்தைத்தான் தந்தது. எனக்கு இரண்டு வயதாக இருக்கும்போது எனது அம்மா இறந்து விட்டார். அதன் பிறகு என் அம்மா வழி தாத்தாவும் பாட்டியும் என்னை வளர்த்தார்கள். என் தாத்தா கொஞ்சம் வசதியானவர்; கிராமத்தில் மிகவும் மதிக்கப்பட்டவர். என் கெட்டவாய்ப்பு அங்கும் என்னைத் தொடர்ந்து வந்தது. எனக்கு ஆறு, ஏழு வயதிருக்கும்போது என் தாத்தா அகால மரணமடைந்தார்.

என் தாய்மாமன் நல்லவர்தான். ஆனால், என் அத்தை மிகவும் கொடுமைக்காரி. அதனால் அவர்களை என் தாத்தா தன்னுடன் சேர்க்காமல் தனிக் குடித்தனமாக வைத்திருந்தார். என் தாத்தாவின் சாவுக்குப் பிறகு குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பு என் தாய்மாமாவிடம் வந்தது. அப்போதுதான் எனது துயரம் தீவிரமானது.

என் மாமா என்னைப் படிக்கும்படி உற்சாகப்படுத்தினார். என் அத்தையின் நடவடிக்கைகளோ தாங்க முடியாதவையாக இருந்தன. நான் அங்கே இருந்த பள்ளியில் ஏழாம் வகுப்புவரை படித்தேன். 1949ஆம் ஆண்டு என நினைக்கிறேன். அங்கே உயர்நிலைப் பள்ளி வந்தது. நான் அதில் சேர விரும்பினேன். என் மாமாவும் 'சரி, சேர்ந்து கொள்' என்று சொன்னார். நான் அங்கு சேர்வதற்காக சென்றபோது என்னை எட்டாம் வகுப்பில் சேர்த்துக் கொள்ள முடியாது என்று கூறிவிட்டார்கள். நான் தெலுங்கு வழியில் படித்திருந்ததால், ஆங்கிலம் படிக்காதவன் என்பதால் மீண்டும் ஏழாம் வகுப்பில் சேர வேண்டியதாயிற்று.

அந்த உயர்நிலைப் பள்ளியோடு தங்கும்



படிப்பகம்

www.padippakam.com

விடுதியும் ஏற்படுத்தப்பட்டது. உடனே நானும் அந்த விடுதியில் தங்குவதற்குச் சென்றுவிட்டேன். நான் என் மாமா வீட்டில் இருந்த போது, மாடுமேய்க்கும் வேலையைப் பார்க்கும்படி சொல்லி விட்டார்கள். நான் மாட்டுக்காரனாக ஆக்கப்பட்டேன். நான் ஹாஸ்டலில் இருந்தபோது, என் தாய்வழிப் பாட்டி நோய் வாய்ப்பட்டு இறந்து விட்டார். எனக்கு ஆறுதலாக இருந்த பாட்டியும் இறந்து விட்டதால், தொடர்ந்து மாமா வீட்டில் இருப்பதில் அர்த்தமில்லை என நினைத்து அப்பா வீட்டிற்குச் சென்றேன்.

அங்கே போன பிறகு ஆறு மாதங்கள் ராஜமரியாதை இருந்தது. என் அப்பாவும் சித்தியும் என்னை நன்றாக கவனித்துக் கொண்டார்கள். என் அப்பாவுக்கு ஏராளமான கடன் இருந்தது. அவற்றை அடைப்பதற்காக நிலங்களை அடகுவைக்க அவர் விரும்பினார். அந்த நிலங்கள் என் தாத்தாவால் என் அம்மா பெயருக்கு வாங்கித் தரப்பட்டவை. அம்மா இறந்து போனதால், அதன் மீதான உரிமை எனக்கு வந்து விட்டது. அந்த நிலங்களை அடகுவைக்க என் கையெழுத்து தேவை என்பதால், என்னை என் அப்பா நன்றாக உபசரித்தார். இதெல்லாம் என் சித்தியின் திட்டம்தான் என்பது எனக்குப் பிறகுதான் தெரிய வந்தது.

கையெழுத்துப் போட்டு நிலங்களை அடகுவைத்து கடனிலிருந்து மீளும்வரை என்னை நன்றாகக் கவனித்துக் கொண்ட என் சித்தி, அதன் பிறகு என்னை மோசமாக நடத்த ஆரம்பித்தார். அவர் செய்த கொடுமைகள் என் அத்தை செய்த கொடுமைகளைவிட அதிகம். ''நாம் கஷ்டப்படுவதற்காகவே பிறந்திருக்கிறோம். எனவே, இதுபற்றி கவலைப்படக் கூடாது'' என நான் மன உறுதியோடு இருந்தேன். பட்டினியாகக் கிடக்கும்போது கூட யாரிடமும் சென்று அதைச் சொன்னதுமில்லை; உணவு கேட்டதுமில்லை.

நான் வயல்களில் கூலி வேலை செய்தபடி என் படிப்பையும் தொடர்ந்தேன். எஸ்.எஸ்.எல்.சி.யில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன். அப்போது என் அப்பா கூலிவேலைக்காக குடும்பத்தோடு வெளியூர் செல்ல (Migrant Labour) முடிவெடுத்து என்னையும் கூப்பிட்டார். நான் முடியாது என மறுத்து விட்டேன். ''நான் கல்லூரியில் சென்று படிக்கப் போகிறேன், உங்களோடு வரமுடியாது'' என்று கூறிவிட்டேன்.

அதன்பிறகு, என் உறவினர்களிடம் கல்லூரிப் படிப்புக்கு உதவி செய்யும்படி கேட்டேன். ஒருத்தரும் உதவி செய்ய வில்லை. கடைசியாக, நான் கூலி வேலை பார்த்து வந்த நில உரிமையாளர் ஒருவரிடம் சென்று உதவி கேட்டேன். அவர் சம்மதித்தார். அவர் எனக்கு 23ரூபாய் கடனாகக் கொடுத்தார். நானும் என் கூலியில் கொஞ்சம் சேமித்து வைத்திருந்தேன். அதை எடுத்துக் கொண்டு கல்லூரியில் சேரச் சென்றேன்.

> **''ஒரு சாதனையை செய்ய வேண்டுமென்று நினைத்து நான் தீர்ப்புகளை வழங்கியதில்லை. ஆனால், அந்தத் தீர்ப்புகள் ஒரு சாதனையாக மாறின. கடந்த அய்ம்பது ஆண்டுகளில் உச்சநீதிமன்ற நீதிபதிகளில் எவரும் - நான் வழங்கிய அளவு தீர்ப்புகள் வழங்கியதில்லை.''**

◇ ***கல்லூரியில் இடம் எளிதாகக் கிடைத்ததா?***

நான் எஸ்.எஸ்.எல்.சி.யில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தும் கூட எனக்கு 'ஸ்காலர்ஷிப்' கிடைக்கவில்லை. அந்த காலத்தில் 'ஸ்காலர்ஷிப்' இருந்தது. ஆனாலும், கெட்டவாய்ப்பாக எனக்கு அது கிடைக்கவில்லை. 'நான் - ரெசிடென்ட்ஸ் ஸ்காலர்ஷிப்' (Non Residents Scholarship) என ஒன்று இருந்தது; அது 11 ரூபாய். அதற்கு விண்ணப்பித்தேன்.



ஆகஸ்டு மாத கடைசியில் தான் நான் கல்லூரியில் சேர்வதற்காக சென்றேன். அப்போது 'அட்மிஷன்' பெரும்பாலும் முடிந்து விட்டது. இருந்தாலும்கூட, அந்தக் கல்லூரி முதல்வர் என் மதிப்பெண்களைப் பார்த்து விட்டு எனக்கு அறிவியல் வகுப்பில் சேர 'அட்மிஷன்' தருவதற்கு முன்வந்தார். நான் வேண்டாமென்று மறுத்து விட்டேன். 'என்னவொரு முட்டாள் நீ! இந்தப் பாடம் வேண்டும் என்று எவ்வளவு பேர் போட்டிபோடுகிறார்கள் தெரியுமா? காலதாமதமாக வந்தாலும் உன் மதிப்பெண்களைப் பார்த்து விட்டுத்தான் நான் இந்தப் பாடத்தில் உனக்கு இடம் தர முன்வந்தேன். அப்படியிருந்தும் வேண்டாம் என்கிறாயே?' என என்னை அவர் கடிந்து கொண்டார்.

அவரிடம் நான் சொன்னேன். ''சார், அந்தப் பாடத்தில் சேர்ந்து படிக்க வேண்டுமானால் அதற்கு 'ஸ்பெஷல் ஃபீஸ்' கட்ட வேண்டும். அதற்கு என்னிடம் பணமில்லை'' என்று கூறிவிட்டு, நான் என்னென்ன கஷ்டங்கள்பட்டு பணம் திரட்டினேன் என்பதை அவரிடம் கூறினேன். அதைக் கேட்டு நெகிழ்ந்துபோன அவர், ''உனக்கு எந்த பிரிவில் இடம் வேண்டுமோ சொல், தருகிறேன்'' என்றார். 'ஹ்யூமானிட்டீஸ்' (Humanities) என ஒரு பிரிவு இருந்தது; அதில் இடம் தருமாறு நான் கேட்டேன். அதில் எனக்கு 'அட்மிஷன்' கிடைத்தது. இப்படியாக நான் கல்லூரியில் சேர்ந்தேன்.

◇ ***எத்தனை ஆண்டுகள் நீங்கள் நீதிபதியாக இருந்தீர்கள்?***

உயர்நீதி மன்றத்தில் ஏழு ஆண்டுகள், உச்சநீதி மன்றத்தில் எட்டு ஆண்டுகள். பொதுவாக, உயர்நீதி மன்றத்திலிருந்து உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் போக வேண்டுமென்றால், பதினைந்து முதல் பதினெட்டு ஆண்டுகள் ஆகும். ஆனால், நான் ஏழே ஆண்டுகளில் உச்ச நீதிமன்ற நீதிபதியாகும் வாய்ப்பைப் பெற்றேன்.

◇ ***நீங்கள் மிக முக்கியமான பல தீர்ப்புகளை வழங்கியிருக்கிறீர்கள். அவற்றுள் சிலவற்றைப் பற்றி சொல்ல முடியுமா?***

நான் எல்லா வழக்குகளிலுமே நேரடியாக நீதி மன்றத்தில் தீர்ப்பை 'டிக்டேட்' செய்வேன். நான் ஒரு போதும் எனது சிந்தனையிலோ, வார்த்தைகளிலோ குழப்பமடைந்தது கிடையாது. என்னுடன் அமர்ந்து வழக்கை விசாரிக்கும் நீதிபதிகள், தீர்ப்பை ஒத்திவைத்து வழக்கை மீண்டும் பரிசீலிக்கலாமென ஆலோசனை சொன்னால், அந்த வழக்கில் தீர்ப்பு வழங்கும் பொறுப்பை அவர்களிடமே விட்டுவிடுவேன்.

''எனக்கு என் மீது நம்பிக்கை உண்டு. எனவே, மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவை எனக்கு கிடையாது'' என கூறிவிடுவேன். இது என் மீது சக நீதிபதிகளுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியது. எந்த வழக்கிலும் நான் குழம்பியதில்லை. அது போலவே எந்தவொரு வழக்கு குறித்தும் நீதி மன்றத்துக்கு அப்பால் பேசியதுமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

நான் நீதிமன்றத்துக்கு அப்பாலுள்ள தளங்களில் என் கருத்தை வெளிப்படுத்தினால், அந்தப் பிரச்சனை குறித்து தீர்ப்பு வழங்கும் தகுதி எனக்கு இல்லாமல் போய் விடுகிறது. அதுமட்டுமின்றி ''இவர் ஏற்கனவே இந்தமாதிரியான விஷயங்களில் முன் முடிவுகளோடு இருப்பவர்'' என்ற எண்ணத்தை மக்களிடம் உண்டாக்குவது சரியல்ல. என் கருத்துகளை நான் என் தீர்ப்புகளில் வெளிப்படுத்தினேன்.

நீதி மன்றங்களுக்கு வந்த எந்தவொரு பிரச்சனை பற்றியும் நான் நீதிமன்றத்துக்கு அப்பால் பேசியதே இல்லை. இட ஒதுக்கீடு விஷயத்திலும் அப்படித்தான் இருந்தேன். அதைப் பார்த்து எனது சக நீதிபதிகள் பாராட்டினார்கள். அவர்கள் தீர்ப்பு வழங்கும்போது தவறுகள் இருந்தால், அதைத் தவறு என்று சுட்டிக் காட்டுவதை விடவும், இப்படியான விஷயங்களை அதில் சேர்க்கலாம் எனக் குறிப்பிடுவேன். அவர்களும் ஏற்றுக் கொள்வார்கள்.



**◇ சமீபகாலமாக, உச்ச நீதி மன்றம் வழங்கிவரும் தீர்ப்புகள் யாவும் - பொது மக்களின் நலனுக்குப் புறம்பானவையாகவே அமைந்துள்ளன. நர்மதாவில் அணை கட்டுவது பற்றிய தீர்ப்பிலும், குடிசைகளை அப்புறப்படுத்துவது பற்றியும் சிறு தொழிற்சாலைகளை அகற்றுவது தொடர்பான தீர்ப்புகளிலும் இந்தப் போக்கு வெளிப்படுகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

அது, நீதிபதிகளின் பார்வையைப் பொறுத்து அமைகிறது. ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கும்போது, அவர் சமூக அக்கறையோடு செயல்பட வேண்டும். நீதிபதிகள், நீதிசான்றோர்கள் (Judicial Statesmen) என்பது என் கருத்து. அப்படி அவர்கள் செயல்படும் போது தான் - மக்களின் நன்மைக்கு உதவும் விதத்தில் அரசியலமைப்புச் சட்டத்தை அர்த்தப்படுத்த முடியும். ஆனால், இது அந்தந்த நீதிபதிகளைப் பொறுத்த விஷயமாகும்.

பொதுவாக, ஓய்வு பெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பே வழக்குகளை விசாரிப்பதை நீதிபதிகள் நிறுத்திக் கொள்வார்கள். ஆனால், நான் ஓய்வு பெற்ற கடைசி தினத்தில் கூட, 35 பக்கங்கள் கொண்ட ஒரு தீர்ப்பை வழங்கிவிட்டுத்தான் வந்தேன்.

ஒரு சாதனையை செய்ய வேண்டுமென்று நினைத்து நான் தீர்ப்புகளை வழங்கியதில்லை. ஆனால், அந்தத் தீர்ப்புகள் ஒரு சாதனையாக மாறின. கடந்த அய்ம்பது ஆண்டுகளில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் எவரும் - நான் வழங்கிய அளவு தீர்ப்புகள் வழங்கியதில்லை. இதற்கு முன் நீதிபதி ஜே.சி.ஷா., உச்ச நீதி மன்றத்தில் நீதிபதியாக பதினொரு ஆண்டுகள் பதவி வகித்து 1867 தீர்ப்புகள் வழங்கியிருந்தார். அதுதான் சாதனையாகக் கருதப்பட்டது. ஆனால், நான் வழங்கிய தீர்ப்புகள் 2227. எனது எட்டு ஆண்டுகால பதவியில் நான் வழங்கியது இது. தற்போதுள்ள சாதனையும் நான் உருவாக்கியதுதான். அது மட்டுமின்றி, ஒரே ஆண்டில் 710 தீர்ப்புகளை நான் வழங்கியிருக்கிறேன். அது இந்தியாவில் மட்டுமல்ல, உலக சாதனையுமாகும். உலகில் எந்த ஒரு நாட்டிலும் இந்த சாதனை எட்டப்பட்டதில்லை.

**◇ இது, உலகமயமாதல், தனியார் மயமாதல் பற்றிய பேச்சுகள் உலவுகிற காலம். இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் தனியார் மயமாக்குவதை எதிர்க்கக் கூடிய சரத்துகள் உள்ளனவா?**

தனியார் மயமாக்கல் என்பது முக்கியமான பெரிய பிரச்சனை. என் தனிப்பட்ட கருத்து என்னவென்றால், பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாரிடம் ஒப்படைப்பது, அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கங்களுக்கும் அதன் வழிகாட்டு நெறிகளுக்கும் எதிரானதாகும். அது மட்டுமின்றி, அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 38 மற்றும் 39 ஆகியவற்றுக்கும் எதிரானதாகும். தனியார் மயமாக்குவதென்பது, முழுக்க முழுக்க அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானதாகும். இதை நான் பல இடங்களிலும் கூறி வருகிறேன்.

**◇ சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான வன்முறை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. 'தேசிய மனித உரிமை ஆணைய'த்தின் உறுப்பினர் என்ற முறையில் - இந்த சமூக வன்முறையைத் தடுக்க நீங்கள் கூறும் வழி என்ன?**

ஒருவர் என்னமாதிரியான மனநிலை கொண்டவராக இருக்கிறார் என்பதே அடிப்படையான விஷயமாகும். காவல் துறை சீர்திருத்தப்பட வேண்டும். அவர்களுக்கு மனித உரிமைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அவர்கள் தங்களது கடமையைச் செய்யும்போது, மனித உரிமைகள் பற்றிய புரிதலோடு செயல்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் அடிப்படையாக மனநிலை மாற வேண்டும். சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் இந்த நாட்டை நிர்வகிப்பதில் பங்கிருக்க வேண்டும்.

ஏழை மக்கள் தங்கள் உரிமையை எடுத்துக் கொள்ளும்போது, அதை மற்றவர்களின் உரிமைக்கு எதிரானதாகப் பார்க்கக் கூடாது. அவர்களுக்குரிய உரிமையை அவர்கள் வெளிப்படுத்தும்போது, அதை பகை முரண்பாடாகப் பார்ப்பது சரியல்ல. சமூகத்தின் எல்லா தரப்பினரும் இணக்கமாக வாழ்வதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுத்தர முன்வந்தால், பெரும்பாலான பிரச்சனைகள் தீர்ந்துவிடும். இந்த வகையான சமரசத்தைத்தான் ஜனநாயகம் வலியுறுத்துகிறது.

நாம் எல்லாவற்றையும் எதிரெதிராகப் பார்த்தால், மோதலும் வன்முறையும்தான் ஏற்படும். எனவேதான், மக்களிடம் மனித உரிமைக் கல்வியைப் பரவலாக்க வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன்.

**◇ அம்பேத்கரின் மாணவராகிய நீங்கள் தலித் மக்களுக்கு கூறும் செய்தி என்ன?**

தன்னம்பிக்கையோடு இருங்கள் என்பதுதான் நான் வழங்கும் செய்தி. இடஒதுக்கீட்டைச் சார்ந்திருக்காதீர்கள். உங்களை ''ஒதுக்கீடு செய்யப்பட்ட நபராக'' கருதிக் கொள்ளாதீர்கள். நான் அதைத்தான் கடைப்பிடித்தேன். நான் இட ஒதுக்கீட்டை எதிர்பார்த்ததில்லை. வகுப்பறைகளிலும் கூட உழைத்துதான் முதல் இடத்தைப் பிடித்தேன். இட ஒதுக்கீட்டில் வந்தவனாக ஒரு போதும் என்னை நான் கருதியதில்லை. தன்னம்பிக்கையே அடிப்படையான விஷயம். சுயக் கட்டுப்பாடும், மேலும் மேலும் முன்னேறிச் செல்லவேண்டும் என்கிற வேகமும் முக்கியம்.

உங்கள் சகோதரர்களை சமமாகப் பாவியுங்கள். அது மிகவும் முக்கியம். தன்னம்பிக்கையோடு உழைத்தால் நிச்சயம் வெற்றி பெறலாம். இப்போதும் கூட நான் 18 மணி நேரம் உழைக்கிறேன். உழைப்பு உழைப்பு உழைப்பு. அது ஒன்றுதான் நமக்கு உதவக் கூடியது. மனக்கட்டுப்பாடு, ஒழுக்கம், நேர்மை இவையே அவசியம். வாய்ப்புகளைப் பறித்தெடுங்கள். வாய்ப்பு உங்களைத் தேடி வராது. நீங்கள்தான் அதை அடைய வேண்டும்.

பாபாசாகேப் அம்பேத்கர் வழிநின்று என் மக்களுக்கு நான் கூறுவது இதுதான் "நிமிர்ந்து நில்லுங்கள்; கடுமையாக உழையுங்கள், வெற்றி பெறுங்கள்."



படிப்பகம்

www.padippakam.com


இந்தியாவில் முதல் முறை அறிமுகப்படுத்தும் பத்திரிக்கை
இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரே தமிழ் ஆங்கிலம் பத்திரிக்கை

இலங்கையில் புகழ் பெற்ற பத்திரிக்கை வெளியீட்டாளர்களின் 3 மொழிகளில் தினசரியும், வார பத்திரிக்கைகள் 15 மாத பத்திரிகைகளை வெளியிடுபவர்கள் குடும்பத்திலிருந்து



இலங்கையின் ஒரே தமிழ் மாத பத்திரிகை விலை ரூ. 30

கதைகள், கட்டுரை, புதுகவிதை, பேட்டிகள், புலனாய்வு பகுதி, சினிமா போட்டி, அறிவியல், அக்கரை சிரிப்பு, ஜோதிடம், பரிசு திட்டங்கள், பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி மற்றும் பல அம்சங்கள் நிறைந்த பரிசுத்திட்டங்களுடன் பல்சுவை மாத பத்திரிக்கை

இந்தியாவில் அறிமுக விலை ரூ. 15


Sri Lanka News
A WEEKLY DIGEST OF NEWS
Cabinet backs President on peace talks strategy
Chemicals to kill dengue mosquitoes from Cuba
Tamil parties welcome LTTE stance

The Associated Newspapers of Ceylon Limited
LAKE HOUSE, PUBLICAITONS.

1. SRILANKA NEWS
(DIGEST OF WEEKLY NEWS) ENGLISH
2. CURRENT AFFAIRS தமிழ் & ஆங்கிலம்
3. SUNDAY OBSERVER ENGLISH WEEKLY
4. FERGUSON'S SRI LANKA DIRECTORY, OBSERVER PICTORIAL. ANCL APPOINMENT DIARY.
5. தினகரன் செந்தூரம் வாரமஞ்சரி

பக்கத்துப்பக்கம் வண்ணமயம்
பயனுள்ள பகுதிகள்
பார்க்கமட்டுமா பாதுகாக்க வேண்டிய பகுதிகள்
பல அம்சங்களுடன் விற்பனைக்கு வருகிறது.

உங்கள் ஊரில் ஏஜெண்டுகள் தேவை

ஏஜென்சி பெற விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

Distributors
SIGN ASIA INTERNATIONAL
894, TVS Nagar 3rd Street, Maharajah Nagar (Post)
Tirunelveli-627 011. INDIA.
Fax : 0091-462-578893, Email : singarsmiles@usa.net


படிப்பகம்

www.padippakam.com



# முதலமைச்சரின் ஆணைக்கு எதிராக செயல்படும் திருச்சி மாநகராட்சி

சமத்துவ புரங்களை ஓரளவுக்கு மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால், அது கூட அரசு செயற்கையாக உருவாக்கும் பகுதிகளில் மட்டும்தான். மக்கள் இயல்பாக வாழும் பகுதிகளில், வேறு சாதியினர் வாழ முயன்றால், கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு, மணல்மேடு.



திருச்சியில் உள்ள கோயில் சுற்றுச் சுவர் அக்கிரகாரத்தில், பார்ப்பனர்கள் குடியிருப்பதைத் தான் காண முடியும். வடக்கு மாட வீதி, கிழக்கு மாட வீதி தெற்கு ஆவணி மூலவீதி, வடக்கு மூல வீதி என பெயர்கள் சூட்டிக் கொண்டு பார்ப்பனர்கள்குடியிருந்து வருவது, எல்லோரும் அறிந்த செய்திதான்.

ஆனால், திருச்சியில் இருந்து திருவானைக்கோயில் செல்லும் சாலையில் உள்ள மணல் மேட்டில் புகழ் பெற்ற கோயில் சுற்றுச் சுவர் 5ஆம் பிரகாரத்தில், 50 ஆண்டுகளுக்கும் மேலாக, தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருந்து வருகின்றார்கள். இவர்கள் குடியிருக்கும் வீட்டுக்கு வரி மற்றும் மின் இணைப்புகளும் பெற்றிருக்கிறார்கள்.

இதுநாள் வரை அமைதியாக இருந்த மாநகராட்சி, தற்போது ஆதிக்க சாதி வெறியர்களின் துணையோடு - அந்த தலித் குடியிருப்புகளை அகற்றப் போவதாக நோட்டீஸ் வழங்கியிருக்கிறது. இந்த குடியிருப்பு மனைகளுக்குப் பட்டா கேட்டு, பலமுறை போராட்டம் நடத்தியும் வழக்கமான மெத்தனத்தைக் காட்டுகிறது அரசு நிர்வாகம்.

இது குறித்து தி.மு.க. எம்.எல்.ஏ. மாயவன்கூறியும் எவரும்கண்டுகொள்ளவே இல்லை. முதல்வர், தமிழகம் முழுவதும் தலித் குடியிருப்புகளுக்கு உடைமை பட்டா வழங்க ஆணை பிறப்பித்தும், அதைதிருச்சி மாநகராட்சி அலட்சியப் படுத்திக் கொண்டுதான் இருக்கிறது.

'அக்கிரகாரங்களில், பார்ப்பனர்கள் இருந்தால் நாங்கள் இடிக்கச் சொல்ல மாட்டோம். தலித் மக்கள் அங்கு இருப்பதால்தான் அப்புறப்படுத்தச் சொல்கிறோம்' என்றுகூறி ஆதிக்க சாதியினருக்குத் துணை போகும் நகராட்சி கமிஷனர் முத்து வீரன் மீது மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர்.

> ***"'அக்கிரகாரங்களில், பார்ப்பனர்கள் இருந்தால் நாங்கள் இடிக்கச் சொல்ல மாட்டோம். தலித் மக்கள் அங்கு இருப்பதால்தான் அப்புறப்படுத்தச் சொல்கிறோம்' என்றுகூறி ஆதிக்க சாதியினருக்குத் துணை போகும் நகராட்சி கமிஷனர் முத்து வீரன் மீது மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர்."***

இது குறித்து அங்கு நீண்ட நாட்களாக வசித்து வரும் சமூக ஆர்வலர் திரு.ஏ. ராஜேந்திரனிடம் கேட்டபோது, "நாங்கள் (40 குடும்பங்கள்) கடந்த 50 ஆண்டுகளாக திருவானைக்காவல் பகுதி மணல்மேடு 5ஆம் பிரகாரத்தில் வசித்து வருகிறோம். குடியிருப்பு பட்டா கேட்டு பலமுறை மனு செய்து போராட்டம் நடத்தியும் இதுவரை பட்டா வழங்கவில்லை."

இக்குடியிருப்பில் வசிக்கும் பெயர் வெளியிட விரும்பாத மற்றொருவர், "நாங்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள். 50 ஆண்டுகளாக வசித்து வருகிறோம். சாலைக்கும் ஊருக்கும் எங்களால் எந்தவித தொல்லையும் இல்லை. ஆனால், அனைவரும் எங்களுக்கு கஷ்டத்தை கொடுக்கின்றனர். பிழைக்கும் தொழிலை செய்ய வேண்டாம் எனக் கூறுகின்றனர். வீட்டை காலி செய்ய வேண்டும் என தொல்லை தருகின்றனர். 50 ஆண்டுகளாக குடியிருக்கும் நாங்கள் வீட்டை விட்டு எங்கே செல்வது?" என்று கேட்கிறார்.

மக்கள் இயல்பாக வாழும் இடங்களில் சமத்துவபுரங்கள் உருவாகாத வரை, அரசு உருவாக்கும் செயற்கையான சமத்துவ புரங்களால் என்ன பயன் இருக்க முடியும்? ●

- ஆசூர் ராஜ்

# இப்படியும் அரசு மருந்தகங்களா?

திமு.க. அரசின் வாழ்வொளித்திட்டத்தால், பல ஏழை குழந்தைகளுக்கு வாந்தி, பேதி ஏற்பட்டுள்ளது. காலாவதியான மாத்திரை, மருந்துகளை குழந்தைகளுக்கு கொடுத்ததினால்தான், இத்தகைய கொடுமை நிகழ்ந்திருக்கிறது.

தூத்துக்குடி மாவட்டம் - கீழ் நாலுமூலைக்கிணறு முருகன் குறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக் கூட குழந்தைகளுக்கு, பிச்சிவிளை ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவக் குழுவினர், "வாழ்வொளித் திட்டத்தின்" கீழ் மருத்துவ பரிசோதனை செய்து மாத்திரைகள் கொடுத்தனர். இதை சாப்பிட்ட 55 குழந்தைகள் வாந்தி எடுத்து மயக்கமடைந்து - திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்கள்.

மீண்டும் 5.1.2001இல் நடுநாலுமூலைக்கிணறு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி குழந்தைகளுக்கு 'வாழ்வொளித் திட்டத்தின்' கீழ் பிச்சிவிளை ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ குழுவினர் பரிசோதனை செய்து ஊசி போட்டு மாத்திரை கொடுத்தார்கள். இதில் 14 குழந்தைகள் வாந்தி, மயக்கமடைந்து, திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார்கள். முதலில் அரசு, மாத்திரையின் தரத்தை பரிசோதனை செய்ய வேண்டும் அரசு மருத்துவ மனையில் காலாவதியான மாத்திரைகள் ஏன் வைத்திருந்தார்கள் என்பதைக் கண்டறிந்து, இதற்கு பொறுப்பான மாவட்ட சுகாதாரத் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ●

- ரா.சி. பாலசுப்பிரமணியன்



படிப்பகம்

www.padippakam.com



## போராட்டத்திற்கு வெற்றி




டாக்டர் அம்பேத்கர் நினைவுப் பூங்கா - தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு எதிரே உள்ளது. இதை 1962ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் கக்கன் திறந்து வைத்துள்ளார். அம்பேத்கர் பூங்காவில் காமராஜர் சிலை 11.8.1979 அன்று வைக்கப்பட்டது. ஆனால், டாக்டர் அம்பேத்கர் நினைவுப் பூங்கா பெயர்ப் பலகையை பூங்காவில் வைப்பதற்கு நிர்வாகத்தினர் மறுத்து வந்துள்ளனர். திருச்செந்தூர் பகுதியில் உள்ள தலித் மக்கள் சார்பாக பெயர்ப் பலகையை வைக்கப் போவதாக 'தலித் ஒருங்கிணைப்பு' அறிவித்தது. இந்த அறிவிப்பையொட்டி, தலித் இளைஞர்கள் ஒன்று கூடி பெயர்ப் பலகையைத் திறந்தனர்.

– பி. ஜெய்குமார்


# Religion as Emancipatory Identity

**A Buddhist Movement among the Tamils under Colonialism**

**• G. ALOYSIUS •**



பக்கம் : 270 விலை ரூ. 200/-
( அஞ்சல் செலவு தனி )

கிடைக்குமிடம் :

தலித் முரசு
ஈ - 21, தமிழ் நாடு வீட்டு
வசதி வாரியக் குடியிருப்பு
அண்ணா முதன்மைச் சாலை
கே.கே. நகர். சென்னை - 78


## "அரசாணை 44அய் நடைமுறைப்படுத்து"

### ஆதித் தமிழர் விடுதலை இயக்கம் கண்டன ஆர்ப்பாட்டம்

'ஆதித் தமிழர் விடுதலை இயக்க'த்தின் சார்பில், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் மத்திய மாநில அரசுகளையும், காவல் துறையினரின் மனித உரிமை



மீறல்களைக் கண்டித்தும், பிப்ரவரி 2அன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில அமைப்பாளர் அ. வினோத் தலைமையில் நடைபெற்ற இப்போராட்டத்தில் வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகள்:

• *தாழ்த்தப்பட்டோருக்கான நேரடி பணி நியமனம் தொடர்பான அரசாணை 44அய் மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும்.*

• *தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.*

• *மனித உரிமைகளுக்காகப் போராடும் மனித உரிமைக் காவலர்கள் மீது, பொய் வழக்குப் போடுவதை தடை செய்ய வேண்டும்.*

• *சாதி ஆதிக்க உணர்வோடு செயல்படும் அரசு அதிகாரிகள் மற்றும் காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

• *திருவள்ளூர் மாவட்டம் மற்றும் தமிழ்கமெங்கும் பொய் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள மனித உரிமைக் காவலர்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் அமைப்புத் தொண்டர்களை, உடனே விடுதலைசெய்ய வேண்டும். பொய் வழக்குகளை திரும்பப் பெற வேண்டும்.*

• *தமிழகமெங்கும் பெருகிவரும் கள்ளச்சாராயம், ஆபாச சுவரொட்டிகள், ஒரு நம்பர் லாட்டரி போன்ற சமூகத்தை சீரழிக்கும் செயல்களைத் தடுக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், 'சாதி ஒழிப்பு அய்க்கிய முன்னணி'யின் உறுப்பு அமைப்புகளான - 'தியாகி இமானுவேல் பேரவை', 'தமிழக மனித உரிமைக் கழகம்', 'அம்பேத்கர் பேரவை' 'இந்தியக் குடியரசுக் கட்சி', 'விடுதலை இயக்கம்', 'த.மா.லெ' கட்சி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் கலந்து கொண்டன. இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆதித்தமிழர் விடுதலை இயக்கத்தின் திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் கா. ஆனந்தன், து.செ. சுந்தரராசன் மற்றும் இளம்பரிதி, செயன், ரமேஷ் பாபு ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

கோரிக்கை ஆர்ப்பாட்டத்தின் முடிவில் பொன்னேரி கோட்டாட்சியரை சந்தித்து, கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இப்போராட்டத்தில், 1000க்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டு, எழுச்சி முழக்கமிட்டனர். •



படிப்பகம்

www.padippakam.com

## ம ட ல் க ள்




◇ அம்பேத்கர் சொன்னதுபோல், தலித் மக்கள் இந்து மதத்தைவிட்டு என்றைக்கு வெளியேறுகின்றார்களோ - அன்றுதான் சம உரிமை கிடைக்கும். அதே போல, திராவிட இயக்கங்களை விட்டு என்றைக்கு வெளியேறி தலித் இயக்கங்களில் ஆர்வமுடன் பணியாற்றுகின்றோமோ, அன்றுதான் நமக்கு விடுதலை கிடைக்கும்.

- பி.ஜே. அகஸ்தியன், புதூர்

◇ 'பாரதி'ய ஜனதா பார்ட்டி' தொடரட்டும் அல்லது அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிடுங்கள். பூகம்பம் பற்றிய மதிமாறனின் கருத்தும் மிகத் தெளிந்த பார்வையோடு இருந்தது. பாராட்டுகள்.

- சா. ஜோதிமணி, குருபரப்பள்ளி

■ 'தலித் முரசி'ன் இன்றைய பரிமாணம் சிறப்பாய் உள்ளது. குக்கிராமங்களில் தலித் மக்களுக்கு எதிராய் நிகழும் வன்கொடுமை தொடங்கி, உலகமயமாதல் வரை - எல்லாவித பிரச்சினைகளையும் அணுகும், விவாதிக்கும் பாங்கு இதழின் வீரியமிகு அடையாளத்தை தக்கவைத்துக் கொள்கிறது.

- எச். ஜி. ரசூல், தக்கலை

■ தமிழகத்தில் மிகக் கடுமையான வன்கொடுமைகளுக்கு ஆளாகும் அருந்ததியர்கள் பற்றிய செய்திகளை வெளியிட்டதற்கு நன்றி. மனித நேய முள்ளவர்கள், இனியாவது அருந்ததியர் பக்கம் திரும்பினால், இச்சமூகம் முன்னேறும்.

- மா. பத்திரன், கோவை

■ முதல் முதலில் தலித் முரசைப் பார்த்தேன் - படித்தேன். அட! நம்ம சமூகத்திற்கும் ஓர் இதழா என வியந்தேன். பக்கத்திற்குப் பக்கம் பயனுள்ள செய்திகள். இதழ் வடிவமைப்பு சிறப்பாக இருக்கிறது. வாழ்த்துகள்.

- ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை

■ பிப்ரவரி இதழில், மங்காத சுடர்போல ஒரு கவிதை. யார் அந்த ஞானப்பறை? நான் மானசீகமாகக் கை குலுக்குகிறேன், அந்தக் கவிஞனுடன். புரியாத தளத்தில் - புரியாதிருப்பதே கவிதை எனும் மாய வலை படர்வதும் உலகமயமாக்கலுக்கு நடைபாவாடை விரிக்கும். ஆனால், கல்லாதவனும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் இருந்தது அக்கவிதை. இந்த இதழின் ஒவ்வொரு பக்கமும் - போர்ப் பறையாக ஒலிப்பது இன்னொரு சிறப்பு.

- களந்தை பீர்முகம்மது, மதுரை

■ தலித் முரசு பிப்ரவரி இதழில், உலகமயமாக்கல் குறித்து என் கருத்தை வெளியிட்டுள்ளீர்கள். மிக்க மகிழ்ச்சி. ஒரு பிழையைத் திருத்துவதற்காகவே இம்மடல். ''இந்த நிலையில், முதலாளி வர்க்கம் உலகமயமாக்கலை ஏறத்தாழ கைவிட்டு விட்டது'' என்று நான் கூறியதாக வந்துள்ளது. இது தவறு. ''இந்த நிலையில் முதலாளி வர்க்கம் உலகமயமாக்கலுக்கான எதிர்ப்பை ஏறத்தாழ கைவிட்டு விட்டது'' என்று இருக்க வேண்டும்.

- தியாகு, பொதுச் செயலாளர், தமிழ் தமிழர் இயக்கம்.

■ வெறும் கருத்தியல் ரீதியாக மட்டும் இருந்தால், தலித் இனம் மேம்பட்டு விடுமா? அம்பேத்கர், பெரியார் பக்கங்கள் இதழுக்குப் பெருமை சேர்க்கின்றன. பிப்ரவரி இதழில் கவுதம் சன்னா பணி மகத்தானது. பூவிழியன், தமிழக அரசுக்கு சூடு போட்டால் உரைக்காது என்பதற்காக 'கரன்ட் ஷாக்' கொடுத்திருக்கிறார்.

- கவி சங்கர், சேத்துவண்டைகிராமம்

### வரலாற்றுப் பதிவு

◇ தமிழ்ச் சமூகப் பெரியோர்களின் படங்களையும் குறிப்புகளையும், அட்டைப் படத்திலும் உள்பக்கங்களிலும் வெளியிட்டு, தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அருமையானதொரு வரலாற்றுப் பதிவை உருவாக்கி இருந்தீர்கள். சிவசண்முகம் பிள்ளை, முனுசாமிப்பிள்ளை ஆகியோர் விடுபட்டிருந்தனர். மேலும், மறைக்கப்பட்ட தலைவர்கள் பற்றிய ஒவ்வொரு குறிப்பும் மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் இருந்தது. இதேபோன்று, மக்களுக்கு நல்ல விழிப்புணர்வை உண்டாக்கும் உத்திகளைக் கையாள வேண்டுகிறேன்.

இந்நிலையில், நான் நேரில் கண்ட ஒரு நிகழ்வை குறிப்பிட்டே ஆக வேண்டும். 1945இல் கோவையில் அம்பேத்கர் முன்னிலையில், ஒருவர் நெருப்புப் பொறி பறக்க பேசினார். மிக மெலிந்த உருவமானாலும் - வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஆணித்தரமாக இருந்தன. அவர்தான் அன்னை மீனாம்பாள்.

ஸ்டீபன் எழுதியிருக்கும் 'உலகமயமாக்கல் - இட ஒதுக்கீடு இனி இல்லை', ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்து மக்களும் படித்து, இந்த ஆபத்திலிருந்து மீள்வது எப்படி என்று ஆழ்ந்து சிந்தித்து செயல்பட வேண்டும். ■

- டாக்டர் கே. சுந்தரேசன், கோவை

■ எனது பேட்டியினை 'தலித் முரசு' சனவரி இதழில் வெளியிட்டிருந்தீர்கள். நன்றி. ஆனால், எனது பேட்டி முழுமையாக வெளியிடப்படாத காரணத்தினால், சிலரால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டது. தமிழ்த் தேசியம் என்பது, அனைவரையும் உள்ளடக்கியதாகத்தான் இருக்க முடியும். மதத்தில் நம்பிக்கை கொண்டவர்கள், மதத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் அனைவரும் ஒன்றுபட்டுதான் - ஒரு தேசிய இயக்கத்தைக் கட்டிக் காக்க முடியும்.

அதைப்போல, தாமிரபரணி படுகொலை பற்றி டாக்டர் கிருஷ்ணசாமி அனைத்துக் கட்சிக் கூட்டத்தினைக் கூட்டி இருக்க வேண்டும் என்று நான் கூறியபோது, அதற்கான காரணங்களையும் விளக்கிக் கூறியிருந்தேன். டாக்டர் கிருஷ்ணசாமி இந்தப் பிரச்சினைக்காகத் தொடர்ந்து போராடி வருபவர்.

ஆனால், இப்பிரச்சினையில் நானோ இன்னொரு கட்சியைச் சேர்ந்தவரோ அனைத்துக் கட்சிக் கூட்டத்தினைக் கூட்டுவது என்பது, பிறரால் தவறாகப் புரிந்து கொள்ளப்படும். நாங்கள் திடீர் என்று இந்தப் பிரச்சினையில் நுழைந்து அரசியல் ஆதாயம் தேட முற்படுவதாகக் குற்றச்சாட்டு கூறப்படலாம். எனவேதான், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களே இந்தக் கூட்டத்தினைக் கூட்டினால் நாங்களும் கலந்துகொண்டு - அவருடன் தோளோடு தோள் நின்று போராடியிருப்போம் என்று, நான் விரிவாக எடுத்துக் கூறினேனே தவிர, அவரவர் பிரச்சினையை அவரவர் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் அல்ல.

- பழ. நெடுமாறன், தலைவர், தமிழர் தேசிய இயக்கம்



படிப்பகம்

# 'இந்து' என்று சொல்கிறவனுக்கு பெண்ணுரிமை பேச அருகதை இல்லை

பெண்கள் சுதந்திர விஷயத்தில் எனக்கு மிக்க ஆவல் உண்டு. என்னுடைய இயக்கத்தில் அதற்கு நான் முக்கிய இடம் கொடுத்திருக்கிறேன். என்னுடைய அபிப்பிராயத்தில், ஓர் 'இந்து' என்பவன் - தன்னை ஓர் இந்து மதத்தவன் என்று சொல்லிக் கொண்டு, பெண்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று சொல்வதை ஒருக்காலும் ஒப்புக் கொள்ள முடியாது. ஏனென்றால், இந்து மதத்தில் பெண்களுக்குச் சுதந்திரம் இல்லை என்பதை நீங்கள் நன்றாய் உணர வேண்டும்.

பெண்களுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுக்கப் பிரியப்படுபவர்கள், அதற்குத் தடையாய் உள்ளதை எதிர்க்கவும் அழிக்கவும் துணிந்தவர்களாயிருந்தால்தான் - அவர்கள் உண்மையான சுதந்திரவாதிகள் ஆவார்களே தவிர, மற்றபடி தடைகளை ஆதரித்துக் கொண்டு சுதந்திரம் பேசுகிறவர்கள், தந்திரவாதிகளே ஆவார்கள் அல்லது மூடர்களே ஆவார்கள்.

இந்துப் புராணங்களையும் சாஸ்திரங்களையும் ஒப்புக் கொள்கிறவனும், உண்மையான சனாதன இந்துவென்று சொல்லிக் கொள்ளுகிற எவனுக்கும் - பெண்கள் சுதந்திரத்தைப் பற்றிப் பேச உரிமையில்லை என்பதுதான் எனது அபிப்பிராயம்.

இந்த விஷயத்தில் திராவிட தர்மமோ சமண தருமமோ எல்லாம் - ஒரேவித யோக்யதை கொண்டதே என்பது எனது அபிப்பிராயம். தெய்வத்தன்மை பொருந்தியவர் என்று சொல்லும் திருவள்ளுவர் என்பவர் கூடத் தம் பெண் சாதியை 'விபச்சாரியா' 'பதிவிரதையா' என்று பரீட்சித்துப் பார்க்க ஆசைப்பட்டு, மணலைச் சோறாகச் சமைக்கச் சொல்லி அந்த அம்மாளும் அதுபோலவே சமைத்துப் போட்ட பிறகே தான் கலியாணம் செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தப்படி பரீட்சை செய்து பார்த்தால், இன்றைய தினம் உலகத்தில் உள்ள பெண்கள் எல்லாம் - இங்கு இருக்கிற பெண்களெல்லாம் 'விபச்சாரி'களென்றுதான் நாம் தீர்மானிக்க வேண்டும்.

ஏனெனில், ஒரு சகோதரியாலும் மணலை அரிசிச்சாதமாக சமைக்கவோ, மழை பெய்யச் சொல்லவோ, பச்சை வாழைத்தண்டை கொண்டு சமையல் செய்யவோ முடியாதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. வேறு எந்த காரியத்துக்காகவும் இந்து மதத்தை ஒழிக்காமல் தாட்சண்யம் பார்ப்பதாயிருந்தாலும் - பெண்களுடைய சுதந்திரத்தை உத்தேசித்தாவது, இந்து மதமென்பது அழிய வேண்டியது மிக்க அவசியமாகும்.

உண்மையாகப் பெண்கள் விடுதலைக்கு மார்க்கம் கூட கண்டுபிடிக்கப்படவில்லை என்பது தான் எனது அபிப்பிராயம். பெண்கள் விடுதலைக்கு வெளியில் வருபவர்கள், பெண் சம்பந்தமான இந்துமத தர்மத்தையும் சாஸ்திரத்தையும் புராணத்தையும் இதிகாசத்தையும் ஒதுக்கி வைத்து விட்டுத்தான் வரவேண்டும்.



> "இந்து மத தர்மம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் போன்ற அழுக்கு மூட்டைகளைச் சுமந்து கொண்டு, யார் எங்கு போய் பெண்கள் சுதந்திரம் பேசினாலும் - அது கட்டுப்பாடுள்ள அடிமைப் பிரகாரமாகத் தான் முடியுமே தவிர, அது சிறிதும் விடுதலையை உண்டாக்காது. மேலும், பெண்களைப் படிக்க வைக்க வேண்டுமென்று சொல்லி, எழுத்து வாசனை உண்டாக்கி, அவர்கட்கு அரிச்சந்திர புராணத்தையும் நளாயினி கதையையும் ராமாயணத்தையும் படிக்க வைத்தால், அடிமைகள் ஆவார்களா? சுதந்திரமடைவார்களா?"

இவற்றை எல்லாம் விட கற்பு என்கின்ற ஒரு பெரிய கற்பாறை, அயோக்கியத்தனமாய் அவர்கள் தலைமீது வைக்கப்பட்டிருக்கின்ற வரையில், ஒரு நாளும் பெண் மக்களை - உலகம் முன்னேற்றமடையவோ, சுதந்திரமடையவோ, ஒருக்காலும் முடியவே முடியாது. கற்புக்கு லட்சணம் சொல்கிற போது, ஒரு பழமையான தமிழ் நூலில் காணப்படும் ஒரு வார்த்தை எவ்வளவு கடுமையான அடிமைத்தனத்தை மனதில் வைத்து உண்டாக்கப்பட்டதென்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

அதாவது யாராவது ஒரு புருஷன் ஒரு பெண்ணைப் பார்த்து அவளைத் தன் மனதில் நினைத்து விட்டானேயானால், அந்தப் பெண்ணுடைய கற்புக் கெட்டுப் போய்விட்டதாம். ஏனெனில், அந்தப் பெண் கற்புடையவளாயிருந்திருந்தால், மற்றொரு மனிதன் அவளை மனதில் நினைத்திருக்க முடியாதாம். எவ்வளவு (அ) நீதி என்பதை நினைத்துப் பாருங்கள்! அந்த நிர்பந்தமானாலும், எந்தக் கட்டுப்பாடானாலும் எந்த தருமமானாலும், ஆணுக்கும், பெண்ணுக்கும் இருவருக்கும் சமமாக இருப்பதானால் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ◇

*31.5.1930 அன்று கள்ளிக் கோட்டை மாநாட்டில் ஆற்றிய உரை.*

www.padippakam.com

YEZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No.: TN / Chief PMG-151 / Posted at Patrika Channel Egmore RMS / 1 Periodicals
Registered with the Registrar of Newspapers for India Under No. 71325 / 97 Licensed to Post without Prepayment Licence No. 47

# "நாங்கள் இந்துக்கள் அல்ல"

அண்ணல் அம்பேத்கர் பிறந்த ஏப்ரல் 14 அன்று
அண்ணலின் சிலை முன்பு,
"நாங்கள் இந்துக்கள் அல்ல - யாருக்கும் அடிமையும் அல்ல"
என்று பிரகடனப்படுத்திக் கொள்ளத்
தயாராகி விட்டீர்களா?



"தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துக்கள் அல்லாத போது. அவர்கள் ஏன் இந்து மதத்தைப் பின்பற்ற வேண்டும்? எனவே, தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து மதத்தை விட்டு வெளியேற வேண்டும். தீண்டத்தகாத சமூகம் தன்மானமுள்ள சமூகமாக வாழ - இந்து மதத்தை விட்டு வெளியேற வேண்டும்."

- அண்ணல் அம்பேத்கர்

"உங்கள் இழிவு நீங்கிச் சுயமரியாதை ஏற்பட்டு - மானவாழ்வு ஏற்படவும், உங்கள் பலவீனம் எல்லாம் ஒழியவும்தான் நான் இந்து மதத்திலிருந்து வெளியேறச் சொல்கிறேன். எனவே, இந்து மதத்திலிருந்து மானமுள்ள ஆதிதிராவிடனும், தமிழனும் வெறுத்து அதிலிருந்து விலக வேண்டும்."

- தந்தை பெரியார்

Owned and Published by **P. Chandragesan** from No. 6, 97th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078 and printed by G.P. Ramachandran at Thamizhmarai Achagam, 32, 3rd Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Editor : P. Chandragesan

படிப்பகம்